# ஞானம்

131

கலை இலக்கியச் சஞ்சிகை

ஏப்ரல் 2011

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011

நிழற்படங்கள்

## தூதர்கள்

(குறுநாவல்)

ஆசி கந்தராஜா



இலக்கிய உலகில் ஒரு பொக்கிசம்

கே. எஸ். சிவகுமாரன்

புலோலியூர்

க. சதாசிவம்

ஞாபகார்த்தச்

சிறுகதைப்போட்டி 2010ல்

முதற்பரிசு பெற்ற கதை

## கூடுகள் சிதைந்தபோது. . .

சா. அகிலேஸ்வரன் (அகில்)

விலை : ரூபா 65/=

www.gnanam.info

தரமான தங்க நகைகளுக்கு...

# NAGALINGAMS

*Jewellers*



**Designers and Manufacturers of 22KT Sovereign Gold Quality Jewellery**





101, Colombo Street, Kandy
Tel : 081 - 2232545

# CENTRAL ESSENCE SUPPLIERS

**SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS**

**Dealers in all Kinds of Food Essences, Food Colours, Food Chemicals, Cake Ingredients Etc.**

76 B, Kings Street, Kandy
Tel : 081-2224187, 081-2204480, 081-4471563

ஒளி – 11 சுடர் – 11

**பகிர்தலின் மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்**

ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

இணை ஆசிரியர் :
**ஞானம் ஞானசேகரன்**

ஓவியர் :
**கௌதமன்**

தலைமை அலுவலகம் :
**கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்**
**ஞானம் கிளை அலுவலகம்**
**3-B, 46ஆவது ஒழுங்கை,**
**கொழும்பு – 06.**
**தொலைபேசி : 011 –2586013**
**0777–306506**
**+61 02 80077270**
**தொலைநகல்: 011–2362862**
**E-mail : editor@gnanam.info**
**Web : www.gnanam.info**

**வெளிநாட்டு, உள்நாட்டு வங்கித் தொடர்புகள்:**
**Swift Code :- HBLILKLX**
**T. Gnanasekaran**
**Hatton National Bank - Wellawatte Branch**
**A/C No. 009010344631**

# இதழினுள்ளே ...

## கவிதைகள்


| | |
|---|---|
| நா. திருச்செந்தூரன் | 4 |
| தனங்கிளப்பு வ. சின்னப்பா | 9 |
| மட்டுவில் ஞானக்குமரன் | 17 |
| உ. நிசார் | 49 |
| வாகரைவாணன் | 52 |


## கட்டுரைகள்


| | |
|---|---|
| முருகபூபதி | 3 |
| சை. பீர்முகம்மது | 12 |
| பிரகலாத ஆனந்த் | 26 |
| கலாநிதி நா. சுப்பிரமணியன் | 31 |
| இரா. நாகலிங்கம் | 50 |


## சிறுகதைகள்


| | |
|---|---|
| அகில் | 5 |
| தெனகம சிறிவர்தன/ திக்குவல்லைகமால் | 15 |
| ஆசி கந்தராஜா (குறுநாவல்) | 18 |
| சுதர்மமகாராஜன் | 36 |
| கே. எஸ். சுதாகர் | 45 |
| வேல் அமுதன் | 46 |


## நூல் மதிப்புரை


| | |
|---|---|
| குறிஞ்சி நாடன் | 53 |


## சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்


| | |
|---|---|
| கே. பொன்னுத்துரை | 39 |


## பத்தி எழுத்து


| | |
|---|---|
| மானாமக்கீன் | 42 |
| கே. விஜயன் | 47 |


## வாசகர் பேசுகிறார் 55

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. - **ஆசிரியர்**

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

# பதினைந்தாவது அகவையில் தினக்குரல்

இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகைகளில் ஒன்றான தினக்குரல் தனது பதினைந்தாவது அகவையில் இம்மாதம் ஆறாம் திகதி காலடி எடுத்துவைக்கிறது என்ற செய்தி தமிழ்ப்பேசும் மக்கள் யாபேருக்கும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

1997 ஆம் ஆண்டு ஏப்ரல் ஆறாம் திகதி தினக்குரலின் முதல் இதழ் வெளியாகியது. இலங்கையில் இருவேறு நிறுவனங்களிலிருந்து இரு தேசிய தமிழ்ப்பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு தமிழ்ப்பத்திரிகை வெளிவரவேண்டும் என்ற நோக்குடன் மிகத்துணிவுடன் தினக்குரலை ஆரம்பித்தவர் திரு. எஸ். பி. சாமி அவர்கள்.

தமிழ்ச் சமூகம் பொருளாதாரத் தடைகள், இடப்பெயர்வுகள், இராணுவக் கெடுபிடிகள் போன்றவற்றால் அல்லலுற்றுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அவர்களது பிரச்சினைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு பத்திரிகையின் வருகை அப்போது அவசியமாக இருந்தது. தணிக்கை காரணமாக அக்காலகட்டத்தில் நாளிதழ்கள் சிலவற்றின் பயவுணர்வுகளால் வடபுலச் செய்திகள் கொழும்புவாழ் மக்களை வந்தடைவதில் தடைகள் இருந்தன. இனமேலாதிக்கம் தலைவிரித்தாடுவதை அன்றாடம் ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. ஆங்கில ஊடகங்கள் குறிப்பாகப் பத்திரிகைகள் மேலாதிக்கச் சிந்தனையிலேயே செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. இந்நிலையிலேதான் தினக்குரல் தோற்றம் பெற்றது.

தமிழ்பேசும் மக்களது ஒற்றுமை, அவர்களது பிரச்சினைபற்றிய விளக்கம், அவர்களது பாதுகாப்பு, அவர்களது வாழ்விடங்களில் அவர்கள் அமைதியாக வாழ்வதற்கான வழிவகைகள் போன்றவற்றை எய்துவதற்கான தெளிவையும் மனப்பாங்கையும் உருவாக்குவதில் தினக்குரல் தெளிந்த சிந்தனையோடு செயற்பட்டுவருகிறது. தமிழ்ப்பேசும் சமூகம், தமிழ்மொழி பாதுகாக்கப்படவேண்டும், தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற இலட்சியத்துடன் தினக்குரல் செயலாற்றிவந்திருக்கிறது.

தினக்குரலின் முக்கியத்துவம் தமிழ்பேசும் மக்கள் தொடர்பான செய்திகளை அவர்களது கண்ணோட்டத்தில் நின்று தெரிவித்து வருகின்றமையே ஆகும். இதன் காரணமாக காலத்தால் முந்திய மற்றைய தினசரிகளை விடவும் தினக்குரல் முன்னணிநிலையை இன்று எய்தியுள்ளது.

தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வொன்று காணப்படவேண்டும். தமிழ்பேசும் சிறுபான்மை மக்களது அரசியல் அபிலாசைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்பதை ஆரம்பகாலந்தொட்டே பல இக்கட்டான சூழ்நிலைகளிலும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் வலியுறுத்தும் ஒரு தமிழ்த்தேசிய நாளிதழாகத் தினக்குரல் தன்னை இணங்காட்டி வந்திருக்கிறது.

சமூகப் பொறுப்புடன் நேர்மை நியாயத்தின் பக்கம் நின்று சமூகத்துக்குப் பயனுள்ளவற்றை முதன்மைப் படுத்துவதும் செய்திகளை வெளியிடும்போது எவ்வித திரிபுமின்றி அதன் சமூகப்பயன்பற்றிய கணிப்புடன் செயற்படுவதும் சமுதாய வாழ்வுக்குத் தேவையான செய்திகளைத் தேர்வுசெய்து தருவதும் சமுதாயத்தின் வருங்கால வளத்துக்கான வழிகாட்டலும் தினக்குரலின் இயங்குதளமாக இருக்கிறது.

தினக்குரல் செய்திகளை மட்டும் தருவதோடு அமையாது பல்துறை அறிவையும் மக்களுக்கு வழங்கும் பணியையும் செய்துவருகிறது. இனப்பிரச்சினை பற்றிய கண்ணோட்டம், கல்வி, பொருளாதாரம், சமயம், இலக்கியம், கலாசாரம், கலைகள், சுற்றாடல் பாதுகாப்பு, அரசியல், வணிகம், உலகவிவகாரங்கள், சினிமா, பெண்களுக்கான பகுதி, சோதிடம், மருத்துவம், மலையகப்பார்வை போன்ற பலதரப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்குத் தேவையான விடயங்கள் தினக்குரலில் வெளிவருகின்றன.

கலை இலக்கியம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், கலை இலக்கியவாதிகளைக் கௌரவிப்பதும், மேன்மைப்படுத்துவதும் தினக்குரலின் இன்னுமொரு பணியாக அமைகிறது.

தினக்குரல் பதினைந்தாவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் இச்சந்தர்ப்பத்தில், அது மென்மேலும் வளர்ந்தோங்கி சிறப்புடன் மக்களுக்குச் சேவையாற்றவேண்டுமென 'ஞானம்' மனப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்கிறது.

அட்டைப்பட அதிதி

# இலக்கிய உலகில் ஒரு பொக்கிசம் கே. எஸ். சிவகுமாரன்



- முருகபூபதி

"சிவனுடைய குமாரன், கொழும்பில் முருகன் பிளேசில் நீண்ட காலமாக வசிக்கிறார். 1983 ஆடி அமளிக்குப் பின்பும் அந்த அமளியினால் கசப்பான அனுபவங்களையும் இழப்புகளையும் சந்தித்தபின்னரும் அங்கிருந்து ஓடிவிடாமல் இடம்பெயர்ந்து விடாமல் அங்கேயே வாழ்கிறார்" என்று ஒரு நண்பரிடம் சொன்னேன்.

அதற்கு அந்த நண்பர் "ஆமாம் சூரிய வீதியில் வாழ்ந்த நீர், கோடை காலத்தில் இரவு ஒன்பது மணிவரையில் சூரியவெளிச்சம் மறையாத நாட்டுக்கு ஓடிவிட்டீர். ஆனால் எங்கள்சிவகுமாரன் இன்றும் முருகன் பிளேசில்தான்" என்று சொன்னார்.

இலக்கிய உலகம் சார்ந்தவர்கள், கொழும்பில் பல ஆண்டுகாலமாக ஒரே இடத்தில் நிரந்தரமாக வசிப்பது அபூர்வம்தான். அத்துடன் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியாக இலக்கியப் பணியாற்றுபவர்களையும் இக்காலத்தில் காண்பது அபூர்வம்தான். தழும்பாத நிறைகுடமாக எம் மத்தியிலிருப்பவர் கே. எஸ். சிவகுமாரன்.

இதுவரையில் தமிழில் 22 நூல்களையும் ஆங்கிலத்தில் இரண்டு நூல்களையும் வரவாக்கிவிட்டு தொடர்ந்தும், அயராமல் ஆங்கில, தமிழ் இதழ்களில் எழுதிக் கொண்டிருக்கிறார். கே. எஸ். சிவகுமாரன், தங்கள் நூல்களைப் பற்றி ஆங்கில, தமிழ் ஊடகங்களில் சிற்றிதழ்களில் எழுதமாட்டாரா? என்று காத்திருக்கும் படைப்பிலக்கிய வாதிகளும் எம்மத்தியிலிருக்கிறார்கள்.

சிவகுமாரன் தன்னை ஒரு இலக்கிய விமர்சகன் என்று சொல்லிக்கொள்ள விரும்பாதவர். **இன்றும் தான் ஒரு திறனாய்வாளன்தான்** என்று அடக்கமாகச் சொல்லிக் கொள்ளும் இவர், சிறுகதை எழுத்தாளருமாவார். அத்துடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் கவிதைகளும் எழுதியிருக்கிறார். ஆயினும் ஒரு விமர்சகராக, திறனாய்வாளராக பத்தி எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராகத்தான் வெளியுலகிற்கு அறியப்பட்டிருக்கிறார்.

**இருமை, சிவகுமாரன் கதைகள்** ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் இதுவரையில் வெளியாகி யிருக்கின்றன. பெரும்பாலான இவரது கதைகள் உளவியல் சார்ந்திருக்கும். விரைவில் பவளவிழாக்காணவுள்ள கே. எஸ். பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கிலப்பட்டதாரி. தமது வாழ்நாளில் பெரும்பகுதியை இலக்கியத்திற்கும் ஊடகம் மற்றும் இதழியலுக்கும், மொழிபெயர்ப்பிற்கும் கல்வித்துறைக்கும் அர்ப்பணித்திருப்பவர். தன்னை எங்கும் எதிலும் முதனிலைப்படுத்திக் கொள்ள விரும்பாத அளவுக்கு அதிகமான தன்னடக்க இயல்பு கொண்டவர்.

விமர்சகர்கள் விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் ஆளாகும் இயல்பினர் என்பதனாலோ என்னவோ, தம்மை ஒரு திறனாய்வாளர் என்று சொல்லிக் கொள்வதில் அமைதிகாண்பவர். எவரையும் தமது எழுத்துக்களினால் காயப்படுத்தத் தெரியாதவர்.

ஒருவரது குணம் அவரது இயல்புகளிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது. அமைதியான சுபாவம், கலந்துரையாடல் களிலும் உரத்துப்பேச விரும்பாத இயல்பு மற்றவர்களின் கருத்துக்களை பொறுமையாக செவிமடுக்கும் குணம் முதலானவையே அவரது மிகச் சிறந்த பலம் என்று கருதுகின்றோம். அதனால்தான் இத்தனை காலம் இவரால் இங்கு தாக்குப் பிடிக்க முடிகின்றது.

இலங்கை வானொலி, த ஐலண்ட், வீரகேசரி முதலான ஊடகங்களிலும் பணியாற்றியவர். தற்போதும் டெயிலிநியூசில் இவரது பத்தி எழுத்துக்களை பார்க்கலாம். இலங்கை வங்கி உட்பட பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் இவர் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றியிருக்கிறார்.

இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தக சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் செய்திப் பிரிவில் துணை ஆசிரியராகவும் சேவையாற்றிய கே. எஸ். சிவகுமாரன் இலங்கையில் அமெரிக்கத்தூதரக தகவல் பிரிவிலும் சிறிதுகாலம் பணியாற்றியிருக்கிறார். நவமணி இதழின் ஸ்தாபக ஆசிரியரும் இவரே.

கொழும்பில் மூன்று சர்வதேசப் பாடசாலைகளிலும் அமெரிக்கா, மாலைதீவு, ஓமான் ஆகிய நாடுகளிலுள்ள பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு. இலங்கை திரைப்பட தணிக்கை அதிகாரியாகவும் கடமையாற்றியவர். சிறுகதை, திறனாய்வு, பத்தி எழுத்துக்களில் மாத்திரம் கவனம் செலுத்தியவர் அல்லர். சினிமா பற்றிய பிரக்ஞையுடனும் இயங்குபவர்.

அசையும் படிமங்கள், சினிமா ஒரு உலகவலம் ஆகிய இவரது நூல்கள் சினிமா பற்றியவை. இந்தியாவில் நடந்த பல சர்வதேச திரைப்பட விழாக்களிலும் பங்குபற்றியவர்.

இவர் இத்தனை அனுபவங்களுக்குப் பின்னரும், தாம் இன்னமும் இலக்கியத்தில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவன் தான் என்று மிகுந்த கூச்சத்துடன் சொல்லிக் கொள்கிறார். இதுவும் இவரது தன்னடக்கத்திற்கு ஒரு அடையாளம்.

சமீபத்தில் சிவகுமாரன் அவுஸ்திரேலியாவில் மெல்பனுக்கு வந்திருந்தார். அவருக்கு எமது சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பில் தேநீர் விருந்துபசாரம் வழங்கினோம். எமது ஒன்றியத்தின் வெளியீடான Being Alive (ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட அவுஸ்திரேலிய

தமிழ்ப்படைப்பாளிகளின் சிறுகதைகள்) நூலை இச்சந்திப்பில் அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.

மற்றவர்களின் படைப்புகளையும் அவர்தம் இலக்கியப் பணிகளையும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் தமது பத்திகளில் அறிமுகப்படுத்தும் சிவகுமாரன்தான் தமிழில் **பத்தி எழுத்து** என்னும் பிரயோகத்தை அறிமுகப் படுத்தியவர் என்ற தகவல் பலருக்குத் தெரியாது.

Thamil Writings in Sri Lanka, Aspects of Culture in Sri Lanka ஆகிய நூல்களிலும் தமிழில் எழுதியிருக்கும் ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள், நாவல் இலக்கியம் தொடர்பான நூல் உட்பட பல நூல்களிலும் எம்மவர்களின் படைப்புகளை திறனாய்வு செய்து அறிமுகப்படுத்தியிருக்கும் இவரது இயல்பு ஏனையவர்களுக்கு குறிப்பாக விமர்சகர்களுக்கு முன் மாதிரியானது.

ஒரு நூலைப் படித்தால் அது இவரைக் கவர்ந்து விட்டால் தாமதமின்றி ஆங்கிலத்திலோ தமிழிலோ அதனை அறிமுகப்படுத்தி ஏதேனும் இதழில் எழுதி விடுவார். அத்துடன் இலக்கிய உலகின் சமகால நிகழ்வுகளையும் இரண்டு மொழிகளிலும் தமது பத்திகளில் பதிவு செய்து விடுவார். வாழும் காலத்திலேயே பாராட்டி கொண்டாடப்பட வேண்டியவர் கே. எஸ். சிவகுமாரன். இவரை போல் பலர் எம்மத்தியில் தோன்ற வேண்டும். அல்லது உருவாக்கப்படல் வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் மிகப்பெரிய வெற்றிடங்கள் தோன்றலாம்.

இலக்கியத்தில் மொழிபெயர்ப்புத்துறை குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டிய காலத்தில் நாம் வாழ்கின்றோம். கணினி இன்று எமக்கு வரப்பிரசாதமாகியிருக்கும் சூழலில் சிவகுமாரனுக்கு எம்மவர்கள் உரிய மரியாதை வழங்கி நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவரது வாழ்நாள் உழைப்புக்கு மரியாதை செலுத்துவதன் மூலம் மானுடத்தின் மதிப்பீடுகளை உயர்த்த முடியும்.

---

## தீவாகிப் போனவன்

நா. தேசகுமாரன்
மன்னார்

*துயிலும் கணம் தாலாட்டு தோழருடன் விளையாட்டு*
*பயிலும் வரை பாராட்டு பாலனெனச் சீராட்டு - வண்ண*
*மயிலும் விரித்தாடவில்லை எனைப்போல் மகிழ்ந்து - குளிர்*
*வெயிலும் கொழுத்தேப் போனதென்காலம் நெகிழ்ந்து.*

*தினம்நாளும் எம்வீட்டில் திருநாட்கள் பெருமேளம்*
*இனம்ஏழும் இணைந்தேகப் பெருநாட்கள் கருவூலம்*
*வனம்வாழும் வன்விலங்குக் கூட்டமெல்லாம் கூடிவரும்*
*சினம்மூழும் தீயோடு மற்றெல்லாம் எமை நாடிவரும்.*

*கண்வைத்துக் கடனெடுத்தான் கடவுளில் நிலையாவும்*
*விண்வைத்து உடனுள்ளான் வேட்கையுடை இறைவனவன்*
*கண்தைக்கக் கதறுகிறேன் கண்ணீரிங்கு மழையாக - என்குரல்*
*விண்ணதிர ஒலிக்கிறது அசையவில்லை அவன் மலையாக*

*பொழுதோயக் காய்ந்துவிழும் மலராகிப் போனநிலை*
*விழுதாயச் சாய்ந்துவிழும் ஆலமரம் ஆனநிலை - உடன்*
*பழுதீயிற் பாய்ந்துவிழும் பற்றற்ற விரக்தி நிலை*
*எழுவாயிற் தோய்ந்து அழும் முற்றற்ற முனகல்நிலை.*

*நானாகிப் போனதெல்லாம் ஏகாந்தத் தனிமைநிலை*
*வீணாகிப் போனதின்று என்வாழ்வின் இனிமைநிலை*
*தானாகத் துளிரோடும் மரம்நீங்கப் பெற்ற இலை - இனி*
*நானாகப் பெறுவேனோ? தனிமை நீங்கப் பெற்றநிலை.*

*ஏகாந்தப் பொழுதறியா என்வாழ்க்கை ஏனின்று - சுடும்*
*தீகாந்தற் கொதிநீரில் தேள்விழுந்தாற் போலாச்சு*
*நிறைகலைகள் நான்கொண்டும் பேச்சற்ற நாவானேன் - ஏகாந்த*
*நுரையலைகள் வந்தடிக்க கரைநனையும் தீவானேன்.*

கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி 2010ல் முதற்பரிசு பெற்றகதை

# கூடுகள் சிதைந்தபோது...

அகில் கனடா



கோடை வெயில் தலையில நெருப்பை அள்ளிக் கொட்டினது மாதிரி ஒரே வெக்கை. காத்து மட்டும் அப்பப்ப வந்து உடம்பைத் தடவி குளிரப் பண்ணிப்போட்டு போகுது. வீட்டுக்குள்ள இருக்க எனக்கு அலுப்பா இருக்குது. அதுதான் இந்த பூங்காவில வந்து குந்தியிருக்கிறன். எவ்வளவு நேரம்தான் அந்த நாலு சுவரையும் பாத்துக்கொண்டிருக்கிறது...? என்ர கண்ணுக்கெட்டின தூரத்தில ரெண்டு, மூன்டு சின்னப் பிள்ளைகள் நின்று ஊஞ்சல் ஆடி விளையாடிக்கொண்டு இருக்கீனம். அந்த மரத்திற்கு கீழ சீனநாட்டுச் சோடி உட்கார்ந்திருக்கீனம். ஒவ்வொருநாளும் இந்த நேரத்திற்கு அவையள் இஞ்ச வந்துவிடுகீனம். பிள்ளையள் ரெண்டும் தூரத்தில விளையாடிக்கொண்டு இருக்குதுகள். அந்த வயதுபோன ஆப்கான் கிழவனும், மொட்டாக்குப்போட்ட அவன்ர மனுசியும் நடைப்பயிற்சி செய்துகொண்டு இருக்கீனம். என்ன சந்தோசமான வாழ்க்கை...? எல்லாரின்ட முகத்திலயும் சந்தோசமும், திருப்தியும்....!!!

நான் மட்டும்........?

நான் மட்டும் ஏன் இப்படி....?

உள்ளும் புறமும் ஏதோ அனல் என்னை சுட்டெரிப்பதாய் நெளிகிறேன்.

தனிமை...!

வெறுமை.....!

நெஞ்சிலே கனம்....!

கடந்து போன பலரும் தன்னந்தனியாய் உட்கார்ந்திருந்த என்னை ஒருவிதமாய் பார்த்துவிட்டு நகர்ந்தனர். என் முணுமுணுப்பு அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது. சரியாக வாரப்படாத முடி, சவரம் செய்யப்படாத முகம், கசங்கிப்போன உடை, கையில் சிகரெட்டு.... நானா இது? எனக்கே நம்பமுடியவில்லை.

அதுசரி காலையில சாப்பிட்டனானோ.......?

வெளிக்கிடேக்கை கதவை சரியாக பூட்டினனானோ....?

அது இருக்கட்டும்.

ம்.... என்ர வீடு எங்க இருக்குது?

'சீ... நான் இங்க வந்திருக்கக் கூடாது.'

'நான் இங்க வந்திருக்கக் கூடாது'

என்னுள் வெறுப்பு மண்டுகிறது. புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை எறியத்தான் பார்த்தேன். அந்தச் சிறுமி மட்டும் என் குறுக்கே ஓடிவராமல் இருந்தால். பத்திரமாக சிகரெட்டுத் துண்டைக் கொண்டுபோய் அணைத்துவிட்டு மரநிழலில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு நடக்கிறேன்.

எங்கே போகிறேன்.......?

என் கால்கள் நடக்கச் சொல்கின்றன.

நான் நடக்கிறேன்.

எவ்வளவு தூரம்......? எத்தனை மைல்.....?

நடக்க நான் தயார். இப்படி நடந்தே ஊர்கள் கடந்துவந்த அகதித் தமிழன் நான்.

சந்தடியற்று நீண்டுகிடக்கிறது அந்த வீதி. ஒன்றிரண்டு கார்கள் ஓசைபடாமல் ஊர்ந்து செல்கின்றன. குடிமனைகள் தெருவின் ஓரமாய் பாதசாரிகள் நடப்பதற்காக போடப்பட்டிருந்த சீமெந்துத் தரையில் என் வெறும் கால்கள் தம்போக்கில் நடக்கின்றன.

'ஓ செருப்பு அணியக்கூட மறந்து போனேனோ..!'

எனக்குள் நானே சிரித்துக்கொள்கிறேன்.

என் மேலாடையின் வியர்வை நாற்றம் எனக்கே அருவருப்பாக இருக்கிறது.

'இன்றைக்காவது போய் குளிக்கவேணும்'

ரோட்டைக் கடந்து மறுபக்கம் செல்ல நினைக்கிறேன். ஏதோ சிறு சத்தம் என்னை தலைநிமிர வைக்கிறது.

அந்தக் கார் திடீர் என்று 'பிரேக்' போட்டு நிற்கிறது. பிறகு கொஞ்சம் பின்னுக்கு எடுத்து, கொஞ்சம் விலத்தி, பிறகு வேகமாக முன் நகர்கிறது. நடுவீதியில் ஏதோவென்று வேகமாக அசைவதாய் தெரிகிறது. என் கண்கள் அந்த இடத்தில் நிலைக்குத்தி நிற்கின்றன. படபடவென்று இறக்கையை அடிக்கிறது ஒரு சிறு குருவி.

வெறிச்சோடிக்கிடக்கும் தெருவின் நடுவிற்கு என்னையும் அறியாமல் வந்துவிடுகிறேன்.

முதுகில் கருமையும், வயிற்றுப்புறம் இளமஞ்சலுமாய் அந்தக் குருவி துடிதுடிக்கிறது. இன்னொரு குருவி, அதன் ஜோடியாக இருக்க வேண்டும் இந்தக் குருவியை தவிப்புடன் சுற்றிச் சுற்றி நடக்கிறது. விழுந்து கிடக்கும் குருவியோ தன் சிறிய செட்டைகளை படபடவென்று அடிக்கிறது. தலையை இரண்டொரு முறை தூக்கிப் பார்த்துவிட்டு அப்படியே

தொப்பென்று சரிய இறந்துபோகிறது. அதன் உடல் நசிந்துபோய், மேல் இறகு பிய்ந்துபோய் கிடக்கிறது. லேசாக இரத்தம் கசிகிறது.

குருவியை அடித்துவிட்டு கார் தன் போக்கில் போய் விட்டது.

"கண் மண் தெரியாமல் ஓட்டுறான். விசரன்.... இவன் எங்க போய் பிரளப்போறானோ...." என் உதடுகள் முணுமுணுக்கின்றன.

ஜோடிக் குருவியால் தன் இணையின் பிரிவைத் தாங்க முடியவில்லை. தன் இறகுகளை விரித்து விரித்துக் காட்டி அதை தன்னுடன் பறந்து வருமாறு அழைக்கிறது. இழப்பை உணர்ந்து வேதனையுடன் இரண்டடி தூரம் பறப்பதும் திருப்பி வந்து இறந்து கிடக்கும் தன் ஜோடியை அலகால் தொட்டுப் பார்த்து சத்தம் போடுவதுமாக அந்தரிக்கிறது. அங்குமிங்கும் பார்த்து தலையை ஆட்டியபடி நடக்கிறது.



தூரத்தில் இன்னுமொரு கார் வருகிறது. அது வருகின்ற வேகத்தில், அதன் சக்கரங்களுக்குள் அகப்பட்டு இறந்து கிடக்கும் சிறுகுருவியின் உடல் மேலும் சிதைந்து சின்னாபின்னமாகப் போகிறதே. என் நெஞ்சு பதறுகிறது. என்னைப் போலவே அந்தக் குருவியும் பரிதவிக்கிறது. அச்சிறுகுருவியால் ஒன்றும் செய்ய இயலவில்லை. தன் ஜோடியை விட்டுப் போக மனமில்லாமல் அருகில் இருந்த மரத்தில் அமர்வதும், பின் தன் ஜோடியின் அருகில் போய் அமர்ந்து கொள்வதுவுமாக அதன் நிலை இருக்கிறது.

நான் அவசரமானேன். தெருவோரமாய் கிடந்த கடதாசி அட்டையை எடுத்துக்கொண்டு இறந்துகிடந்த குருவியை நெருங்கினேன். என் இதயம் வெடித்துவிடும் போல இருந்தது. இரத்தமும் சதையுமாய் ஏதேதோ நினைவுகள் என் மனதைச் சூழ்ந்துகொள்கின்றன. மரக்கிளையில் அமர்ந்தபடி அந்தக்குருவி என் செயலைக் கண்டதும் பயத்துடன் ஆரவாரிக்கிறது. ஒரு பூவைப் போல அந்தக் குருவியை மெதுவாகத் தூக்கியெடுத்து அட்டைப் பெட்டியில். கிடத்தினேன். என் விழிகள் நீரைச் சொரிந்து கன்னங்களில் வழிந்தோடுகிறது. இரு கைகளிலும் தூக்கி, முகத்திற்கு அருகே கொண்டு வந்து அந்தக் குருவியைப் பார்க்கிறேன்.

'இப்படித்தான் என்ர சசியும்......'

என் ஆன்மாவுக்குள் அடக்க முடியாத வேதனை. குலுங்கிக் குலுங்கி அழுகிறேன்.

இழப்பின் வலி அறிந்தவன் நான்.

குருவியின் இழப்பில் என் இழப்பின் வேதனை. எவ்வளவு நேரம் அப்படியே நடுத்தெருவில் அமர்ந்திருந்து அழுதேனோ தெரியாது.

என்னை விலத்திக் கொண்டு ஒரு கார் மெதுவாக முன்னகர்ந்தது. அதில் அமர்ந்திருந்த வெள்ளையின வயோதிபர் மென்முறுவலுடன், சிறு வியப்புமாய் என்னை அங்கீகரித்து தலையசைத்துவிட்டுப் போவது தெரிந்தது.

ஒரு குழந்தையைப் போல பத்திரமாக அந்தக் குருவியை எடுத்து தெருவோரமாய் நின்றிருந்த மரத்தடியில் வைத்துவிட்டு அப்பால் நடக்கிறேன். அதன் இணை என்னை நன்றிப் பெருக்கோடு பார்க்கிறது.

நடந்து நடந்து என் கால்கள் வலிக்கின்றன. அதைவிட என் மனம் வலிக்கிறதே.

அது இறக்க முடியாத சுமை. என் உயிரை அணுவணுவாய்க் கொல்லும் வேதனை. கனவிலும், நினைவிலும் சதா அந்த நிழல் விம்பங்கள். என் நினைவுகளைச் சுமந்தவள், என் கனவுகளின் உருவாக கருவான என் குழந்தை, இருவருரையும் இழந்த நடைபிணம் நான்.

'நான் இங்க வந்திருக்கவே கூடாது...'

'நான் விசரன்..... நான் பைத்தியக்காரன்.....' ஓலமிடும் என் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் வேகவேகமாக நடக்கிறேன்.

"ஐயோ அம்மா எனக்கு பயமாயிருக்குதம்மா. என்னைக் கட்டிப்பிடியுங்கோ அம்மா" மூத்தக்காவின் நான்கு வயது மகன் கயன் அனுங்குவது இப்போதும் என் காதுகளில் கேட்கிறது. நாலாபுறமும் குண்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. அக்கா மகனை அள்ளியெடுத்து அணைத்துக்கொள்கிறா. கயன் அவள் மார்போடு ஒட்டிக்கொள்கிறான். அவன் உடல் பயத்தில் நடுங்குகிறது. கண்கள் குழிவிழுந்து, எலும்பும் தோலுமாய் கயன்....

"தம்பி இனி இங்க இருக்கேலாது போல இருக்குது. சனமெல்லாம் வெளிக்கிடுதுகள். நாங்களும் அங்கால போவம். எல்லாத்தையும் இழந்திட்டம். இனி இதுகளையும் இழக்க ஏலாது. பார் பொடியன் பயத்தில நடுங்கிற நடுக்கத்தை" என்கிறா மூத்தக்கா.

இரணைமடுவில இருந்து வெளிக்கிட்டு இது மூன்றாவது இடம். சனத்தோட சனமா அள்ளுப்பட்டு போய்க்கொண்டிருக்கிறம். எங்கட இடப்பெயர்வுக்கு ஒரு முடிவு இல்ல. எனக்கு சசியை நினைச்சால்தான் பயமும், கவலையும். சசிக்கு, இப்ப ஏழு மாதம். வயிறு நல்லா வெளியில தெரிஞ்சுது. அவளைப் பார்க்கத்தான் எனக்கு நெஞ்சு பகீர் என்டு

இருக்கும். அவள் சுகம் பெலமாக பிள்ளையப் பெத்தெடுக்க வேணும் என்றதுதான் என்ர பிராத்தனையாக இருந்தது.

'அவளால வரிசையில நிக்க ஏலுமா?'

நான்தான் பாணோ, பருப்போ வரிசையில நின்டு என்னென்டாலும் அவளுக்கு வாங்கிக்குடுக்கிறது.

'எத்தினைநாள் நான் சாப்பிட்டுட்டன் என்டு பொய் சொல்லி அவள சாப்பிடப் பண்ணியிருப்பன்'

கலியாணங்கட்டி ரெண்டு வருஷத்துக்குப் பிறகுதான் சசிக்கு வயித்தில குழந்தை தங்கினது. அந்த செய்தி கேட்ட சந்தோசம் நீடிக்காமல் இந்த நாட்டுப் பிரச்சனையும் தொடங்கீற்றுது. அந்த நாள் தொடக்கம் ஆன சாப்பாடு கூட இல்லை. பயம்... பசி.... பட்டினியோட..... பிள்ளை எப்பிடி பிறக்கப் போகுதோ என்டு சில நேரங்களில யோசிக்க பயமாகத்தான் இருந்தது.

ஒவ்வொருக்காலும் அவள பத்திரமா பங்கருக்குள்ள இறக்கி, ஏத்தி.....

எப்பிடி இருக்க வேண்டியவள். நாரி நோ, முதுகு நோ என்டுகொண்டு அந்த வெறும் தரையிலயும், மண் புழுதிக்கையும் படுத்தெழும்பேக்க எனக்கு செத்திரலாம் போல இருக்கும். அவளும்தான் எலும்பும் தோலுமாய்.... ஆன சாப்பாடு கூட இல்லாமல்......

எத்தினை இரவுகளை அவள் பங்கருக்குள்ளயே கழிச்சிருக்கிறாள். குண்டுக்குப் பயப்படுகிறதை விட அவள் பாம்பு, பூச்சியளுக்குத்தான் கூடப் பயம்.

ஆனால் கடைசியில.....

அடுத்தநாள் ஆமிக்காரங்கள் நாங்க இருந்த முள்ளிவாய்க்கால் பகுதியைச் சுத்திவளைச்சுட்டாங்கள். அக்கா வெளிக்கிடுவம் என்டு சொல்லியும் யோசிச்சுக்கொண்டிருந்தது எவ்வளவு பிழையென்டு அப்பதான் தெரிஞ்சுது. பீரங்கி, பல்குழல்.... பத்தாததுக்கு பிளேனுகளும் விட்டுவைக்க இல்லை. இந்தத் தாக்குதல் கடைசித் தாக்குதலாம் என்று எல்லோரும் கதைக்கீனம். சனம் காடு கரம்பையளுக்குள்ளாலயும், கடல் பக்கத்தாலயும் வெளியேறப் போறதா கதைச்சவை. சனத்தோட சனமா நாங்களும் வெளிக்கிட்டம்.

சசிக்கு நடக்க ஏலாமல் இருந்துது. எனக்கு சில நேரம் கோபம் கூட வந்தது. இந்தப் பயங்கரத்தைத் தாண்டினால் காணும் என்டு இருந்தது எனக்கு.

"கெதியா நடவப்பா. இன்னும் கொஞ்சத் தூரம்தான்" என்டு அவளை அவசரப்படுத்தினேன். குண்டுகள் நாங்க வந்த பாதைகளில் எல்லாம் விழுந்து வெடிச்சுது. செத்தவர்கள் சாக மிச்சமான ஆக்கள் நடந்துகொண்டிருந்தம்.

"ஐயோ... என்ர பிள்ளை. என்ர பிள்ளை..." திடீரென்று பின்னால வந்துகொண்டிருந்த அக்கா கத்திக் குழறினா. அக்காவின்ர கையில இருந்து ரெத்தம் வடிஞ்சுது. அவ கயனைத் தூக்கிக்கொண்டு வந்தவா. கயனுக்கு மண்டையில காயம்பட்டிருந்தது. நான் சசியின்ர கையில இருந்த உர 'பாக்'கில இருந்து ஒரு சீலையக் கிழிச்சு கயனுக்கு கட்டுப்போட்டன்.

"சசி நீ இதுகளைப் பார்க்கக்கூடாது. அங்கால போ" மெல்லிய குரலில் நான்தான் சொன்னன். அவள் விறைத்துப் போய் பார்த்துக்கொண்டு நின்றாள். தலை இல்லாத முண்டங்கள், கை கால் இழந்த உடல்கள் என்று எத்தினையக் கடந்து அவள் வந்துட்டாள். இதென்ன பெரிசா....!!!

கட்டியிருந்த துணியையும் மீறிக்கொண்டு கயனுடைய தலையில இருந்து இரத்தம் வந்துகொண்டிருக்குது. கயன் அப்பவும் மயக்கமாகத்தான் கிடக்கிறான். பேச்சு மூச்சில்லை. அக்கா மயங்கி விழுந்திட்டா. கொஞ்ச நேரத்தால தானே கண்ணை முழிச்சிட்டா.

"வவுனியாவுக்குள்ள போயிட்டால் பிள்ளைக்கு ஏதாவது மருந்துபோடலாம்" யாரோ சொல்ல அத்தான் கயனைத் தூக்கிக்கொண்டு வேகவேகமாக நடந்தார். அக்காவும் அவருக்குப் பின்னால ஓடினா.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கிட்டவாகக் கேட்குது. ரெண்டுபக்கமும் சரியான சண்டை நடக்கிறமாதிரி சத்தம் கேட்குது. சனத்தோட சனமா நாங்களும் நடந்தம். சசியும் மூச்சிறைக்க நடந்து வந்தாள். நடக்க ஏலாமல் கஷ்டப்பட்ட சசியைப் பத்திரமாகப் பிடிச்சுக்கொண்டு நடந்ததில நான் அக்காவையளையும் தவறவிட்டுட்டன்.

கண் எட்டுற தூரத்தில மண் மூடை அடுக்கியிருக்கிறது தெரிஞ்சுது. அது கடந்தால் அங்கால வவுனியாதான் என்டு யாரோ சொன்னது கேட்டுது. சசியின்ர முகத்திலும் கொஞ்சம் தெம்பு வந்தமாதிரி தெரிந்தது. நேரமும் இருட்டிக்கொண்டு வந்தது. என்ன பாம்பு, பூச்சி எங்க கிடக்குதோ தெரியாது. நான் புதர்களை விலக்கிக்கொண்டு சசிக்கு முன்னால நடக்கிறன். அப்பத்தான் அந்த இடிமாதிரி பெரிய சத்தம்....

நான் ஒரு புதருக்குள்ள விழுந்துகிடந்தன். எனக்கு கையில காயம் பட்டு ரெத்தம் ஓடிக்கொண்டிருந்தது. கண்ணைத் திறக்க முடியாமல் கண்ணுக்குள் மண்ணும், தூசியுமாய்... புழுதி மண்டலம் அடங்க சில நிமிசங்கள் எடுத்துது. அழுகுரல்களும், ஓலமும் தான்....

"சசி...."

"என்ர சசி..." நெஞ்சு பதைபதைக்க சசியைத் தேடினேன்.

சசி ஒரு தென்னைமரத்தோடு குப்புறக்கிடந்தாள். அவள் கிடந்த தோரணை....

"ஐயோ சசி....!"

"ஓம் என்ர சசி செத்துப்போயிட்டாள்"

"என்ர சசி என்னை விட்டுட்டுப் போயிட்டாள்"

"சசியோட சேர்ந்து அவளின்ர வயித்தில இருந்த பிள்ளையும்...."

சன்னங்கள் அவளின்ர கழுத்து, நெஞ்சு, வயிறு என்று துளைச்சிருந்துது. அவளின்ர ஒரு கால்ல முழங்கால் மட்டும்தான் இருந்துது. ஒரே இரத்தவெள்ளம்.

'ஐயோ சசி... என்ர சசி....'

'நான் என்ர சசிக்காக அழவா? இல்ல வயித்திலயே அழிஞ்சுபோச்சுதே அந்த என்ர குழந்தைக்காக அழவா....?' முகத்திலயும், தலையிலயும் அடிச்சுக்கொண்டு அழுகிறன்.

'டொக்டர் ஆம்பிளைப் பிள்ளை என்டு சொன்னவர்....'

'நான் கண்ட கனவெல்லாம் அழிஞ்சுபோச்சுது. எனக்கினி ஆரு...'

ஆறுதல்படுத்த யாருமில்லாமல் பைத்தியக்காரனைப் போல கொஞ்சநேரம் அவளை என்ர மடியில போட்டுக்கொண்டு இருந்தன். என்ர காயத்தின்ர வலியோ, அதில இருந்து ரெத்தம் வடிகிறதோ எனக்கு தெரியேல்ல.

'எவளின்ர மடியில என்ர உயிர் போகவேணும் என்டு நினைச்சனோ, இன்றைக்கு அவள் பிணமா என்ர மடியில...'

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இப்ப இன்னும் கிட்டத்தில கேட்குது.

ஆட்கள் ஏதோ சொல்லிக்கொண்டு போகீனம். என்ர காதில எதுவுமே விழேல்ல. குண்டுகள் விழுந்து வெடிச்சு புழுதி கிளம்புது. சன்னச் சிதறல்கள் நெருப்புப் பொறிகளாத் தெறிக்கிது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கிட்டவாக் கேட்குது. நாய், நரியளின்ர ஊளைச் சத்தங்களும் தூரத்தில கேட்குது.

"தம்பி அழுதுகொண்டிருக்க இப்ப நேரமில்ல. எழும்புங்க தம்பி" யாரோ ஒரு வயதானவர் என்னை நெருங்கி என்ர நிலமையைப் பார்க்கிறார். என்ர கைக்காயத்தைப் பார்த்து தன்ர இத்துப்போன சாரத்தின்ர ஒரு முலையைக் கிழிச்சுக் கட்டுப்போடுகிறார்.

'என்ர ஆருயிர் மனைவி.... அவளை இப்படியே போட்டுவிட்டு எப்படி வரஏலும். ஏழுமாதக் குழந்தை அவள் வயிற்றுக்குள்ளேயே கருகிப்போச்சுது. இவையள் இல்லாமல் நான் மட்டும் இருந்து என்ன செய்யப்போறன்....?'

கிழவர் எங்கேயோ இருந்து ஒரு தகரத் துண்டைக் கொண்டு வாறார்.

"தம்பி இதால கிடங்க்கைக் கிண்டு..." என்றபடி அவர் வேகமாக அந்த தகரத் துண்டால மண்ணை கிளறுறார். எனக்குள்ள ஒரு வேகம்... அவரிட்ட இருந்து அதைப் பிடுங்கி வேகவேகமாக மண்ணைக் கிளறுறேன். காய்ந்து வறண்ட நிலம் அவ்வளவு லேசில் குழியைத் தோண்டமுடியவில்லை. கிழவனும் ஏதோ தடியை முறிச்சு தன்ர பங்குக்கு நிலத்தை குத்தி எனக்கு உதவுறார்.

துவக்குச் சூட்டுச் சத்தம் இப்ப நல்லா கிட்டக் கேட்குது. சனம் விழுந்தடிச்சு ஓடுதுகள். ஆமிக்காரங்கள் ஏதோ கத்திக் கதைக்கிற சத்தம் கூட கேக்குது. வாகனங்களின்ர உறுமலும் கேட்குது. சனங்கள் என்னையும் கிழவனையும் பார்த்து புறுபுறுத்துக்கொண்டு போகீனம்.

"அவையளுக்காக என்ர மனுசியின்டயும், பிள்ளையின்டயும் உடம்பை நாய், நரி தின்னவும், காக்காய் கொத்தவும் இப்பிடியே போட்டிட்டு வரேலுமே?"

அதுக்குள்ள எரிகுண்டொன்று எங்களுக்கு அருகில் விழுந்து வெடிக்குது. ஒரு குடும்பம், இரண்டு, மூன்று குழந்தைகள் என்ர உடம்பெல்லாம் பதறத் தொடங்கீற்றது. மரண பயம் என்னைப் பிடிச்சுட்டுது. அந்தக் கோர சாவைப் பார்த்ததும் எனக்கு எல்லாமே மறந்து போனது. எப்பிடியாவது ஓடித்தப்பவேணும். எனக்கு உடம்பெல்லாம் பதறத் தொடங்குது. கிழவனையும் இழுத்துக்கொண்டு நான் ஓடுறன்.

உடம்பைக் குறுக்கியும், குனிந்தபடியும், ஊர்ந்தும், தவழ்ந்தும் அந்த சென்ரிபொயின்ட்டை நெருங்கி விட்டம். சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம்.... என்ர கையைப் பிடிச்சிருந்த கிழவரின் கைபிடி நழுவிப்போச்சுது. அவர் விழுந்துட்டார். நான் மற்ற சனத்தோட சேர்ந்து கைகளை மேல தூக்கிக்கொண்டு நடக்கிறன். இராணுவம் அப்பிடியே எங்கள சுத்திவளைச்சுது. ஏதேதோ விசாரணைகளுக்குப் பிறகு எஞ்சியிருந்த எங்களை தங்களின்ட வாகனங்களில் ஏத்திக்கொண்டு முகாமிற்கு கொண்டுவந்தவை.

அங்கதான் பெரியக்காவைப் பார்த்தன். தலையில் காயம்பட்டிருந்த கயனும் இறந்து போய் அத்தான்தான் வழியில் ஒரு பாழுங்கிணத்துக்குள்ள அவனை தூக்கிப் போட்டுட்டு வந்தவராம்.

"நரியள் குதறாமல் என்ர மகன் பத்திரமா இருப்பான்.." அத்தான் தலையில் கைவைத்தபடி திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு இருக்கிறார். சசியின்ர செய்தி கேட்டதும் அக்காவால அழக்கூட முடியேல்லை. யாருக்காக அழுகிறது? எதை நினைச்சு அழுகிறது என்டு தெரியேல்ல.

பிறகு முகாம் வாழ்கை, விசாரணைகள் என்டு தொடர, அக்காதான் முகாமுக்கு வெளியில போய் என்னை வெளிநாட்டுக்கு அனுப்ப வேணும் என்டு காரியங்களைச் செய்தவா. என்ர அம்மாவும், பெரியண்ணன் குடும்பம், சின்னக்கா குடும்பம், தங்கச்சி எல்லோரும் இங்க கனடாவிலதானே இருக்கீனம்.

'ஆரு இருந்தென்ன என்ர சசியும்... பிள்ளையும் எனக்கில்லையே...'

மூத்தக்கா தான் என்னை சின்னன்னில இருந்து வளர்த்தவா. என்னில் சரியான பாசம்.

நான் பெத்த பிள்ளையத் தான் இழந்திட்டன். உன்னையும் இழக்க என்னால ஏலாது" என்டு என்னோட பிடிவாதமா நின்டு என்னை இங்க அனுப்பிவைச்சது அவாதான்.

என்ர மனம் முழுக்க அந்த முள்ளிவாய்க்கால் காட்டுக்குள்ள தான் சுத்திக்கொண்டு இருக்குது.

'என்ர சசி... என்ர பிள்ளை...'

'இவ்வளவு காலமும் எனக்கு சோறு போட்டு தாய்க்கு தாயாய் இருந்து என்னைப் பார்த்தவள். அவளின்ட உடம்ப நல்ல விதத்தில அடக்கம் செய்யக் கூட என்னால முடியேல்லையே...'

'பாவி...'

'நான் பாவி... மகா பாவி. அந்த குழந்தைய கையில வைச்சுக் கொஞ்சத் தான் ஏலாமல் போச்சு. கடைசியா நாய் நரியள் தான்...'

'ஐயோ... நினைச்சால் எனக்கு பைத்தியம் தான் பிடிக்குது'

'நான் ஏன் இங்க வந்தன். நான் சுயநலக்காரன், பாவி... நான் விசரன்...'

'நான் விசரன்...'

என் கால்கள் வலியெடுக்கின்றன. நான் நடக்கிறேன். தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறேன்.

## சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

**வாசகர்களே, எழுத்தாளர்களே, கலைஞர்களே**

உங்கள் பகுதியில் இடம்பெறும் கலை இலக்கிய நிகழ்வுச் செய்திகளை சுருக்கமாக எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் செய்திகள் அடுத்துவரும் இதழில் இடம்பெறும். 200 சொற்களுக்கு மேற்படில் அச்செய்தி பிரசுரிக்கப்பட மாட்டாது.

- கே. பொன்னுத்துரை

# தென்மராட்சி
## போர்க்களமான போது....

தனங்கிளப்பு வ. சின்னப்பா

குண்டு வீழ்ந்தெங்கள் வீடுகள் சாய்ந்தன
குடியி ருப்புக்கள் பற்பல மாய்ந்தன
பெண்டு பிள்ளைகள் வீதியிற் போயினார்
பிச்சை ஏற்பவர் ஆயிரம் ஆயினார்!

பல்குழல்பட்டு யாவும் தகர்ந்தன
பாகு பாடின்றி முற்றும் அழிந்தன
செல்குழல் பட்டுத் தீயாய்க் கனன்றது
தென்ம ராட்சியோ பற்றி எரிந்தது!

வீடுகள் கல்லு மேடாய்க் குவிந்தன
வீதிகள் குளம் குட்டையாய்த் தோன்றின
நாடு போர்க்கள மாகிய கேட்டிலே
நானிதை எங்ஙன் சொல்லுவன் பாட்டிலே!

அருமருத்துவ சாலைகள், சந்தைகள்
அஞ்சற் கூடங்கள், நீதிமன் றம்மடம்
திருத்தலம், பொது வேலைத் தல மெனத்
திகழ்ந்த கட்டடம் யாவும் தகர்ந்தன!

ஓடு கல்லுமண் கட்டிக ளாகவே
உடைந்த துண்டங்கள் எங்கும் நிறைந்தன
மாடு கட்டையில் செத்து மடிந்தது
மனித வாழ்விங்கு துயரில் முடிந்தது!

ஏடடங்கிய நூல்நிலை யம்பல
எரிந்து டைந்து நொருங்கிச் சிதைந்தன
தேடரும் பல நூல்கள் அவற்றிடைச்
சீரழிந்து சிதைந்து புதைந்தன.

பாடசாலையில் காடு வளர்ந்தது
படிக்கும் நூல்களில் புல்லு மலர்ந்தது
தேட ரும்எங்கள் கல்வி வளங்களோ
தெருவி லேஉரு மாறிக் கிடந்தன.

காவல் மேட்டிலே கதவுகள் சேர்ந்தன
கட்டில் மேசைகள் கள்வர்கைப் போந்தன
ஏவலர் மரம் யாவும் தறித்தனர்
எடுத்த டுக்கிப்போம் வழியை மறித்தனர்.

பட்ட தாயிரம், வெட்டிய தாயிரம்
பனைகள் ஆயிரம் தென்னைகள் ஆயிரம்
சுட்ட தாயிரம் துண்டுசெய் தாயிரம்
தொலைந்த மொத்தம்நூ றாயிரம் ஆயிரம்!

தேடி வைத்தவை யாவும் சிதைந்தன
தீயிடைப் பட்டு முற்றும் அழிந்தன
ஓடி மானிடர் ஊர்விட்டுப் போயினர்
ஊரில் யாவரும் ஓர்சமம் ஆயினர்!

சுற்றி இளைஞர் யுவதியைப் பற்றினர்
சொல்லொ ணாத்துயர் தந்து வருந்தினர்
பற்பலர் பின்பு "காணாமல் போயினர்"
பாரி லேஎன்றும் "மீளாதோர்" ஆயினர்.

மங்கை யர்சிலர் கற்பை இழந்தனர்
மண்ணி லேபுதை யுண்டு மடிந்தனர்
எங்கும் மாந்தரைக் கொன்று புதைத்தனர்
எலும்புக் கூடுக ளாக மிதந்தனர்.

தழைத்த வேலிகள் வெட்டிச் சரித்தனர்
தடையாய் இருந்தவை யாவும் எரித்தனர்
விளைத்த நெற்பயிர் வெட்டத் தடுத்தனர்
வேத னையுற்று மக்கள் கொதித்தனர்.

மறவன் புலோமற்றும் அரியாலை நீள்முனை
மருவி டைக்குடாத் தாழ்வில் பரப்பிலே,
சிறப்புடன் தாங்கள் சென்று வரப்படை
செய்தனர் வீட்டு மரங்களை நாட்டியே.

மூன்று கல்தொலை கடலிலே பாலம்
முழுதும் எம்வீட்டுக் கதவிலே ஜாலம்!
சான்று சொல்குவர், மறவனூர் சென்று
தகனத் தலத்துற்றுப் பார்த்தவர், இன்று!

(மறவனூர்-மறவன்புலோ,இவ்வூர்மீள்குடியேற்ற
அனுமதிக்கு முன் இப்பாலத்தை அழித்து
விட்டார்கள். எச்சங்கள் இன்றும் தெரிகின்றன)

தனங்கி ளப்பிங்கு படைகள் நிலையமாம்
தம்"முயர் பாது காப்பு வலையமாம்!"
சனங்களைப் பற்றி அக்கறை இல்லையாம்
தமது தேவையே தங்களுக் கெல்லையாம்!

தங்கள் வீடுகள் வாசலை நீங்கியே
தனங்கி ளப்பவன் நிற்கிறான் ஏங்கியே!
எங்கு சென்றவன் நீதியைக் கேட்பதோ
எங்கள் இன்னலை யார்வந்து தீர்ப்பதோ?

தெருவில் ஆண்டுகள் பதினொன்று சென்றன
திரும்பு வோமூர்க்கு இன்றென, நன்றென!
ஒருவரும் வந்து கேட்பவர் இல்லையே
ஒழியு மாஎங்கள் ஊரவர் தொல்லையே!

தனங்கி ளப்பென்ற தண்மரச் சோலையே
"சஹாரா" ஆனதே; இதுபடை வேலையே!
சனங்கள் வாழ்திட்ட வீட்டுத் "தளங்களைச்"
"சாத்திரம்" கேட்டால் காண்பமோ, என்னவோ!

தரம் மிகுந்தஎம் நெல்லுக்குப் பற்பலர்
தனங்கி ளப்புக்கு விரைகுவர் கொள்ளவே!
பரந்த சீரிய அந்நெல் நிலங்களே
பதினோ ராண்டுகள் கைப்படா துள்ளவே!

தனங்கி ளப்புநெல் மீண்டும் விளையுமோ?
தங்கள் சோற்றிலே தங்கை அளையுமோ?
பனங் கிழங்குமண் வாசனை ஊட்டுமோ?
பரவை றால்வளம் செலவாணி ஈட்டுமோ?

சங்குப் பிட்டியில் பாலம் அமைத்தனர்
தரைவ ழி இன்னோர் பாதை சமைத்தனர்
எங்கள் ஊர்வழி யாவரும் செல்கிறார்
"எமக்கு மட்டுமே தடை" என்று சொல்கிறார்!

எழுது மட்டுவாள் போலும் இடங்களும்
இப்படிப் படை கொண்ட நிலங்களாம்
செழுமை மிக்கஅத் தென்னை வளங்களே
சேனை இன்னமும் தேங்கும் தளங்களே!

போத்தலைப் புள்ளிச் சட்டைக்குத் தள்ளினர்
பொருட்களைக் கள்வர் சாக்கிலே அள்ளினர்
சேர்த்து வைத்தவன் "தெருமகன்" ஆயினான்
திருட வந்தவன் "திருமகன்" ஆயினான்.

பாத்தி ரம்பல மூடையிற் சேர்ந்தன
பயண மாகிப்பின் பட்டினம் போந்தன
சேர்த்து வைத்ததைக் கப்பலில் ஏற்றினர்
திரும்பப் புதிதாக்கிக் காசாக மாற்றினர்.

மனித னாலிங்கு மனிதன் தொலைந்திட
மண்ணி லேஇட்ட வஞ்சகக் குண்டுகள்
புனிதத் தன்மையை இல்லாது போக்கின
பொய்க்கால் தேவையை ஆயிரம் ஆக்கின!

பாழ்பட் டழிந்தன மக்கள் வளங்களே
படருற் றழிந்தன தமிழர் உளங்களே
"சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில்"
தென்ம ராட்சியோ "ஷெல்" பட் டழிந்ததே.

புனிதக் காற்றிலும் நீரிலும் நஞ்சடா
போரி னாலிங்கு யாவிலும் நஞ்சடா
மனிதன் செய்கையே மனிதர்க்கு நஞ்சடா
மகிமை செய்வதெம் மாண்புறு நெஞ்சடா!

பெருஞ்ச மர்க்கொரு திருப்பம் நிகழ்ந்தது
பேசித் தீர்ப்பதாய்க் கதையும் எழுந்தது
திரும்ப மீள்கின்ற செயலும் நடக்குது
தென்ம ராட்சியோ செத்துக் கிடக்குது!

தென்ம ராட்சிமண் மீண்டும் சிறக்குமோ?
சிதைந்த வாழ்வினில் இன்பம் பிறக்குமோ?
அன்பு, சாந்தி, சமத்துவம் ஓங்குமோ?
அகிம்சை வாழ்வினில் அச்சங்கள் நீங்குமோ?

# POOBALASINGHAM BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.**

**Head Office :**

202, Sea Street, Colombo 11, Sri Lanka. Tel. : 2422321. Fax : 2337313, E-mail : pbdho@sltnet.lk

**Branches :**

340, Sea Street,
Colombo - 11, Sri Lanka. Tel : 2395665

309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka. Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

**தலைமை :**

இல. 202 செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை. தொ. பே. 2422321. தொ. நகல் 2337313, மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

*கிளைகள் :*

340, செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை., தொ.பே. 2395665

இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை., தொ. பே. 4–515775, 2504266

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

## புதிய வரவுகள்

| புத்தகத்தின் பெயர் | எழுத்தாளர் | வெளியீடு/விற்பனையாளர் | விலை |
|---|---|---|---|
| ● விலங்குப் பண்ணை | நல்லைக்குமரன் குமாரசாமி | உதயம் வெளியீடு | 250/= |
| ● கசந்த கோப்பி | இரா. சடகோபன் | சூரிய பதிப்பகத்தார் | 580/= |
| ● பன்முகப் பார்வை | எ. எம். எ. அஸீஸ் | எ. எம். எ. அஸீஸ் மன்றம் | 150/= |
| ● எதுவுமல்ல எதுவும் | கருணாகரன் | மகிழ் வெளியீடு | 200/= |
| ● கடந்து போகுதல் | நீ. பி. அருளானந்தம் | திருமகள் பதிப்பகம் | 500/= |
| ● ஆகாயப் பூக்கள் | ரவிரத்னவேல் | தோதன்ன பதிப்பகம் | 200/= |
| ● இலங்கை திரையுலக சாதனையாளர்கள் | தம்பிஐயா தேவதாஸ் | வித்யாதீபம் பதிப்பகம் | 200/= |
| ● ஊருக்கு நல்லது சொல்வேன் | வீ. தனபாலசிங்கம் | புரவலர் புத்தகப் பூங்கா | 600/= |
| ● போராட்டச் சிந்தனைகள் | அப்துல்காதர் லெப்பை | பரணன் அஸோஸியேற் | 300/= |
| ● தாய் மடி தேடி | கார்த்திகாயினி சுபேஸ் | மீரா பதிப்பக வெளியீடு | 300/= |
| ● குத்துவிளக்கு | தம்பிஐயா தேவதாஸ் | வித்யாதீபம் பதிப்பகம் | 250/= |
| ● கிழித்துப் போடு | சித்தன் | | 400/= |

# மலேசிய வாசுதேவனோடு கொஞ்ச நாட்கள்!

சை. பீர்முகம்மது
(மலேசியா)



1958 என்று நினைக்கிறேன். கோலாலம்பூர் செந்தூல் செட்டியார்கள் மண்டபத்தில் திராவிடக் கழக ஒரு நாள் மாநாடு நடைபெற்றது. சிங்கப்பூர், மலேசியப் பேராளர்கள் கலந்து கொண்ட பெரிய மாநாடு அது. பெரியார் 1954ல் மலாயா வந்து சென்ற பிறகு நடைபெற்ற அந்த மாநாட்டில் ஒரு சிறிய பையனாக சிகாம்புட் மூன்றாவது மைலிலிருந்து கால் நடையாகப் போய் கலந்து கொண்டேன். திராவிட இலக்கிய பத்திரிகைகளை வாசிக்கத் தொடங்கியிருந்த நேரமது. பலரும் உணர்ச்சி கரமாகப் பேசினார்கள். அன்று மாலை கலைநிகழ்ச்சி என்று அறிவித்திருந்தார்கள். காலையில் சென்ற நான் அந்த மாநாட்டுக் கலை நிகழ்ச்சியில் ஒரு பத்து வயது பையன் அருமையாகப் பாடப்போகிறான் என்று சொல்லக்கேட்டு அங்கேயே இருந்தேன். முதல் நிகழ்வாக எம். எஸ். வாசுதேவன் என்ற அந்தப்பையன் தனது சகோதரர்கள் வாத்தியங்கள் வாசிக்க கீழே அமர்ந்து பாடினான். ஒரு மணி நேரம் சிதம்பரம் ஜெயராமன் குரலில் அவன் பாடியது மண்டபத்தை "கலகலக்க" வைத்தது.

அந்தக்குரல் என்னை ஆச்சரியப்படவைத்தது. கச்சேரி முடிந்ததும் பல பேச்சாளர்கள் மேடையேறி வாசுவை பாராட்டியதுடன் உடனே அவரைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி சங்கீதம் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அறிவிப்போடு சரி! எதுவும் நடக்கவில்லை.

இந்த கச்சேரி முடிந்து 'தோட்டி' என்ற நாடகத்தை வாசுவின் சகோதரர்கள் நடித்தார்கள். அதில் வாசுவின் அண்ணன்கள் நடித்ததும் ஒரு 'தோட்டி' வேலை செய்பவனுக்கு ஏற்படும் இன்னல்களும் என் மனதில் ஆழமாகப் பதிந்தன. அந்த நாடகத்தில் வாசுவும் நடித்தார்.

அதன் பிறகு அறுபதுகளில் மலாக்கா இளங்கோ கலை மன்றம் தனது ஆண்டுவிழாவில் ஒரு பட்டிமன்றத்தில் பேச கோலாலம்பூர் தமிழ் இளைஞர் மணி மன்றத்தை அழைத்திருந்தது. சா. ஆ. அன்பானந்தன், க. கிருஷ்ணசாமி நான் மற்றும் ஒருவர் அங்கே போயிருந்தோம்.

இளங்கோ கலை மன்ற ஆண்டு விழாவில் எம். எஸ். வாசுதேவன் பாடினார். அவரின் குரல் மெருகேறியிருந்தது. நாங்கள் இரண்டு நாட்கள் இளங்கோ கலை மன்றத்தலைவரின் வீட்டிலேயே தங்கினோம். வாசுவும் எங்களோடு இருந்தார். மறுநாள் காலை வரையில் அவர் யாரிடமும் பேசவில்லை. ஆனால் அந்தக் கடை வீட்டின் கீழ் மாடியில் இருந்த சிறிய அறையில் ஒரு சிறிய மெண்டலின் கருவியில் ஏதோ ஒரு ராகத்தைத் திரும்பத்திரும்ப வாசித்துப் பழகிக் கொண்டிருந்தார். அவரின் மூளையில் 24மணி நேரமும் இசைதான் குடிகொண்டிருந்தது. நின்றால், படுத்தால், அமர்ந்தால் மேடையில் பாடினால் அவர் 'இசையாகவே' இருந்தார்.

ஒரு ஜென் துறவியைப்போல மூச்சுவிடுவது கூட இசை 'லயத்துக்கு' ஏற்ப மூச்சுவிட்டார்.

1964ம் ஆண்டு எழுத்தாளர் மு. பக்குருதீன் 'இரத்தப்பேய்' என்ற தனது நாடகத்தை படமாக்க எண்ணினார். பலரும் அவரோடு தமிழகம் சென்றார்கள். அதில் வாசுவும் சென்றார். அதன் பிறகு 13 ஆண்டுகள் அவரை நான் பார்க்கவில்லை. 1976ம் ஆண்டு முதன்முறையாக தமிழகம் சென்ற பொழுது வாசுவைப் பார்க்க முயற்சி செய்தேன். முடியவில்லை.

1977ல் இளையராஜா இசைக்கச்சேரியை மலேசியாவில் நடத்த ஏற்பாடுகள் செய்த பிறகு டி. எம். சௌந்திரராஜனையும் பாடகராகச் சேர்க்கச்சொல்லி இளையராஜாவிடம் கேட்டுக்கொண்டேன்.

அன்று நடிகை சந்திரகாந்தாவின் வீட்டுத் திருமணம் நடைபெறுவதாகவும் சந்திரகாந்தாவின் அண்ணன் சண்முக சுந்தரத்தின் உறவுக்காரப் பெண்ணுக்கும் தனது அண்ணன் பாவலர் வரதராஜனின் உறவுக்காரப் பையனுக்கும் திருமணம் நடைபெறுவதாகக் கூறி இளையராஜா எனக்குக் கல்யாணப்பத்திரிகை கொடுத்து அழைத்தார். அன்னக்கிளி படம் வெளிவந்த சமயம் மச்சானைப் பார்த்தீங்களா? பாடல் பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த நேரமது. இளையராஜா இசையில் அந்த ஒரு படம்தான்; அதுவும் முதல்படம் வந்த வேளையது.

தமிழ் நாட்டுத் திருமண நிகழ்வுகளில் இசைக்கச்சேரி என்பது ஒரு சடங்கு. அந்தத் திருமணத்திலும் இசைக்கச்சேரி நடைபெற்றது. சில பாடகர்களுக்குப் பிறகு கருப்பு 'டீ சர்ட்' அணிந்தவாறு மேடையில் வாசு வந்து பாடினார். இரண்டு பாடல்கள் பாடிய பிறகு ஒரு ராக ஆலாபனையை 15 நிமிடங்கள் செய்தார். 'கசமுசா'வென்ற கல்யாணக் கூட்டம் சத்தமின்றி வாசுவின் குரலில் மயங்கிக் கிடந்தது. ஆலாபனை முடிந்ததும் பலமான கைதட்டல்.

வேறு மண்ணில், அதுவும் சங்கீதம் தெரிந்த பலர் கூடியிருந்த மண்ணில் ஒரு மலேசியத் தமிழன் பாராட்டப்படும் பொழுது எனக்குப் பெருமையாக இருந்தது. எப்பொழுதும் அந்நிய மண்ணில் இருக்கும்பொழுது மலேசியர்கள் எந்த இனமாக இருந்தாலும் மிக நெருக்கமாகிவிடுவார்கள். எனக்கு தலைகால் புரியவில்லை.

அவர் மேடையை விட்டு இறங்கியதும் அவரிடம் போய் என்னை அறிமுகம் செய்து கொண்ட பொழுது என்னை அவர் மறந்திருந்தார். ஆனால் மலேசியாவிலிருந்து வந்திருக்கிறேனென்றதும் அவர் முகம் மலர்ந்தது.

அவரின் அக்கா என் மாமனார் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரர். புக்கிட்பங்சாரில் ரயில்வே குடியிருப்பில் இருந்தார். அக்காளின் கணவரும் என் மாமனாரும் ரயில்வே ஊழியர்கள். என் மனைவிக்கு நல்ல தோழி வாசுவின் அக்கா! இதைச் சொன்னதும் வாசுவின் கண்கள் பனித்தன.

"அக்கா, அண்ணன்களைப் பார்த்து எத்தனை வருடமாகிறது." என்று கூறியவாறு மிகவும் சோர்வாகி விட்டார். பிரிவின் வேதனை அதிகமாகத் தெரிந்தது.

மறுநாள் இளையராஜாவிடமும் கங்கை அமரனிடமும் வாசுவை மலேசியா வரும் இசைக்குழுவில் சேர்த்துக்கொள்ளச் சொன்னேன். அவர் பிரபல மடையவில்லையே வந்தால் உங்கள் வசூலைப்பாதிக்காதா என்று கங்கை அமரன் கேட்டார்.

"இது பணத்தைப் பொறுத்த விஷயமல்ல மனதைப்பொறுத்த விஷயம். எங்கள் நாட்டைச் சேர்ந்த வாசு அங்கே வந்து அவரின் சொந்த பந்தங்களைப் பார்த்ததாக இருக்கட்டுமே" என்று கூறி வாசுவையும் இசைக்குழுவில் சேர்க்கும்படி செய்தேன். அந்த நன்றியை அவர் இறக்கும் வரை மறக்கவில்லை. மலேசியா வரும் பொழுதெல்லாம் என்னிடம் நீண்ட நேரம் தொலைபேசியில் அழைத்துப் பேசுவார். நன்றிக்கு ஒரு இலக்கணம் வாசு! அதனால்தான் அவர் உயரே போகமுடிந்தது.

மலேசியா வந்த அவருக்குக் கடவுச்சீட்டு எடுப்பதில் பல சிக்கல்களைத் தாண்ட வேண்டியிருந்தது. அதற்காகவே இரண்டுமுறை தமிழகம் செல்லவேண்டிய நிலை எனக்கு. 'பாஸ்போர்ட்' கிடைச்சிடுமா?" என்று கேட்டுக்கொண்டே இருந்தார்.

இளையராஜா இசையில் பாரதிராஜாவின் 16 வயதினிலே படம் உருவாகிக் கொண்டிருந்தது. அன்று பிரகாஸ் ஸ்ருடியோவில் 'ஆட்டுக்குட்டி முட்டையிட்டு' பாடல் பதிவு. எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாட வேண்டும். நானும் வாசுவோடு கங்கை அமரனும் ஸ்டுடியோ போயிருந்தோம். "தொண்டை சரியில்லை இன்று பாடமுடியாத நிலையில் இருக்கிறேனென்று" எஸ். பி. பாலசுப்பிரமணியம் வந்து கூறினார்.

வாத்தியக்காரர்கள் எல்லோருக்கும் பணம் கொடுத்தாக வேண்டும் ரெக்காடிங் தியேட்டருக்கு வாடகை! பாரதிராஜா முகத்தில் ஈயாடவில்லை. எஸ். ஏ. ராஜ்கண்ணுதான் தயாரிப்பாளர். அவர், ஒரு தேங்காய் மொத்த வியாபாரி. பணத்திற்காக அவர்கள் பட்ட சிரமத்தை பக்கத்தில் இருந்து பார்த்தவன். ஒரு கட்டத்தில் பிலீம் சுருள் முடிந்து அடுத்த சுருள் வாங்க கிராமத்துப் படப்பிடிப்பிலிருந்து ஓடிவந்து பிலீம் வாங்கிச் சென்றதையெல்லாம் நன்கறிவேன். இதில் கமலஹாசன் கொடுத்த 'கெடுபிடி' வேறு.

"சரி வாசுவை வைத்து 'டிராக்' எடுத்து விடுவோம் பிறகு பாலாவை பாட வைக்கலாமென்று இளையராஜா கூறினார்".

'டிராக்' பாடுவதென்பது முழுப்பாட்டையும் இசையுடன் ஒருவரை பாடவைத்து முதலில் பாடியவரின் குரலை மட்டும் அப்புறப்படுத்திவிட்டு புதியவரின் குரலை அப்படியே அதில் சேர்க்கும் தொழில் நுட்பம் அங்கே அப்பொழுது பரவலாக இருந்தது. அப்படித்தான் எஸ். பி. பாலசுப்பிரமணியம் பிறகு பாடுவதற்காக முதலில் 'டிராக்' பாடினார் வாசுதேவன்.

வாசுவின் வாழ்க்கையில் "ஆட்டுக்குட்டி முட்டையிட்டு" மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவர் 'டிராக்' பாடப்போகிறோமென்று பாடாமல் முழு ஈடுபாட்டுடன் பாடினார்.

பிறகு குரல் நன்றாக அப்பாடலைப் பாட எஸ். பி. பாலசுப்பிரமணியம் வந்து வாசு பாடியதைப் போட்டுக்காட்டச் சொன்னார். பாடலைக் கேட்டுவிட்டு அவர் சொன்ன வார்த்தை அவரை இமயத்தின் உச்சிக்கு என் மனதில் ஏறி அமர வழி செய்தது.

"நானே பாடினாலும் இப்படி பாடியிருக்க மாட்டேன். வாசு அருமையாகப் பாடியுள்ளார். இதையே படத்திலும் வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

சினிமாவில் அடுத்த கலைஞனை பாராட்டுவதும் அங்கீகாரம் கொடுப்பதும் மிகவும் குறைவு. 'ஆணி' அடித்து கீழே இறக்குவதில் மிகமிகக் கவனமாக இருப்பார்கள். எஸ். பி. பாலசுப்பிரமணியம் மனதளவிலும் சரி இசையிலும் சரி ஒரு மாபெரும் மனிதன்.! அப்படியான மனிதர்களைப்பார்ப்பது மிகமிக அரிதாக உள்ளது. அதுவும் சினிமாவில்.

இதைப்போலத்தான் பாரதிராஜாவின் காதல் ஓவியம் படத்திலும் நடந்தது. "பூஜைக்காக வாழும் பூவே" பாடலை பாட முடியாத சூழலில் எஸ். பி. பாலா இருந்தார். உடனே தீபன் சக்கரவர்த்தியைக் கொண்டு 'டிராக்' பாடி பாடலை பதிவு செய்தார்கள். தீபனின் பாடலைக் கேட்ட பாலா அருமையா பாடியிருக்கிறார் இதையே பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று தீபனுக்கு அங்கீகாரம் கொடுத்தார்.

16 வயதினிலே வெளியாகும் சமயத்தில்தான் இளையராஜாவுடன் வாசுதேவன் மலேசியா வந்தார். அவரின் சகோதரர்கள் இளையராஜா, கங்கை அமரன் அவர்களின் அண்ணன் பாஸ்கருக்கு பெரிய விருந்து வைத்து ஆளுக்கொரு மோதிரத்தை பரிசாகக் கொடுத்தார்கள். வாசுவை மலேசியா அழைத்து வந்தமைக்காக மீண்டும் மீண்டும் எனக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மலேசியாவில் 1977ல் இளையராஜா இசைக்கச்சேரியை நடத்தியதில் எனக்கு ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் வெள்ளி நஷ்டம் ஏற்பட்டது.

அந்தக் குழுவில் வந்த டி. எம். எஸ் சொன்ன ஒரு வார்த்தை என் நஷ்டத்தை மறக்கடிக்கச் செய்தது. அவர் மலேசியா வந்த நேரம் சினிமாவில் ரஜனி, கமல், போன்ற இளம் நடிகர்கள் வந்துவிட்டதால் அவரின் பாடல்கள் சினிமாவில் வருவது குறைந்துவிட்டது.

"இப்பொழுது சினிமாவில் பாடுபவர்களின் குரல் இனிமையாக இருக்கிறது. ஆனால் உணர்ச்சி இல்லை. வாசுதேவன் ஒருவர் தான் எனக்கு நம்பிக்கையளிக்கிறார்" என்று டி. எம். எஸ் கூறிய பொழுது நான் உண்மையில் அதிர்ந்து போனேன். தன் வாயால் யாரையும் புகழாதவர் அவர், வாசுவைப்புகழ்ந்தது ஆச்சரியம்மட்டுமல்ல பெரிய அங்கீகாரமும் தானே!

எனது மலேசிய இசைநிகழ்ச்சிகளை முடித்து இளையராஜா சென்னை திரும்பிய பொழுது நானும் ஒருவராம் கழித்து சென்னை சென்றபொழுது தமிழ்நாடெங்கும் கேட்ட இரண்டு பாடல்கள் என்னை மகிழ்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றன.

'ஆட்டுக்குட்டி முட்டையிட்டு' பாடலும் 16 வயதினிலே படத்தில் ரஜனி பேசும் 'இது எப்படி இருக்கு' என்ற வசனமும் பேருந்துகளில் எல்லாம் எதிரொலித்தது.

அடுத்து இளையராஜா இசையமைத்து வாசு பாடிய "ஒத்தை ரூபா உனக்குத்தரேன், பத்தாடியும்

எடுத்துத்தாரேன்"என்ற பத்திரகாளி படத்தில் பாடிய பாட்டு தூள் கிளப்பியது.

ஒரு கடையின் மாடியில் இருந்த ஓர் அறையில் தான் வாசு நடியிருந்தார். அப்பொழுது அவருக்குத் திருமணம் முடிந்து விட்டது. இப்பொழுது நடிகராகவும் பாடகராகவும் உள்ள அவரின் மகன் யுகேந்திரன் முட்டிப்போட்டு நகரும் குழந்தை. அந்த சிறிய மாடி அறையில் அவரின் மனைவி அன்போடு பறிமாறிய உணவு இன்றும் என் நாவில் இனிக்கிறது. வாசு சொன்னதைவிட அவரின் மனைவி பொருளாதார நிலையை சொன்னது தான் அதிகம்.

எனக்கு மிகவும் சங்கடம் தந்த தருணம் அது. இன்றுவரை அவரின் மனைவி நன்றியோடு இருக்கிறார். மலேசியா வந்து சென்றபிறகு வாசு உச்சத்திற்குப் போனார். வாழ்க்கையில் அவர் மேலே மேலே போகும் பொழுது மிகவும் மகிழ்ச்சியடைந்தவன் நான் தான். அடிக்கடி போனில் தொடர்பு கொள்வார். ஒருநாள் தான் 'நீ சிரித்தால் தீபாவளி' படத்தை தயாரித்து இயக்கப்போவதாகக் கூறினார். நான் வேண்டாம் என்று முதலில் கூறினேன். பிறகு பிடிவாதமாக அவர் இருப்பதை பார்த்து மன்றாடினேன். கேட்க மறுத்தார். அவரின் அண்ணன் எம். எஸ். கோபாலிடம் கூறி படம் தயாரிப்பதை தடுக்கச் சொன்னேன். யாராலும் அவரை நிறுத்தமுடியவில்லை. அவரின் இசைத்துறையைப் போலல்லாது ஒரு படத்தை இயக்கும் திறமையில் எனக்கு சந்தேகங்கள் இருந்தன.

படம் வந்து தோல்வி கண்டது. வாசு பொருளாதாரத்தில் மிகவும் சிரமப்பட்டார். மன அமைதி இழந்திருந்த நேரத்தில் சினிமாவில்பாடும் வாய்ப்புகளும் குறைந்தன. அவர் ஒரு சாமியாரின் பரமபக்தராகி மன அமைதி காண முயற்சித்தார். சிறிது அமைதி கிடைத்திருக்கிறது என்றும் என்னிடம் கூறினார்.

ஏ. ஆர். ரஹ்மான் 1992ல் ரோஜா படத்திற்கு இசையமைத்து படம் வெளிவந்த பிறகு புதிய புதிய பாடகர்கள் வந்து விட்டார்கள்.

வாசு அமைதியாக இருந்தாலும் மிகவும் போராட்ட குணமும் துணிச்சலும் மிக்கவர்.

இமயம் படத்தில் சிவாஜிக்காக இவர் பாடியதை சிவாஜி கணேசன் விரும்பவில்லை. டி. எம். எஸ். சைப் பாடவைக்கச் சொன்னார். நேரே சிவாஜியிடமே போய் 'என் வாழ்க்கையையே நீங்கள் பாழாக்குகிறீர்கள் இப்படி செய்வது நியாயமா? என்று கேட்டு சண்டைக்கு நின்றவர் பராசக்தியில் உங்களைப் போடாமல் கே. ஆர். ராமசாமியை ஏவிம் போடச் சொன்னபொழுது உங்கள் மனம் எவ்வளவு பாதிப்படைஞ்சிருக்கும்? அதேமாதிரிதான் நான் இப்போ இருக்கேன்" இவரின் கோபத்தை பார்த்து சிவாஜி மிரண்டு போய் ஒரு கலைஞனுடைய வாய்ப்பை பறித்த குற்றம் எனக்கு வேண்டாம்பா நீயே பாடு" என்றார்.

இமயம் படத்தில் வாசு சிவாஜிக்காகப் பாடிய பாட்டு பிறகு வந்தது. அதன் பிறகு 'முதல் மரியாதை' படத்தில் வாசு பாடிய "பூங்காற்று திரும்புமா?" பாடலைக் கேட்டுவிட்டு சிவாஜி இவரை கட்டித்தழுவிப் பாராட்டியது வேறு கதை. முதல் மரியாதை படத்தின் வெற்றிக்கு வாசுவின் பாடல்களும் முக்கியக்காரணம்.

முன்பு எம். எஸ். வாசுதேவன் என்றுதான் இவர் அழைக்கப்பட்டார். எனது இசைக் கச்சேரிக்கு மலேசியா வந்து சென்ற பிறகே படங்களில் இவரின் பெயர் மலேசியா வாசுதேவன் என்று வர ஆரம்பித்தது.


தமிழ் நாட்டில் என்னை ஒரு சகோதரனைப்போல ஏற்று நடத்தியவர் மலையாளப்பட இசையமைப்பாளர் தேவராஜன். எனக்கும் அவருக்கும் இருக்கும் நெருக்கம் கோடம்பாக்கத்தில் பிரசித்தம். 1978ம் ஆண்டு வாசு என்னிடம் தேவராஜனிடம் சொல்லி எனக்கு மலையாளப் படங்களில் பாட வாய்ப்பு தரச் சொல்லுங்கள் என் தாய்மொழி மலையாளம்தான் என்றார். எனக்கு அப்பொழுதுதான் இவரின் தாய்மொழி என்று தெரியும். தேவராஜனிடம் இவரைப்பற்றிக் கூறினேன் மலையாளத்தில் இவர் பாடினாரா இல்லையோ என்பதை நான் பிறகு கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை.

அவருக்குக் கடைசி காலத்தில் ஒரு மன ஆதங்கம் இருந்தது. மலேசியா என்ற பெயரை தமிழ் சினிமா உலகில் பரவலாக்கியவன். நான் மலேசியாவில் பிறந்தவன். எனக்கு ஒரு 'டத்தோ' விருது கொடுக்கக் கூடாதா? 'மலேசியா வாசுதேவன்' என்பதே உலகத் தமிழர்கள் அனைவரும் கொடுத்த மிகப்பெரிய விருது. இதில் 'டத்தோ' விருது சேர்ந்தால் என்ன பெருமை வந்துவிடப் போகிறது என்று கூறினேன்.

"சாருகானுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்களே" என்றார்.

'மலேசியா வாசுதேவன்' என்பது தான் பெரிய அங்கீகாரம். அதற்கு மேல் எதற்கு பட்டமும் விருதும். சிலருக்கு விருதுகள் சிறப்புச் சேர்க்கும். விருதுகளுக்கே சிலர் சிறப்பு சேர்ப்பார்கள். வாசுக்கு விருதுகள் இல்லாவிட்டாலும் அவரே சிறப்புத்தானே?

## நூல் மதிப்புரை




- ஒருவருடத்திற்குள் வெளிவந்த நூல்களே நூல்மதிப்புரைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- நூல் மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும்.
- ஒரு பிரதி மட்டுமே அனுப்பினால் நூல் மதிப்புரை இடம்பெறாது.
- சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள் நூல் மதிப்புரைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- ஆசிரியர்

# அமைச்சரின் முகம்

சிங்களத்தில்: தெனகம ஸ்ரீவர்தன

தமிழில்: இக்பால் அலி

சனத்துக்கிடையால் அவன் மெல்லமெல்ல முன்னேறினான். தலையிலே சுமந்திருந்த பெட்டியின் கனதியால் அவன் சற்றே வளைந்து போனானா? அல்லது பிறப்பிலேயே கூன்முதுகா? சரியாகச் சொல்லத் தெரியவில்லை. அவன் அணிந்திருந்த கிழிந்துபோன பழைய காக்கிக் கோட்டின் எல்லாப் பைகளும் கடதாசித் துண்டுகளால் நிரம்பி வழிந்தன. ஆனால் அவன் கள்ளமாகக் காசுவைக்கும் உள் பொக்கற் இருக்கின்றதே அது மாத்திரம் வெறுமையாகக் கிடந்தது.

அவனது தலை சுமந்துநின்ற பெட்டியில் பழைய குடைப் பிடிகள், கம்பி, ஆணி, நூல் முதலியனவும் இரும்பாயுதங்கள் சிலவும் இடம்பிடித்திருந்தன.

"குடை... குடை..." அவன் பாதை நெடுகக் குரலெழுப்பிச் சென்றான்.

அமைச்சராகப் பதவியேற்ற மாகாண மந்திரி ஒருவருக்கு மாலைவேளை வரவேற்பு வைபவம் ஏற்பாடாகியிருந்தது. அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் தமது லொறிகளில் கிராமப்புறங்களிலிருந்து கொண்டுவந்து கொட்டிய சனத்தால் நகரம் நிரம்பியிருந்தது. மாலைவேளையில் வேலை எதுவுமின்றி சும்மா அலையும் கூலிக்காரரும் தொழிலாளர்களும் விழா மேடையருகே இடம்பிடித்து நின்றனர். மைதானப் புகுமுகத்தில் தோரணமொன்று கட்டப்பட்டிருந்தது. அதன் உச்சியில் அமைச்சரின் உருவப் படச் சட்டகம் பொருத்தப்பட்டிருந்தது. பொதுவாக தேர்தல் இல்லாத காலத்தில் அமைச்சர்கள் சிரிப்பதில்லை அல்லவா? ஆனால் மேலேயுள்ள அமைச்சரின் முகத்திலோ தாராளச் சிரிப்பு.

குடை திருத்துபவன் அந்தத் தோரணத்தையும் அதனோடிணைந்த மேடையருகே இடம் பிடிப்பதற்காகவும் முட்டிமோதும் சனத்திரளையும் அவதானித்தான்.

"குடை... குடை.." என்ற அவனது குரலுக்குக் காதுகொடுக்க எவரும் தயாராக இருக்கவில்லை. அதைவிடப் பெறுமதியான கதை மேடையிலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது.

"நாங்கள் உங்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு நாடு எவ்வளவோ முன்னேறி விட்டது. ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு? இப்பொழுது நாங்கள் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதை நிறுத்தப் போகிறோம். வெளிநாட்டுக்கு அரிசி ஏற்றுமதியாகும் நிலை உருவாகி வருகிறது. அதையும் நாங்கள் இந்த வருடமே செய்வோம்.

அமைச்சரின் கரகரப்பான குரலும் பேச்சுப்பாணியும் பெரும் குதூகலத்தை ஏற்படுத்தியது போலும்! கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

"நாங்கள் கட்டியெழுப்புவோம். சகோதரர்களே! நாட்டைக் கட்டியெழுப்புவோம்"

அமைச்சர் மேலும் உத்வேகத்தோடு குரலெழுப்பிப் பேசினார். முட்டிமோதிய சனமும் தங்களுக்குள் ஏதேதோ கதைத்துச் சத்தமிட்டனர்.

குடைக்காரன் பாதையருகே இடந்தேடி அமர்ந்து கொண்டான். கீழே வைத்த பெட்டியைப் பார்த்துப் பெருமூச்சுவிட்ட அவன், அதற்குச் சமமான இன்னொரு பெருமூச்சோடு சனங்களின் பேச்சுக்கு காது கொடுத்தான்.

எதுவும் அவனுக்கு விளங்கவில்லை. பேச்சாளர்களைப் போலவே பார்வையாளர்களும் பேசிக்கொண்டிருந்தார்கள். அமைச்சர் தனது பேச்சை முடித்துக்கொண்டு அமர்ந்தார். அப்போது பெரும் அமைதியேற்பட்டது.

அது அடுத்ததாக யார் பேசப்போகிறார் என்பதை அறிந்து கொள்வதற்கான அமைதி. அப்பிராந்தியத்தின் இன்னொரு மந்திரி பேசப்போவதாக தலைமைவகித்த, சமாதான நீதவானாகிய இறைச்சிக்கடை முதலாளி சொன்னார். அவரும் நாடு எவ்வாறெல்லாம் செழிப்படைந்துள்ளதென்பதை விபரிக்க ஆரம்பித்தபோது பார்வையாளர்களும் தங்களுக்குள் உரையாடலை ஆரம்பித்தனர்.

சனம் எதிர்பார்த்த விடயம் இறுதியாக அவர்களுக்குக் கிடைத்தது. ஆமாம்; சங்கீதக் கச்சேரிதான்

"அம்மா இல்லை அப்பா இல்லை.

அப்பம் தின்னக் காசுமில்லை"

சமகாலத்தில் பிரபலமாகியிருந்த சிறந்த பாடல் அது. பாடகர் ஆடிக்கொண்டே பாடினார்.

இடையீடின்றி எழுந்த கைதட்டல் ஒலியால் நகரமே அதிர்ந்தது. பார்வையாளர்களும் களைத்துப்போகும் வரை ஆடினர். பாடகர் பாடி முடித்தபோது கைதட்டல் மழையே பொழிந்தது.

இதைப் பார்த்து அமைச்சரின் முகம் சற்றே கோணலாகியது.

"எனக்கு எத்தனை பேர்தான் கைதட்டினார்கள்?" அவர் அருகிலிருந்த சக மந்திரியின் காதில் முணுமுணுத்தார்.

ஆனால் அவருக்கு அது கேட்கவில்லை. அவரும் 'அம்மா இல்லை அப்பா இல்லை. அப்பம் தின்னக் காசுமில்லை' என்ற பாடல் வரிகளை உருப்போட்டுக் கொண்டிருந்தார்.

'சங்கீத மாலை' முற்றுப் பெற்றபின் அமைச்சரின் ஆதரவாளர்கள் சனங்களை லொறிகளில் ஏற்றினர். பாய்களில் இருக்கை பிடிக்கச் சண்டை பிடித்த சிலர் தூசண வார்த்தைகளையும் தூவத்தவறவில்லை.

பெறுமதிசேர் கார்களும் பொலீஸ் ஜீப்களும் மைதானத்திலிருந்து வெளிக்கிளம்பின. அதில் ஏதாவதொன்றில் அமைச்சரும் போயிருப்பாரென குடைக்காரன் கருதினான்.

சில நிமிடங்களில் மைதானம் பாழடைந்தது.

குடைக்காரன் தன் உள் பொக்கற்றைத் தடவிப் பார்த்தான். அதுவும் பாழடைந்துபோயிருந்தது. அவனுக்கு வீட்டு ஞாபகம் வந்தது. பிள்ளைச் செல்வங்களின் முகங்கள் தெரிந்தன.

எப்படியோ இரவாகி விட்டது. சனத்துக்கு குடைதிருத்த இனி நேரமில்லை. அமைச்சர் சொன்னது போல் நாடு செழிப் படைந்திருக்கும் பழைய குடைகளை எதற்காகத் திருத்தவேண்டும்? தனது தலைக்குள் பிழையான எண்ணங்கள் ஊடுருவுவது போல் அவனுக்கு விளங்கியது.



அப்பா வரும் வரை வாசலருகே நின்று பாதையைப் பார்த்துக்கொண்டிருக்கும் குழந்தைகளின் ஞாபகம் அவனைத் துன்புறுத்தியது. இரவுணவைப் பற்றி இப்பொழுதே மனைவி நம்பிக்கை இழந்திருப்பாள். அவள் செய்த தென்னஞ் சிரட்டை அகப்பைகளை விற்றகாசுக்கு காலையில் தேங்காய் வாங்காமலிருந்திருந்தால் பாண் வாங்கியிருக்கலாமே என்று அவள் யோசித்திருப்பாள் இருந்தாலும் தேங்காயும் தேவைதானே?

ஐம்பது ரூபா.... ஒரேயொரு ஐம்பது ரூபா.

எப்படி தேடுவது? அவனிடம் பதிலில்லை!

அவனுக்கு அவனது பெட்டி மாத்திரமே தெரிந்தது. இனிமேல் அதனால் ஒரேயொரு ரூபாய் கூடத் தேடுவது சாத்தியமில்லை.

குடைக்காரன் எழுந்தான் மனதுக்குள் புதியதொரு உத்வேகம். உடனே பந்தலருகே சென்றான்.

அங்குமிங்கும் பார்த்தான் ....!

எவரையும் காணவில்லை...!

இருகைகளாலும் பலம்கொண்டு தோரணத்தை உசுப்பினான்.

குருத்தோலையாலும் தென்னம்பூவாலும் அலங்கரிக்கப் பட்ட தோரணத்தின் கீழ்ப்பகுதியை தொட்டுசுப்பியபோது, மேலிருந்த அமைச்சர் மெல்லத் தலைசாய்த்தார் மேலும் அசைத்தான். அது இன்னுமின்னும் வளைந்து, அமைச்சர் அமைதியாகச் சரிந்தார்.

குடைக்காரன் அமைச்சரின் உருவத்தை அப்படியே கழற்றியெடுத்தான். அது விசாலமானது. அவன் அதனை பெட்டியில் வைத்து தலையில் ஏற்றினான். இனி வீட்டுக்குப் போக வேண்டும் மகிழ்ச்சியான நினைப்பு.

அவன் பாதை நெடுகப் போகவில்லை. அங்குமிங்குமாக... குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து வீட்டை அடைந்தான்.

நினைத்தது சரி. பிள்ளைகள் முற்றத்தில் வழிபார்த்துக் காத்திருந்தனர்.

ஒருவன் ஓடிவந்து கையில் தொங்கினான். அடுத்தவன் தலைமீதுள்ள அபூர்வப்பொருள் என்னவென்று கவனித்தான். மனைவி விடியாத முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா இன்னைக்கு சோறா? பாணா?" சின்னவன் கேட்டான்.

"சோறு" குடைக்காரன் சொன்னான்.

சின்னவனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவன் எப்பொழுதும் சோறு சாப்பிடத்தான் விருப்பம். இருந்தாலும் பாணோ ரொட்டியோதான் பெரும்பாலும் சாத்தியம்.

"இனி... எப்பப்பா அரிசி?" மூத்தவன் வெடுக்கென்று கேட்டான்.

அவன் தலைச் சுமையை இறக்கி வைத்தான்.

இந்த அபூர்வப்பொருள் என்னவென்று மனைவி குப்பிவிளக்கைத் தூக்கிப் பிடித்தபடி பார்த்தாள்.

"இதென்ன இவர் தேர்தல் காலத்தில் வரும் ஆளல்லவா?" – அவள் வியந்து கேட்டாள்.

"சத்தம் போடாதீங்க. இது ஒன்றுமல்ல. எங்கள் இரவுச் சாப்பாடு" – குடைக்காரன் தாழ் குரலில் சொன்னான்.

"சாப்பாடு!" மனைவி கோபத்தோடு கொதித்தாள்.

"இன்று ஒரு சத்தம்கூடக் கிடைக்கவில்லை நான் இதைத் தூக்கிக் கொண்டுவந்துவிட்டேன்"

"இதை சாப்பிடவா கொண்டுவந்தீங்க? உங்களுக்கென்ன பைத்தியமா?" மனைவி அந்த உருவச் சட்டகத்தை ஒரு பக்கமாகத் தள்ளிவிட்டாள்.

"இங்க வாங்க.... எப்பிடிச் சாப்பிடுறதென்னு சொல்றன். கத்தியொன்று..." குடைக்காரன் மூத்தவனைப் பார்த்தான்.

அவன் கத்தியோடு வந்தான்.

"இங்க... இதச் செய்ற முறைய நான் நேற்றுக் கவனித்தன். இந்த முகம் அரிசிமணியால்தான் செய்யப்பட்டிருக்கு." குடைக்காரன் கூறினான்.

மூத்தவன் சற்றே நெருங்கினான்.

"இது களியால் செய்யப்பட்டதென்று...." என்று கூறியபடி அவன் மெல்ல அமைச்சரின் தலையைத் தடவிப் பார்த்தான்.

உண்மைதான். அரிசிமணிகளால்தான் அமைச்சர் செய்யப்பட்டுள்ளார் என்பது எல்லோருக்கும் உறுதியாகிவிட்டது.

குடைக்காரன் கத்தியால் அமைச்சரின் தலையை வழித்தான். அரிசிமணிகள் சிதறிவிழுந்து தலைவேறாகிற்று.

நிறமூட்டப்பட்ட அரிசிமணிகளை அரிக்கன் சட்டியில் போட்டான் மூத்தவன்.

சின்னவன் பழைய தகட்டுத் துண்டொன்றைத் தேடிக் கொண்டுவந்தான்.

"அப்பா நான் ரெண்டு கண்ணையும் தோண்டுறன்" என்றவாறு அவன் கண்களைச் சுரண்டினான். மெல்ல மெல்ல அமைச்சரின் கண்கள் காணாமல் போயின.

மனைவியும் விடுவாளா? அவள் மூக்கைத் திருகினாள்.

மூத்தவன் அமைச்சரின் பற்களைப் பிடுங்கினான்.

"பாத்தீங்களா நாங்கள் அமைச்சரின் முகத்தை சாப்பிட்டுவிட்டோம்" மூத்தவன் சிரித்துச் சிரித்துக் கூத்தாடினான்.

"சரி சரி இனி மார்பையும் சாப்பிடுவம்" மனைவி சொன்னாள்.

குடைக்காரன் கத்தியைக் கீழ்ப்பக்கமாகக் கொண்டு போனான். அரிசிமணிகள் ஒவ்வொன்றாக விழத்தொடங்கின.



"மார்புக் கூட்டுக்குள்ளதான் இருதயம் இருக்கு" மூத்தவன் பள்ளிப்பாடத்தை ஞாபகமூட்டினான்.

"அதையும் சேர்த்து நான் அறுத்தெடுக்கிறன்" குடைக்காரன் விடவில்லை.

"அரிசி ஒரு சுண்டைவிட அதிகமாக இருக்கு" மனைவியின் மதிப்பீடு.

குடைக்காரன் நெஞ்சுக்கு ஊதியபடி வெளியேவந்தான். அவனுக்கு நன்றாக வியர்த்திருந்தது. மனைவி அரிசியை அள்ளிக்கொண்டு சமையலறைக்குச் சென்றாள்.

விரைவாக அரிசி அவிந்தது. அதற்கிடையில் மனைவி தேங்காய்ச் சம்பலொன்றையும் செய்தெடுத்தாள்.

குடைக்காரனுக்கும் பிள்ளைகள் இருவருக்கும் தட்டில் சோறு பகிர்ந்துகொடுத்துவிட்டு தனது பங்கை சட்டியிலேயே வைத்துக் கொண்டாள். அவளுக்கு ஐந்தாறு சோற்றுப்பிடிகூட இருக்கவில்லை. குடைக்காரன் தனது பங்கால் பிள்ளைகள் இருவருக்கும் மேலும் சிறிது பகிர்ந்தான்.

"அப்பா நீங்க பாண் கொண்டுவராதது நல்லது" சின்னவன் சொன்னான்.

சோறு சாப்பிடும் நாட்களில் பிள்ளைகளின் மகிழ்ச்சி எத்தகையதென்று அவனுக்குத் தெரியாதா என்ன?

"அப்பா நாளைக்கு இன்னொரு அமைச்சர தூக்கிக்கொண்டு வாருங்கொ" மூத்தவனின் வேண்டுகோள்.

வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய அளவுக்கு அரிசி உற்பத்தி நடப்பதாக அமைச்சர் சொன்னது அவனது காதுக்குள் எதிரொலித்தது.

"அது பொய்யாக இருக்க முடியாது. உருவப்படம் செய்ததுகூட அரிசியால்தானே" அவனை அறியாமலேயே உதடுகள் முணுமுணுத்தன.

"அமைச்சரால நாங்க ஒரு நேரமென்டாலும் பசியாறினோம் அல்லவா?" மனைவி மகிழ்ச்சி தெரிவித்தாள்.

'அமைச்சர் அவர்களே உங்களுக்கு நன்றி? மனதால் சொல்லிக்கொண்ட குடைக்காரன், இரைப்பையில் வெறுமையாய்க் கிடந்த பெரும் பகுதியை ஒரு கோப்பைத் தண்ணீர் அள்ளிக்குடித்து நிரப்பிக்கொண்டான்.



# சில நேரங்களில் நினைவுகள்

மட்டுவில் ஞானக்குமரன்

நூலகங்களுக்குப் போகும் போதுதானே
உறைக்கிறது
இதுவரை கற்றது
எள்ளளவுகூட இல்லை என்று


அலைகளைப் பர்ர்க்கையிலே தான்
எழுவதும்
விழுவதும்
வாழ்க்கைக்கும் பொது என்பதை
ஏற்க முடிகிறது.

எந்த நாடு போனால் என்ன
தின்ற பின்னே உள்ள
மிச்சச் சோற்றிலே
தெரிகிறது
எனது செல்ல நாயின் நினைப்பு

என் தாத்தா
மென்று துப்பிய வெத்திலைச்
சாறிலே
ஊர் அடங்கிய
முள்ளிவாய்க்கால் செவ்வாறு
நினைவுக்கு வருகிறது.

# அரசர்கள்

ஆசி கந்தராஜா
அவுஸ்திரேலியா



-1-

டிஸ்கோ பண்டா, பேர்ளின் சுரங்கவண்டி நிலைய வாங்கொன்றில் அமர்ந்திருந்தான்.

அவன் அருகில் நிறை வெறியில் சில்வா!

டிஸ்கோ பண்டாவின் வாயிலிருந்தும் அல்க்ககோல்நெடி வீசியது. அவன் போதையில் தடுமாறவில்லை. நிதானமாகவே புகையை உள்ளுக்கு இழுத்து வளையம் வளையமாக வெளியே ஊதிக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரதும் வாழ்க்கை தடம்மாறி, தள்ளாட்டத்துடன் உருண்டு கொண்டிருப்பதை அவர்களுடைய தோற்றங்கள் வெளிப்படுத்தின. இருவரும் ஒரு காலத்தில் என்னுடன் படித்த கலாசாலை மாணவர்கள்.

-2-

ஜேர்மனியில் படித்த காலத்திலே டிஸ்கோ பண்டா எனக்கு அறிமுகமானான்.

ஜேர்மனி, கிழக்கும் மேற்குமாக இரண்டு நாடுகளாகப் பிரிந்திருந்த காலத்தில் இது நடந்தது. பண்டா அப்போது கிழக்கு ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தான்.

இடையில் ஒரு வரலாற்றுக் குறிப்பு!

1949 ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி தொடக்கம், 1989 நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதிவரை நாலு தசாப்தங்கள் ஜேர்மனியின் கிழக்குப்பகுதி, கம்யூனிச ஆட்சியின்கீழ், ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு என்ற பெயருடன் விளங்கிற்று. அந்தக் காலங்களில், வளர்முக நாடுகளிலுள்ள கம்யூனிசக் கட்சிகள், தங்கள் ஆதரவாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசுகள் வழங்கி கம்யூனிச நாடுகளுக்கு அனுப்பிவைத்தன.

இந்தவகையில் கிழக்கு ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தவன்தான் பண்டா. கிராமத்து விவசாயியான அவனுடைய மாமா கம்யூனிசக்கட்சியின் தீவிர அங்கத்தவர். அவருக்கு கட்சியில் இருந்த செல்வாக்கு காரணமாகவே பண்டாவுக்கு கிழக்கு ஜேர்மனி வரும் அதிர்ஷ்டம் வாய்த்தது. மாமாவுக்கு ஒரு அழகான பெண் இருப்பதாகவும், அவளையே படிப்புமுடிய கல்யாணம் செய்து கொண்டு இனிதே வாழப்போவதாகவும் பண்டா வந்த புதிதில் இலங்கை மாணவர்கள் மத்தியில் சொல்லித்திரிந்தான்.

பண்டா மகியங்கனை காட்டின் அயலிலுள்ள சிங்கள கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். ஆங்கில மொழி அறிவு குறைவு. ஜேர்மனிக்கு விமானம் ஏறுவதற்குத்தான், அவன் முதன்முதலிலே கொழும்பு வந்தவன் என சில்வா எப்போதும் அவனுக்குப் பழிப்புக்காட்டுவான். பண்டா அதனை பொருட்படுத்துவதில்லை.

ஜேர்மனியில் ஆங்கில மொழி ஒரு செல்லாக் காசு. சகல அலுவல்களும் அங்கு ஜேர்மன் மொழியில்தான். படிக்க வரும் மாணவர்களுக்கு ஒரு வருடம் தீவிர ஜேர்மன் மொழிப்பயிற்சி தரப்படும். அதன்பின் அவர்கள் பல்கலைக்கழகத்தில் ஜேர்மன் மொழியிலேயே கல்வி கற்கவேண்டும். தண்ணீரில் குதித்தால்தான் நீந்தப்பழகலாம் என்பார்களே. இதை மொழிப்பயிற்சியில் அவர்கள் கடைப்பிடித்தார்கள்.

ஜேர்மனிக்கு பண்டா வந்த அதே மாணவர் குழுவில் வந்தவன்தான் சில்வா. அவனுக்கு தான் கொழும்பு 'கறுவாத்தோட்டத்தான்' என்கிற கெறு. அந்தப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக பணக்காரர்களே வாழ்ந்தார்கள். அவனுடைய தந்தைக்குப் பணத்தினாலே சம்பாதிக்க முடிந்த அரசியல் தொடர்பும் இருந்தது. இதனால், கொழுத்த வருவாய்தரும் அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் சகல அதிகாரங்களும் கொண்ட பொது முகாமையாளராகப் பவனிவந்தார்.

சில்வாவின் தகப்பனுக்கு கிழக்கு ஜேர்மன் தூதுவருடன் இருந்த நட்பால், நேரடியாகப் புலமைப்பரிசில் பெற்று பல்கலைக்கழகத்துக்குப் படிக்க வந்தான் சில்வா. அவன் மேட்டுக்குடிச் சிங்களவனின் கொழுப்புடன் வளர்ந்தவன். ஜேர்மனிக்கு வந்த பின்னரும் சிறிது காலம், அந்தக் கொழுப்புக் கரையாத மிடுக்குடன் வாழ்ந்தான்.

உண்மையைச் சொன்னால், பண்டாவின் நெற்றியில் கிராமத்தான் என்று எழுதி ஒட்டியதுபோலவே தோன்றினான். சக சிங்கள மாணவர்களுக்கு அவனுடைய கிராமியத்தை கேலி செய்வது இன்பமான பொழுது போக்காக இருந்தது. அவனுக்கு முன்னாலேயே அவனை மையமாக வைத்துப் பல மோசமான மோடிக் கதைகள் புனைந்து பரிகசிப்பார்கள். அதிக காலம் இந்த நிலைமை நீடிக்க பண்டா விட்டுவிடவில்லை.

தோல்வியை ஒப்புக்கொள்ளாத கிராமத்துப் போராளி அவன். இந்தக் கேலிகளை ஒரு சவாலாக ஏற்று, கிராமத்தானிடம் இயல்பாக உள்ள ரோச உணர்ச்சியுடன் ஜேர்மன் மொழியை வசப்படுத்தி விறுவிறுவென முன்னேறினான்.

அந்தக் காலங்களில் அங்குள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அதற்கான விடுதியில்தான் தங்க வேண்டும். பெண்கள் ஆண்கள் அனைவருக்கும் ஒரேவிடுதிதான். விடுதி அறைகள் புறாக்கூடு போன்று சிறியவை. மேலும் கீழுமாக இரட்டைத் தட்டுக் கட்டில் போட்டிருப்பார்கள். அறையில் வெளிநாட்டு மாணவன் தங்கியிருந்தால், அவனுடன் ஜேர்மன் மாணவன் ஒருவனை இணைத்திருப்பார்கள். அந்தவகையில் பண்டாவின் அறையிலே எரிக் குடியிருந்தான்.

அறையில் வசிக்கும் சகா பெரும்பாலும் கொம்யூனிச கொள்கையில் பிடிப்புள்ளவனாக இருப்பான். இது ஒரு வகையில் மூளைச்சலவை செய்யும் தந்திரம் அல்லது

கண்காணிப்பு நடவடிக்கை என்று அந்நிய மாணாக்கர் குசுகுசுக்கவும் செய்தார்கள்.

எது எப்படியிருந்தாலும், பல்கலைக்கழக விடுதிகளில், கேளிக்கைகளுக்கு குறைவிருக்கவில்லை. புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவிரவாக விடுதியின் மேல்மாடி கிளப்பில் 'டிஸ்கோ' நடைபெறும்.

இந்த மூன்று நாட்களையும் பண்டா தவறவிடுவதில்லை. தன் கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ள டிஸ்கோ நிகழ்ச்சிகளை அவன் மகாகெட்டித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டான். முயற்சி பயன் தந்தது. அவனது பெயருடன் 'டிஸ்கோ' ஒட்டிக்கொண்டு நாளடைவில் அவனது பெயர் டிஸ்கோ பண்டா எனப் பிரபலமடையலாயிற்று.

கிராமத்தில் பண்டா கண்டிய நடனத்தை முறைப்படி பயின்றவன். கொண்டாட்ட நாட்களிலே போர்த்துக்கேயர் ஆட்சியின் சின்னமாகச் சிங்களவருடன் ஒட்டிக்கொண்ட 'பைலா' ஆட்டங்களிலும் சிரத்தையுடன் கலந்து கொள்பவன். இவை கைகொடுக்கவே, மேல்நாட்டு டிஸ்கோ நடனங்களைச் சிரமமின்றி பழகி ஒரு வருடத்துக்குள் சிறந்த ஆட்டக்காரன் என புகழும் பெற்றான்.

ஜேர்மன் பல்கலைக்கழக பெண்களும் இவனுடன் போட்டி போட்டுக் கொண்டு ஆடத்தொடங்கவே, ஜேர்மன் மாணாக்கரிடையே பண்டா மிகவும் பிரபல்யமாகிவிட்டான். அவனைக் கேலி செய்த சிங்கள சகாக்கள் இதைக்கண்டு வாயைப்பிளந்து வீணீர் வடிக்காத குறைதான்.

பல்கலைக்கழகத்தின் இரண்டாம் ஆண்டு முடிவில் டிஸ்கோ பண்டா பட்டிக்காட்டுச் சிங்களவனல்ல. அவன் ஒரு 'மொடோன்' சிறீலங்கன்!

அவனது ஆங்கில மொழி அறிவின்மை, ஜேர்மன் மொழி பயில்வதற்கு வசதிசெய்திருக்கலாம். ஒரு குழந்தை தாய் மொழியை எப்படி நேரடியாகக் கற்கிறதோ அதே போல பண்டாவும் ஜேர்மன் மொழி பயின்று ஒறிஜினல் ஜேர்மன்காரன்போல் பேசினான். ஜேர்மன் மொழியிலேயே பண்டா சிந்திக்கத் துவங்கியது, பல்கலைக்கழக படிப்பில் முன்னிலைக்கு வருவதை இலகுவாக்கியிருக்கலாம்.

ஆரம்ப நாட்களிலே பண்டாவை கேலி செய்த சகாக்கள் 'அப்பே சகோதரய' என இப்போது பவ்யமாக பழக ஆரம்பித்தார்கள். சில்வா அவனுடன் வலிந்து நட்பு பாராட்டத் துவங்கிய காலத்திலே, பண்டாவின் உதட்டில் ஓர் அர்த்தமுள்ள புன்னகை முகிழ்ந்து மறைவதை நான் அவதானித்திருக்கத் தவறவில்லை.

கொம்யூனிச ஆட்சியில் ஆடம்பரப் பொருள்களை 'முதலாளித்துவச் சீரழிவு' என்று ஒதுக்கும் மனோநிலை வளர்க்கப்பட்டது. அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதில் மட்டும் மனித மனம் திருப்திப்படுகிறதா?

மேற்கு ஜேர்மனியில் அமோகமாக உலவிய ஆடம்பரப் பொருள்களை ஏன் கிழக்கு ஜேர்மன் மக்கள் இழக்கவேண்டும் என்கிற ஆதங்கம் காலப்போக்கிலே அதி வளர்ச்சி காணலாயிற்று.

கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மனிக்கு செல்லுதல் மிகவும் சிரமமாக்கப்பட்ட நிலையிலும் வெளிநாட்டு மாணாக்கர்கள், அங்கு தங்கு தடையின்றி சென்று வந்தார்கள். இது சர்வதேச சமூகத்தில் நல்லபிப்பிராயம் சம்பாதிக்கும் உத்தியே. இதனைப் பயன்படுத்தி வெளிநாட்டு மாணாக்கர் மேற்கு ஜேர்மனி சென்று ஆடம்பரப் பொருட்களை கிழக்கு ஜேர்மனிக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள்.

கிழக்கு ஜேர்மன் பணம் மேற்கு ஜேர்மனியில் செல்லாது. ஆனால் சில்வாவுக்கோ, கிடைக்கும் புலமைப்பரிசில் பணத்துக்கு மேலதிகமாக அவனது தந்தை இலங்கையில் இருந்து அமெரிக்க டொலர்களை கிரமமாக அனுப்பி வந்தார். இதனால் அவன் ஒரு கொம்யூனிச நாட்டில், முதலாளி என்ற திமிருடன் வாழமுடிந்தது.

குடும்பத்தின் பரம்பரைச் செல்வாக்கில் சில்வா மேல்தட்டு வாழ்க்கையைச் சுகித்தவன். தனித்திறமை எதுவுமில்லை. ஜேர்மன் மொழியின் கடினமான இலக்கணத்தையும் அவனால் கிரகித்துக் கொள்ள இயலவில்லை. மொழிச்சிக்கலினால் சில்வாவின் பல்கலைக்கழகப் படிப்பும் சில்லெடுப்பாக மாறத்துவங்கியது.

ஜேர்மன் இளம் பெண்களுடன் பண்டாவுக்கு இருக்கும் செல்வாக்கைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்பிய சில்வா, இப்பொழுது பண்டா எதைச் சொன்னாலும் கேட்கும் நிலைமைக்கு மாறிவிட்டான். இதெல்லாம் சகஜம் 'மச்சாங்' என்பது சில்வாவின் சமாதானமாக அமைந்தது. இருவரும் அடிக்கடி மேற்கு ஜேர்மனி சென்று அமெரிக்க டொலரில் ஆடம்பரப் பொருள்களை வாங்கிவரத் துவங்கினார்கள்.

பண்டா கொண்டுவரும் ஆடம்பரப் பொருள்கள், அவனது டிஸ்கோ ஆட்டம், ஜேர்மன் மொழிப் புலமை எல்லாம் ஜேர்மன் நாட்டின் வெள்ளைக்காரக் 'குட்டிகள்' மத்தியிலே அவனுடைய செல்வாக்கை அசுர வேகத்தில் வளர்க்க உதவின.

பண்டா என்னதான் 'மொடோனாக' மாறினாலும் சாப்பாட்டு விடயத்தில் கிராமத்துச் சிங்களவன்தான். அவனுக்கு சோறு வேண்டும். சிரமம் பாராமல் நன்றாகச் சமைப்பான்.

மேசை கதிரை இருந்தாலும் பீங்கானிலே சோற்றைப் போட்டு ஒரு கையில் ஏந்தி, மறுகையால் உதறி உதறி குழைத்துச் சாப்பிடுவான். சனி ஞாயிற்றுக்கிழமைகளில் அவன் சமைக்கும் சோறும், பருப்பும், தேங்காய் சம்பலும், மாலு மிரிஸ் கறியும் அங்கு படித்த இலங்கை மாணாக்கரிடையே மிகவும் பிரசித்தம். சிங்கள மண்ணின் சமையல் கலையை ஐரோப்பிய மண்ணிலே நிலை நாட்டியதாக அவனைப் புகழ்ந்து தள்ளினார்கள்.

நாங்கள் அனைவரும் வார இறுதியில் சாமான்களை வாங்கிக் கொண்டு பண்டா முன் ஆஜாராவோம். எல்லோருக்கும் சேர்த்து பண்டாவே சிரமம்பாராது சமைப்பான். நாங்கள் அவனுக்கு தொட்டாட்டு வேலைகள் செய்வோம். அவனது அறையில் வசித்த ஜேர்மன் சகா 'எரி'க்கும் இப்போது கறி சோறு சாப்பிடப் பழகிவிட்டான். சமையலுக்கு தன் பங்காக அவன் திறமான கோழி இறைச்சி வாங்கிக் கொண்டு வருவான்.

மாலை ஆறுமணியானதும், பண்டா குளித்து 'சென்ற்' அடித்து டிஸ்கோவுக்கு கிளம்பி விடுவான். நாங்களும் அவனுடன் சேர்ந்து போனாலும், அவனுக்கு வாய்க்கும் அதிஸ்டம் மற்றவர்களுக்கு கிடைப்பதில்லை. பெண்கள் கூட்டத்தின் மத்தியில் பண்டாவுக்கு இருந்த செல்வாக்கைப் பார்த்து நாங்களெல்லாம் பொறாமைப்பட்டது உண்மைதான். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்வதில்லை.

கறுவாத் தோட்டத்து மேட்டுக்குடிப் பிறப்புக் கர்வம் சில்வாவை உலுக்கி எடுக்கவே, 'இந்தா நானும் ஒரு பெட்டையை பிடிக்கிறன்' என்று அமெரிக்க டொலர்களை விசுக்கி எறிந்தான். இறுதியில் ஒருநாள், ஒரு பெண்ணைக் கூட்டிவந்து, அவள் தன்னுடைய சிநேகிதி என்றும் அவள் பெயர் 'மோனிக்கா' என்றும், அறிமுகப்படுத்தினான். அவளுக்கு சில்வாவிலும் பார்க்க, குறைந்தது ஐந்து வயதாகிலும் அதிகமாக இருக்கும் என்பது, அவளுடைய முதிர்ந்த முகத்தைப் பார்த்ததுமே தெரிந்தது. மோனிக்காவுடன் ஒரு சிறுவனும் வந்திருந்தான். தன்னுடைய முந்திய சிநேகிதனுக்கு பிறந்த மகன் என்று கூச்சப்படாமல் அறிமுகம் செய்து வைத்தாள்.

சிரிப்பை நான் என்னுள் அடக்கிக்கொண்டேன்.

'என்ன சில்வா, கண்டோண்ட மாட்டை அவிட்டிருக்கிறாய்' என ஜேர்மன் மொழியில் அருகில் நின்ற பரமசிவம் கேட்டான். அவன் இயல்பாகவே ஓர் 'ஓட்டைவாயன்'!

பரமசிவம் ஜேர்மன் மொழியில் கேட்டது சில்வாவுக்கு கொதியைக் கிளப்பவே 'போடா தமிழ் நாயே' எனக் கத்தினான்.

'என்னடா...?' என கோபத்துடன் எழும்பினான் பரமசிவம். தமிழ் மொழி, தமிழ் இனம் என்ற விடயங்களில் அவன் எப்போதும் உணர்ச்சி வசப்படுவான். கொம்யூனிச கட்சியின் வீ. பொன்னம்பலம் உதவியுடன் கிழக்கு ஜேர்மனிக்கு படிக்க வந்தவன். சுன்னாகத்தில் விவசாயம் செய்த ஏழைக் சுமக்காரனின் மகன். மண்வெட்டி பிடித்து உரம் பாய்ந்த கைகள். அவன் அடித்தால் சில்வா நொருங்கிப் போவான்.



இனரீதியாக நிலைமை திசை திரும்பும் விபரீதத்தை புரிந்து கொண்ட பண்டா, அசலான கொம்யூனிச பரம்பரையில் வளர்ந்தவன் என்கிற தோரணையில் 'இனிமேல் சாப்பிட வருவதென்றால் இங்கு தமிழ் சிங்கள துவேசம் இருக்கக்கூடாது' எனக் கண்டிப்புடன் கூறினான். பண்டாவின் சாப்பாட்டுச் சுவை இருவரையும் பெட்டிப் பாம்பாக அடக்கிவிட்டது.

எரிக்கிக்கு தமிழ் சிங்கள அரசியல் அவ்வளவாகப் புரியாது. கிழக்கு ஜேர்மனிக்கு அப்போது மேற்கு நாடுகளின் சஞ்சிகைகள் பத்திரிகைகள் இறக்குமதி யாகாததால், வாசித்து அறியும் வாய்ப்பும் குறைவு. அங்கு படித்த பதினேழு சிறீலங்கன் மாணவர் களுள் நானும் பரமசிவமும் மாத்திரமே தமிழர்கள் என்பதால், அரசியல் விசயத்தில் அடக்கியே வாசித்தோம். இருப்பினும் சில்வாவின் சிங்கள திமிர்க் கதைகளுக்கு பரமசிவம் பொங்கி எழுவான். உணர்ச்சிகளின் கொம்புதலினால் எதுவும் நடக்கமாட்டாது என்பதை விளக்கி பரமசிவத்தை ஓரளவு அடக்கி வைத்திருந்தேன்.

எரிக் நாளடைவில் தமிழ் சிங்களப் பிரச்சனையின் ஆதிமூலத்தை எப்படியோ அறிந்து கொண்டான். சில்வா துவேஷம் பேசும் போதெல்லாம், எரிக் அவனைக் கண்டிப்பான். பண்டா எரிக்குக்கு துணை நிற்பான்.

சில்வா கிடைக்கும் பணத்தில் பெரும்பகுதியை மது குடிப்பதில் செலவழித்துவிடுவான். இலங்கையில் அரசாங்கம் மாறியதால் சில்வாவின் தந்தை வகித்த பதவியும் பறிபோனது. அதிகார துஷ்பிரயோகம் செய்தவர் என புதிய அரசால் குற்றம் சாட்டப்பட்டார். அவருடைய செல்வாக்கும் ஆடம்பரமும் சுருங்கின. இதனால் வீட்டில் இருந்து வந்த டொலர்களின் வரத்தும் குறைந்தது.

நாங்கள் படித்த காலத்தில கிழக்கு ஜேர்மன் இளம் பெண்கள் மத்தியிலே ஒரு 'போக்கு' இருந்தது. அவர்கள் வெளிநாட்டுப் பிரஜையைத் திருமணம் செய்தால் கணவனின் நாட்டுக்கு செல்ல சட்டப்படி உரிமையுண்டு. 'கணவன் நாட்டுக்குச் செல்கிறேன்' எனச் சாக்குச் சொல்லி எல்லையைக் கடந்து மேற்கு ஜேர்மனிக்கு வந்ததும், பெரும்பாலான பெண்கள் தற்காலிக கணவனைக் கழற்றிவிட்டு, புதிய இடத்தில் புதுவாழ்க்கையைத் துவங்குவதற்கு அலைவதும் வழக்கமாகிவிட்டது.

இந்த உத்தியை மோனிக்கா நன்கு அறிந்திருந்தாள். மேற்கு ஜேர்மனி சென்று புதிய வாழ்க்கை ஒன்றினை அமைப்பதுவே அவளுடைய திட்டம். இதற்காக அவள் சில்வாவின் சபலத்தினை முறையாகப் பயன்படுத்தி அவனுடன் தொற்றிக் கொண்டாள்.

சில்வா படிப்பில் கெட்டிக்காரன் அல்ல. ஆடம்பரச் செலவாலும், குடியாலும் சில்வா படிப்பில் கோட்டைவிட பல்கலைக் கழகம் அவனை வெளியேற்றியது. படிக்காவிட்டால் கிழக்கு ஜேர்மனியில் வசிக்க முடியாது. இதனால் மோனிக் காவை சட்டப் படி மணம் முடித்து, மாடும் கன்றுமாக கிழக்கு ஜேர்மனியை விட்டு வெளியேறி விட்டான்.

அவனுக்கிருந்த மேட்டுக்குடி திமிர் காரணமாக அதன்பிறகு அவனைப்பற்றி அவனது சகாக்களும் அதிகமாகக் கவலைப் படவில்லை.

டிஸ்கோ பண்டா படிப்பும் டிஸ்கோவுமாக சுற்றித் திரிந்தான். அவனது 'மன்மத செல்வாக்கு' அவனுடன் கூடப்படித்த போலந்து நாட்டுப் பெட்டையின் வயிற்றில் விளைந்தது. இருவரும் பல்கலைக் கழகப் படிப்பின் இறுதியாண்டில் படிக்கும் போது, பண்டாவின் ஆண் குழந்தையைப் போலந்து பெண் பெற்றெடுத்தாள்.

அதற்குப்பின் பண்டா அடங்கிவிட்டான். அந்தப் பெண்ணுடனும் குழந்தையுடனும் அவன் வேறொரு விடுதியிலே தங்கியிருந்தான்.

நாங்களும் தேவையில்லாமல் அவர்களுக்கு தொந்தரவு கொடுப்பதைத் தவிர்த்துக் கொண்டோம்.

'மாமன்ரை பெட்டையின்ரை நிலை என்ன? என்று பண்டாவைக் கேக்கட்டோ' என பரமசிவம் என்னை இடையிடையே கேட்பான்.

'சும்மா இரு. உள்ளதுக்கை நல்ல சிங்களவன் அவன்தான். அவனையும் விரோதியாக மாற்றிவிடாதே' என பரமசிவத்தை வழக்கம் போல தடுத்து வைத்திருந்தேன்.

துள்ளுற மாடு பொதி சுமக்கும் என்பார்கள். அது பண்டாவின் விஷயத்திலும் நடந்தது. படிப்பு முடிய போலந்து நாட்டுப்பெண் நாடு திரும்ப வேண்டும். போலந்து நாட்டின் அப்போதைய கம்யூனிச அரசும் பெண்ணின் உறவினர்களும் பண்டாவை ஏற்கத் தயாரில்லை. அவள் போலந்து நாட்டுக் கடவுச்சீட்டு வைத்திருப்பதால், ஜேர்மன் பெண்களைப்போல மேற்கு ஜேர்மனிக்குச் செல்லும் வாய்ப்பு இருக்கவில்லை.

போலந்துப் பெண் ஒரு நாள் திடீரென்று காணாமல் போய்விட்டாள்.

கொம்யூனிச அரசின் கெடுபிடிகளினால் அவள் தனது சொந்த இடமான Krakkow நகருக்கு குழந்தையுடன் சென்று விட்டதாக மற்றைய போலந்து நாட்டு மாணவர்கள் பேசிக் கொண்டார்கள். அந்தக் கூற்றின் உண்மையை உறுதி செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்த சம்பவத்தின் பின்னர், பண்டா சில நாள்கள் நாயோட்டம் பேயோட்டம் என்று அலைந்தான். பின்னர் படிப்படியாக மனம் தேறியவனாக பழைய டிஸ்கோ பண்டாவாக மாறினான்.

> 'இப்ப தமிழன் அரசியல் பேசமாட்டான்தான்... ஏன் தெரியுமா...? நாங்கள் அவங்களுக்கு மண்டையிலை அடிபோட்டு, கோவணம் கட்டிஅல்லோ அனுப்பி வைச்சனாங்கள்...'

இறுதி ஆண்டின் இறுதி பரீட்சையை நெருங்கிக்கொண்டிருந்தோம். எங்கள் எல்லோரது படிப்பும் நிறைவுறும் தறுவாயிலிருந்ததால், மற்றவர்கள் வாழ்க்கையைப்பற்றி அக்கறைப்பட நேரமில்லாத அவதி. ஒவ்வொருவரும் தத்தமது எதிர்காலங்களைத் திட்டமிடும் தியானத்திலே மூழ்கினார்கள். ஊரிலிருந்து கலியாணம் பற்றிய நெருக்குதல்களும் வந்தன. புதிய சூழ்நிலைக்கு எப்படித் தயாராவது என்கிற கவலைகளும், பரபரப்புகளும் எல்லோரையும் தனிமைப்படுத்தின.

ஈற்றில் நானும் புலம்பெயர்வு என்கிற அலைகளிலே எற்றுண்டு அவுஸ்திரேலியா வந்து குடும்பஸ்தனாக சிட்னியில் வாழத் தலைப்பட்டேன்.

பண்டாவின் அறை நண்பன் எரிக்குடன் என் நட்பு தொடர்ந்தது. நாங்கள் படித்த காலத்தில் எரிக் பலருக்கும் பலவிதத்திலும் உதவியவன். நானும் பரமசிவமும் சிறுபான்மை இனத்தவர்கள் என்ற காரணத்தால் சிங்களவர்கள் துவேஷம் பேசிய பொழுது தமிழரின் உரிமைக்கு குரல் கொடுத்தவன். கம்யூனிச தத்துவத்தை உண்மையாக நேசிப்பவன். மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசுவான். இதனால், அவனுடன் நட்பு பாராட்டி வாழ்வதை நான் பெருமையாகக் கருதினேன். என் நட்பினைத் தொடர்வதிலும் அவனும் அக்கறை காட்டினான்.

அரசியல் நிர்ப்பந்தங்களினால் பிளவுபட்டிருந்த ஜேர்மனி 1989ம் ஆண்டு ஒன்றிணைந்தது. இந்நிகழ்வு எரிக்கின் வாழ்க்கையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அவற்றை விரிவாக கடிதங்களில் எழுதுவான். கட்டுப்பாடுகள் அறுபட்ட சூழலிலே அவன் தன் மனைவி மேரியுடன் விடுமுறை ஒன்றிற்கு அவுஸ்திரேலியா வந்தான். நான் அவர்களை வற்புறுத்தி என் வீட்டில் தங்கும்படி செய்து உபசரித்தேன்.

ஒரு நாள்!

இரவு உணவு உண்ணும் போது பழைய நண்பர்கள் பற்றிய கதையில் மேய்ந்தோம். அப்போது பண்டாவைப் பற்றிக் கேட்டேன். அவன் மீது எப்போதும் எனக்கு அபிமானம் இருந்தது. சிங்கள இனவாதத்துக்கு அப்பாலாக அவன் தமிழர்களுடன்நல்லுறவுபேணியமைஇதற்குகாரணமாகஇருக்கலாம். போலந்து நாட்டுப் பெண் போனபின்னர் ஒரு ஜேர்மன் பெண்ணொருத்தியை, மணம் முடித்து பண்டா வசதியான வாழ்க்கைதேடி அப்போதே மேற்கு ஜேர்மனி சென்றுவிட்டதாகவும், அதன்பின் அவனுடன் தனக்குத் தொடர்பு அறுந்து விட்டதாகவும் எரிக் கூறினான்.

'உனக்குச் சில்வாவை ஞாபகம் இருக்கிறதா?, அவன் கதை பெரியகதை....!' என எரிக் துவங்க, வேண்டாம் என்பதுபோல அவன் மனைவி மேரி சைகை காட்டினாள்.

'பரவாயில்லை அவன் சொல்லட்டும், தடுக்காதே மேரி' என்று நான் அவசரமாகக் குறுக்கிட்டேன்.

எரிச் சட்டம் படித்தவன். ஒன்றிணைந்த ஜேர்மனியில் தற்போது பேர்ளினில் அரச சட்டத்தரணியாக பணிபுரிகிறான். நீதிமன்றத்தில் அரசு சார்பில் ஆஜரானபோது மோனிக்கா ஒரு நாள் குற்றம் சுமத்தப்பட்டவளாக வந்திருந்த சம்பவத்தை எரிக் கூறினான்.

'என்ன குற்றம் செய்தாள்? சில்வாவும் வந்திருந்தானா...?' என ஆவலை அடக்க முடியாமல் கேட்டேன்.

என் ஆர்வத்தைக்கண்ட மேரி 'மற்றவர்களின் வாழ்க்கை அவலங்களை அறிவதற்கு ஆண்களும் இப்படிப் பறப்பார்களா? என்று நமட்டுச் சிரிப்புடன் கேட்டாள்.

அவளுடைய குறுக்கீட்டை நாங்கள் பெரிதுபடுத்தாது தொடர்ந்தோம்.

'பேர்ளினில் மோனிக்கா அனுமதியின்றி விபசாரம் செய்தமைக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றம் கொண்டுவரப்பட்டாள்'

'ஐயோ பாவம். மோனிக்காவிடம் பேசினாயா...?'

'சில்வா பற்றி விசாரித்தேன்... அவள் எதுவும் கூறவில்லை. ஏன் என் விஷயத்தில் நீ தலையிடுகிறாய் என்பது போலப் பார்த்துவிட்டு அவள் சென்றுவிட்டாள். மோனிக்கா கிழக்கு ஜேர்மனியில் இருந்த காலத்திலேயே சட்டவிரோதமானமுறையில் விபசாரியாக இருந்திருக்க வேண்டும்...' என்று ஏதோ சொல்ல எத்தனித்த எரிக்கை இடைமறித்த மேரி 'அநுமானங்களை வைத்துக் கொண்டு ஒரு பெண்மீது பழி சுமத்தாதே' என்று பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தாள்.

அத்துடன் கிழக்கு ஜேர்மன் நண்பர்கள் பற்றிய எங்களுடைய கதை தொடராமல் அந்தரத்தில் தொங்கிற்று.

சிறிது நேரம் நாம் எதுவும் பேசவில்லை. எங்களுடைய நனவிடை தோய்தலை நிறுத்திவிட்ட குற்ற உணர்வில் மௌனத்தைக் கலைத்தாள் மேரி.

'உன் நாட்டின் தற்போதைய நிலைமை என்ன? சமீபத்தில் சிறீலங்கா சென்றாயா...?' எனக்கேட்டு நமது கதையைத் தொடர வைக்க முயன்றாள்.

'எதைச் சொல்வது, எதைவிடுவது' என்கிற அந்தரத்தில் குழம்பிப்போய் அவளைப் பரிதாபமாகப் பார்த்தேன்.

'நான் அரசியல் விஞ்ஞானம் படித்தவள். இலங்கை இனப்பிரச்சினைபற்றி நிறையவே வாசித்தறிந்துள்ளேன். நீங்களெல்லோரும். இனப்பிரச்சனையை மேலெழுந்தவாரியாக மட்டும் பார்க்கிறீர்கள். சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மையினமாக வாழ்கிறார்கள். இருந்தாலும் இந்திய துணைக்கண்டம் என்கிற பிராந்தியப் பூகோள அமைப்பில் சிங்களவர்கள், தாங்கள் தமிழர்களிலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையில் வாழ்வதான எண்ணம் அவர்களை அறியாமலே அவர்கள் உள்ளத்தில் வளர்ந்துள்ளது, அல்லது வேண்டுமென்றே அரசியல்வாதிகளினால் வளர்க்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை இனத்துக்கு இருக்கக்கூடாத சிறுபான்மை உணர்வும், அதனால் ஏற்படும் தாழ்வுச்சிக்கலும்தான் சிங்களர் அரசியல் தலைமைத்துவத்தை ஆட்டிப்படைக்கும் பிரச்சனையின் ஆணிவேர்' என மேரி ஒரு அறிவியல் பிரசங்கம் நிகழ்த்தி முடித்தாள்.

உண்மைதான். மேரியும் நானும் இதுபற்றி நிறையவே பேசியுள்ளோம். சோறுகறிச் சாப்பாட்டில் எனக்கிருக்கும்

மோகத்தால் மேரி என்னை 'அரைச் சிறீலங்கன்' என்றே அழைப்பாள். நாங்கள் படித்த காலத்தில் சில்வா ஒருவன்தான் இனத்துவேசம் பேசியவன். குடும்பச் செல்வாக்கை நக்கவைத்துக்கொள்ள மேட்டுக்குடிச் சிங்களவருக்கு அது அவசியமாக இருந்திருக்கலாம். ஆனால் பண்டாவை நினைத்துப்பார். அவன் எப்போதும் நடுநிலையாக சிந்திப்பவனாகவே கணிக்கப்பட்டவன். சிறுபான்மை இனம் என்கிற தாழ்வு மனப்பான்மை எப்படி பெரும்பான்மை இனச் சிங்களவரின் பலவீனமோ, அப்படியே 'மந்தைப் புத்தியுடன்' நியாய அநியாயங்களை சீர்தூக்கிப் பார்க்காது இனக் கலவரங்களின்போது செயற்படுதலும், சிங்களவருடைய இன்னொரு குணமாகும். ஒருவகையில் அவர்கள் அவுஸ்திரேலிய செம்மறியாடுகளைப் போன்றவர்கள்தான். ஒரு ஆடு சென்றால் மறு ஆடு யோசிக்காது பின் தொடரும்' என்று கூறிச் சிரித்தான் எரிக்.

'இதைத்தான் அரசியல் விஞ்ஞானத்தில் 'Mob Mentality' என்பார்கள். ஆளும்வர்க்கம் இதையே தனது அரசியல் மேட்டிமைக்கான மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்கிறது' என்று விளக்கம் சொன்னாள் மேரி.

இலங்கை இனப்பிரச்சினை விடையத்தில் மேரியின் அணுகுமுறையிலே தொனித்த நியாயம் என்னை வியப்படைய வைத்தது.

–3–

பதினைந்து வருடங்களின்பின் டிஸ்கோ பண்டாவை கொழும்பில் சற்றும் எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது.

'உல்லாசப் பயணிகள் தங்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டலிலே, தான் முகாமையாளராகப் பணியாற்றுவதாக சொன்னான். தான் படித்த துறையில், தனக்கு போதிய தொழில் அநுபவம் இன்மையால் நல்ல உத்தியோகம் பெறமுடியவில்லை என்றான். இருப்பினும் தான் பயின்ற ஜேர்மன் மொழி அறிவே தனக்கு கைகொடுத்து உதவியுள்ளதாகவும் சொன்னான்.

பரஸ்பரம் விசாரணைகள் முடிந்ததும், மறுநாள் இரவு உணவுக்குத் தனது ஹோட்டலுக்கு வருமாறு வற்புறுத்தி, ஹோட்டல் வாகனத்தை எனது இருப்பிடத்துக்கு அனுப்புவதாகக் கூறி, என் முகவரியையும் பெற்றுச் சென்றான்.

மறுநாள் காலை என் அலைபேசியிலே தொடர்பு கொண்டு நமது சந்திப்பை உற்சாகத்துடன் நினைவுபடுத்தியதுடன், வாக்குத் தவறாது மாலையில் சொகுசு வாகனத்தையும் என்னை அழைத்துவர அனுப்பியிருந்தான்.

ஹோட்டல் அலுவலகத்தில் பண்டாவைச் சந்தித்தபோது, 'எத்தனை காலம்' என என்னை ஆரத்தழுவி வரவேற்று அன்புடன் உபசரித்தான்.

'உன்னுடைய பிரசித்தி பெற்ற தேங்காய் சம்பல் இங்கே கிடைக்குமா....?' என பகிடியாகக் கேட்டேன்.

'அதை மறப்பேனா...? உனக்காக மாசிக் கருவாடும் சின்ன வெங்காயமும் போட்ட அசல் தேங்காய் சம்பலும், காரமான 'கட்ட' சம்பலும் செய்யுமாறு ஓடர் கொடுத்துள்ளேன்' என்றவன், தொலைபேசியில் யாரையோ அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தான் சிறிது நேரத்தில் கரையோரச் சிங்களத்திகள் பாணியிலே சேலை அணிந்த ஒரு பெண் அங்கு வந்து சேர்ந்தாள். அவளை பண்டா தன் மனைவி என்று அறிமுகப்படுத்தியது நான் சற்றும் எதிர்பார்க்காததொன்று.

'ஆயுபோவான் மாத்தையா' என்று குனிந்து கைகூப்பி அவள் வணக்கம் சொன்னாள்.

அப்போது ஹோட்டலின் தலைமை சமையல்காரர் 'உணவு ரெடி' என்று தகவல் அனுப்பினார். ஹோட்டல் சாப்பாடு மண்டபத்தின் வசதியான மூலையில் நாம் மூவரும் அமர்ந்தோம்.

உபசரிப்புக்கு பஞ்சமில்லை. ஹோட்டல் மேலாளரின் விருந்தினரல்லவா நான்!

பண்டாவும் நானும் ஜேர்மன் பல்கலைக்கழக நாள்களின் நினைவலைகளில் மிதக்கலானோம். பண்டாவின் சிங்கள மனைவிக்கு ஆங்கிலம் புரியாது என்பதைச் சிறிது நேரத்தில் தெரிந்து கொண்டேன். பண்டாவுக்கு இன்னமும் ஆங்கிலம் அரைகுறைதான். எனக்கோ சிங்களம் 'கொஞ்சங் கொஞ்சங்; டிக்க டிக்க புளுவாங்'...!

இதனால் ஜேர்மன் மொழியில் உரையாடுவது எங்களுக்கு இலகுவாகவும் சந்தோசமாகவும் இருந்தது. அருகில் இருந்த சாப்பாட்டு மேசையில் தம்பதிகளாக உணவருந்திக் கொண்டிருந்த ஜேர்மன் உல்லாசப் பயணிகள் எங்கள் அருகில் வந்து ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

இரண்டு இலங்கையர்கள், சொந்த மொழியை விடுத்து, ஜேர்மன் மொழியிலே கொழும்பில் உரையாடுவது விசித்திரமாக இருக்கிறது எனச் சொல்லிச் சிரித்தார்கள். உண்மைதான். உள்நாட்டின் மொழிப்பிரச்சினை இந்த நாட்டின் இரண்டு குடிமக்களுக்கு அந்நிய மொழி ஒன்றினைப் பொது மொழியாக்கிய விசித்திரம் சடுதியாக மின்னலைப்போல என் மூளையிலே பளிச்சிட்டு மறைந்தது.

பண்டாவின் சிங்கள மனைவிக்கு நாம் உரையாடுவது எதுவுமே புரியப்போவதில்லை என்ற தைரியத்தில், 'உனது மாமாவின் மகளா இவள்?' எனக்கேட்டேன்.

'இல்லை மச்சான். உன்னைப்போல நானும் மாமாவின் மகளை முதலிலேயே கட்டியிருந்தால் இப்ப சந்தோசமாக இருந்திருப்பன். எல்லாம் விதி' எனச் சொல்லி வருத்தப்பட்டான்.

அப்போது பரிசாரகன் போலந்து வொட்கா போத்தல் ஒன்றையும், கண்ணாடிக் கிண்ணம் நிறைந்த பனிக்கட்டிகளையும் கொண்டு வந்து வைத்தான். பண்டா



எழுந்து சென்று வொட்கா குடிப்பதற்கு ஏற்றவகையில் உறை குளிரில் வைக்கப்பட்ட வொட்கா கிளாஸ்களைக் கொண்டுவந்தான்.

டிஸ்கோ பண்டா ஜேர்மனியில் வாழ்ந்த காலத்திலேயே ஒரு வொட்காபிரியன். போலந்து வொட்கா உலகப்பிரசித்தி பெற்றது. கிழக்கு ஜேர்மன் பணத்தை கறுப்புச் சந்தையில் மாற்றி எல்லை கடந்து போலந்து போய்த் திரும்பி வரும் போதெல்லாம் விலை உயர்ந்த வொட்கா வாங்கி வருவாள். அந்த வொட்கா போத்தலுக்குள் நீண்டதொரு புல்லிலை இருக்கும். அதுவே அந்த போலந்து வொட்காவின் சிறப்புச் சுவைக்கான காரணமென்பார்கள். அது என்னவகை புல்லு என அறியும் முயற்சியில் அதிதீவிரமாக முயன்றும் இன்று வரையில் என்னால் அந்த இரகசியத்தை அறிய முடியவில்லை !

குளிர்ந்த வொட்கா, சிறிது சிறிதாக வயிற்றுக்குள் இறங்க, மனமும் உடலும் சில்லிட்டது. கொழும்பு வெக்கைக்கு அது இதமாகவும் இருந்தது. மெதுவாக அவனுடைய போலந்து காதலி பற்றியும், அவளுக்கு பிறந்த மகனைப் பற்றியும் விசாரித்தேன்.

வொட்கா மயக்கத்திலும் பண்டாவின் முகத்தில் கவலை தோன்றியது.

முன்னாலிருந்த புதிய கிளாஸில் வொட்காவை வார்த்து எதுவும் கலக்காமல் பச்சையாக குடித்த பண்டா, சிறிது நேரம் கண்களை மூடி மௌனமானான். பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு, எவ்வளவோ முயன்றும் அவளைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், மகனின் எண்ணம் தனக்கு அடிக்கடி வருவதாகவும் சொல்லி வருத்தப்பட்டான்.

பூராயம் புடுங்கும் ஆர்வம் என்னை விடவில்லை. 'நீ பின்னர் ஜேர்மன் பெட்டை ஒன்றை மணம் முடித்து மேற்கு ஜேர்மனி சென்றதாக அறிந்தேன்' என எரிக் சொன்ன தகவலை, மூலத்தை அறிவிக்காமல் அவிழ்த்தேன்.

பண்டாவின் முகம் சிவந்து கோபம் பொங்கியது.

'அவள் பட்டை வேசை' மேற்கு ஜேர்மனிக்கு போவதற்காக என்னைக் கட்டினவள். புதிதில் ஒழுங்காக இருந்தாள். கிழக்கும் மேற்கும் இணைந்த பின்பு, அவளின் ஜேர்மன் குணத்தைக் காட்டிவிட்டாள். என்னை விவாகரத்துச் செய்து விட்டு இன்னொரு ஜேர்மன்காரனைக் கலியாணம் செய்து, இப்போது பேர்ளினில் வாழ்கிறாள்' என்றவன் ஜேர்மன் பாசையில் உள்ள அத்தனை ஊத்தையான தூஷண வார்த்தைகளையும் ஒன்று திரட்டி அவளைத் திட்டித் தீர்த்தான்.

எங்கள் உரையாடல்களுக்கு மத்தியில், பண்டாவின் மனைவி, கலவரமடைந்த முகத்துடன் எதுவும் பேசாமல் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பண்டா தனது பழைய கிளாசில் மீதமாக இருந்த வொட்காவை ஒரே மடக்காக் குடித்துத் தன்னைச் சகஜமாக்கினான்.

'அவளைக் கட்டினதாலை வந்த ஒரேயொரு நன்மை, எனக்கு ஜேர்மன் பாஸ்போட் கிடைத்ததுதான். எல்லாம் விதி. நான் கனக்கப் பிழைகள் விட்டிட்டன் மச்சான். உன்னையும் பரமசிவத்தையும் போல கட்டுக்கோப்பாய் இருந்து இலங்கைப் பெட்டையைக் கட்டியிருக்கவேணும்' என ஈற்றில் ஞானம் பெற்றதான சுருதியிலே முடித்தான்.

'வெள்ளைத் தோலுக்கும் வெந்தையக் குழம்புக்கும் ஒரு சேர ஆசைப்படக்கூடாது பண்டா' என பகிடியாய்ச் சொன்னேன்.

அதைக்கேட்டு கவலைகளை மறந்து வாய்விட்டுச் சிரித்தவன், 'நீ சொல்வதில் பாரிய உண்மை இருக்கு மச்சான்' எனச் சொல்லியபடியே சிறுநிர் கழிக்கவென எழுந்து சென்றான்.

நாம் என்னதான் ஜேர்மன் மொழியில் உரையாடினாலும், பண்டாவின் மனைவி முகத்தில் பலவித உணர்ச்சிகள் தோன்றி மறைவதை நான் அவதானிக்கத் தவறவில்லை.

பண்டாவின் மனைவி என்முன்னே அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அவளுடன் எதுவும் பேசாமல் இருப்பது பண்பல்ல. மொழி தெரியாத எனது கையாலாகாத நிலைமையை எண்ணி இலங்கையின் அனைத்து அரசியல்வாதிகளையும் ஒரு தடவை மனசுக்குள் சபித்துக் கொண்டேன்.

பண்டா இன்னமும் வரவில்லை. நிலைமையை சுமூகமாக்க அவளைப்பார்த்துப் புன்னகைத்தேன்.

பண்டாவின் மனைவி, 'லொக்கு மாத்தையா (பெரிய கனவானே)' என அழைத்து கண்கலங்கினாள். தனக்குத் தெரிந்த ஆங்கிலச் சொற்களையும், பண்டாவிடம் படித்த சில ஜேர்மன் சொற்களையும் கலந்து சிங்களத்தில் பேசத்துவங்கினாள். அவள் சொன்னவை முழுவதும் எனக்குப் புரியாவிட்டாலும் அதன் சாரத்தை ஓரளவு கிரகித்துக் கொண்டேன்.

பண்டாவின் கிராமத்துக்கு அயலிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவள் அவள். அவளுடைய குடும்பம் பாரம்பரியமாக சிங்கள சுதேச வைத்தியம் செய்பவர்கள். ஆயுர்வேதக் கல்லூரியில் படித்தவள். இப்பொழுதும் அவள் 'வெதமாத்தையா' வாகப் பணியாற்றுகிறாள்.

சடுதியாகப் பண்டாவின் லீலைகள் பற்றி தொடர்ந்தாள். அப்போது அவளின் கண்களில் திரண்ட கண்ணீரை நான் கவனிக்கத் தவறவில்லை. முகத்தை சுத்தம் செய்வதுபோல, மேசையில் இருந்த ரிசுப் பேப்பரால் கண்ணீரைத் துடைத்தபின் மீண்டும் தொடர்ந்தாள்.

'நான் முதிர்கன்னி என்பதை தெரிந்து கொண்டே, பண்டா என்னை மணம் முடித்தார். பண்டாவுக்கு இந்த வயதிலும் உள்ள காமவேட்கையை என்னால் தணிக்க முடியாது என்பதை அவர் முன்னமே எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். பண்டாவுக்கு என்னால் 'அந்த விஷயத்தில்' ஈடுகொடுக்க முடியாது என்பது உண்மைதான். என்றாலும் இங்குவரும் உல்லாசிகளுடன் என் முன்னாலேயே அவர் கூடிக்குலாவுவதை சிங்களப் பெண்ணான என்னால தாங்கமுடியவில்லை அண்ணா. எனது உணர்வுகளை சொஞ்சமேனும் அவருக்கு புரியும்படி எடுத்துச் சொல்லுங்கள்' எனச்சொல்லி அழுதாள்.

சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மையினமாக வாழ்கின்றார்கள். இருந்தாலும் இந்திய துணைக்கண்டம் என்கிற பிராந்தியப் பூகோள அமைப்பில் சிங்களவர்கள் தாங்கள் தமிழர்களிலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையில் வாழ்வதான எண்ணம் அவர்களை அறியாமலே அவர்கள் உள்ளத்தில் வளர்ந்துள்ளது. அல்லது வேண்டுமென்றே அரசியல்வாதிகளினால் வளர்க்கப்பட்டுள்ளது.

'மாத்தையா' என்று பண்டாவின் அலுவலகத்தில் அழைத்தவள், 'அண்ணா' என்று உறவு கொண்டாடி அழைத்தது என் மனதை உலுக்கியது.

'கவலைப்படாதே அவனுக்கு நான் சகலதையும் எடுத்துச் சொல்கிறேன்' எனச் சொல்லி மானசீகமாக அவளைத் தேற்றினேன்.

'சொல்கிறேன்' என்பது மட்டும் பாத்றூமிலிருந்து திரும்பிய பண்டாவுக்கு அரைகுறையாகக் கேட்டிருக்க வேண்டும்.

'என்ன சொல்லப் போகிறாய்....? நாங்கள் கிழக்கு ஜேர்மனியில் படித்த கார்ல் மார்க்ஸின் தத்துவத்தையா?' எனச் சொல்லிச் சிரித்தான்.

உணவு பரிமாறப்பட்டது. உண்மையைச் சொல்லவேண்டும். அசல்சாப்பாடு நான் விரும்பி உண்ணும் உணவு வகைகளை ஞாபகம் வைத்து, பண்டா தனது ஹோட்டல் சமையல்காரர்களுக்கு ஓடர் கொடுத்திருக்க வேண்டும்.

நானும் பண்டாவின் மனைவியும் மௌனமாக சாப்பாட்டில் கவனம் செலுத்தினோம். பண்டாவோ, உல்லாசிகளாக ஹோட்டலுக்கு வரும் பெண்கள் மத்தியில் தனக்கிருக்கும் 'மவுசு' பற்றி அட்டகாசமாகச் சொல்லிக்கொண்டே சாப்பிட்டான்.

அப்போது நான் அதிகம் பேசவில்லை. எனது உரையாடலை பண்டாவின் மனைவி அரைகுறையாக விளங்கக்கூடும். அது தவறான அர்த்தங்களைக் கற்பிக்கலாம்.

பண்டா தன் மனைவியுடைய அப்பாவித் தனத்தை பரிகசிப்பதுபோல் நடந்து கொள்வதை தவிர்ப்பதற்காக அவர்களிடமிருந்து விடைபெறுவதில் அவசரம் காட்டினேன்.

பண்டாவின் மனைவி இறுதிவரை மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டது அவள் மீதிருந்த மதிப்பைக் கூட்டியது. பண்பைத் துலைக்காது வாழும் அவள் மிகவும் அபூர்வமானவளாகவே எனக்குத் தோன்றினாள். ஹோட்டல் வாசல்வரை அவளும் பண்டாவுடன் நடந்து வந்தாள்.

வாசலில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைப் பெண்களுடன் கூடிநின்றார்கள். அவர்களுக்கு கிடைத்த வாடகைக் காதலிகளே அவர்கள். பண்டாவே அவர்களை ஒழுங்கு செய்திருக்கலாம்.

உல்லாசிகள் தங்கள் இலங்கைக் காதலிகளுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சோரங்களும் இணைந்ததுதான் இலங்கையின் உல்லாசப் பயணம் என்பதை நேரில்பார்த்து சங்கடப்பட்டேன்.

பண்டாவின் மனைவியைப் பார்த்தேன். இவற்றை அவள் கண்டு கொள்ளாத லாவகத்திலே சிங்களப் பெண்மையைக் காப்பாற்றி நின்றாள். நான் அவர்களிடமிருந்து விடைபெற்று, வாகனத்தில் ஏறும் போது, 'போமஸ்துதி ஐய' (வணக்கம் அண்ணா) என குனிந்து வணங்கி விடைதந்தாள்.

–4–

கொழும்பிலே டிஸ்கோ பண்டாவைச் சந்தித்து பல ஆண்டுகளாகிவிட்டன.

என்னுடைய தொழில் சார்ந்த விஜயம் ஒன்றினை மேற்கொண்டு, பேர்ளின் நகருக்குச் சென்றிருந்தேன். பணிகள் இனிதே நிறைவேறின. அடுத்த நாள் சிட்னி திரும்புவதாக என் பயண ஏற்பாடு இருந்தது.

எரிக்கையும் அவன் மனைவி மேரியையும் ஒன்றாக இரவு உணவு உண்ண அழைத்திருந்தேன். அந்தச் சுரங்க வண்டி நிலையத்தில் அவர்களை நான் சந்திப்பதாக ஏற்பாடு. அங்கிருந்து நல்ல உணவு விடுதிக்கு செல்வது எமது திட்டம்.

அவர்களுக்காக நான் காத்திருந்த பொழுதுதான், டிஸ்கோ பண்டாவையும், சில்வாவையும் ஒன்றாக மேற்படி கோலத்திலே சுரங்கவண்டி நிலைய வாங்கொன்றில் அமர்ந்திருப்பதைப் பார்க்க நேர்ந்தது.

சில்வாவின் முகத்தில் வயதுக்கும் மீறிய முதுமை தெரிந்தது. பல நாள் சவரம் செய்யாத முகம். தலை மயிர்களும் தாடியின் சில பகுதிகளும் ஆங்காங்கே நரைத்துக் காணப்பட்டன. அவனுடைய சேட்டில் ஊத்தை அப்பியிருந்தது. சேட்டின் கீழ்ப் பொத்தான்கள் அறுந்து தொலைந்த நிலையில், பியர் குடிக்கும் பழக்கத்தினால் பருத்திருந்த அவன் வயிறு துருத்தித் தெரிந்தது.

அவர்களை நான் பார்த்துக் கொண்டு நின்ற நிலையில், சுரங்கவண்டியில் வந்திறங்கிய எரிக்கும் மேரியும் என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். சில்வாவின் இந்தக் கோலம் அவர்களுக்கு எத்தகைய ஆச்சரியத்தையும் ஏற்படுத்தவில்லை.

படிப்பும் இன்றி, தொழிலும் இன்றி அலையும் அவன், அல்கஹோலிக்காக மாறுவான் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். பெற்றோரும் இறந்து, உறவினரும் கைவிட்டுவிட பரிதாப நிலை.

வெளிநாடுகளில் வாழ்ந்து, சிங்கள ஆட்சியை 'அப்பே ஆண்டுவ' கோஷம் எழுப்பி ஆதரிக்கும் தூதுவர்களுள் சில்வாவும் ஒருவனாக இருக்கலாம்.

ஆனால் பண்டா...?

பண்டாவை நான் கொழும்பில் சந்தித்த விபரத்தையும், அங்கு அவன் வசதியாக ஒரு முதிர்கன்னியை மணம்முடித்து வாழும் வர்த்தமானத்தையும் எரிக் தம்பதியினருக்கு முன்னரே சொல்லியிருந்தேன். அத்தகைய பண்டா எப்படி பேர்ளினிலே சில்வாவுடன் கூட்டுச் சேர்ந்தான்? என்னால் ஆச்சரியத்தை அடக்கமுடியவில்லை.

'பண்டா, இது என்ன கோலம்? நீ எப்பொழுது மீண்டும் ஜேர்மனிக்கு வந்தாய்?....',

உண்மையான பரிவுடன் கேட்டேன்.

பண்டா பதில்கூற முன், சில்வா முந்திக் கொண்டு சத்தம் போட்டான்.

'கோலத்தில் என்ன பிழை? நல்லாத்தான் இருக்கிறம். நாங்கள் சிங்கங்கள். சிங்களச் சிங்கங்கள். புலியை அடக்கிவிட்டோம் பார்த்தாயா...? இந்த வெற்றிச் செய்தியை உலகெங்கும் பறைசாற்றும் தூதுவர்கள் நாங்கள்....'

சுரங்க வண்டி நிலையத்திலுள்ள அந்த வாங்கினை அரசியல் மேடையாக்கிக் கத்தினான்.

எரிக்கும் மேரியும் சங்கடத்தில் நெளிந்தார்கள். சில்வா பேசும் அரசியலை இப்பொழுது எரிக் நன்றாக அறிவான். எனவே அங்கிருந்து செல்வதற்கு அவசரப்பட்டான்.

பண்டா எதுவும் பேசவில்லை. பண்டாவைப் பார்த்து 'வருகிறேன்' என்று மெதுவாகச் சொன்னேன். கொழும்பில்

*சிங்களவன் ஆளப்பிறந்த இனம். தமிழன் எங்கிருந்தாலும் எங்களுக்கு அடிமையாக இருக்கப் பிறந்தவன். அவன் எங்களுக்கு கப்பம் செலுத்தி வாழவேண்டும்'*

அவன் தந்த ராஜ வரவேற்பும் விருந்துபசாரமும் இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக இருந்தன.

மூவரும் நகரத் துவங்கியதும், பண்டா சடுதியாக 'பசிக்கிறது' சாப்பாடு வாங்கித் தருவாயா?' என்று கேட்டான். அந்தக் கேள்வி என்னை நிலைகுலைய வைத்தது.

ஜேர்மன் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், இலங்கையின் பிரத்தியேக சுவையைப் பேணி, நான் பரமசிவம் உட்பட எல்லோருக்கும் சமைத்துப் போட்ட பண்டா, என்னைக் கொழும்பிலே சந்தித்த பொழுது, பழைய நட்புறவு சற்றும் குறையாது, ராஜ விருந்தளித்து என்னை அசத்திய அதே பண்டா, இப்பொழுது பிச்சைக்காரனைப் போல 'பசிக்கிறது' என்று கேட்பது என்னை வேருடன் சாய்த்தது.

எரிக் என்னுடைய தர்மசங்கடமான நிலையை ஊகித்திருக்க வேண்டும். என்னுடைய விருப்பத்துக்கு ஒத்திசைவாக நடக்க முன்வந்தமை எனக்கு ஆறுதலாக இருந்தது.

சுரங்க வண்டி நிலையத்தின் வெளியே, நடக்கக்கூடிய தூரத்தில் இத்தாலிய ரெஸ்ரோரெண்ட் ஒன்று இருந்தது. அது சற்றே பிரபலமானதும். நிலமைகளை உத்தேசித்து அங்கு உணவு சாப்பிடலாம் என்று எரிக்கே முன்மொழிந்து என்வயிற்றில் பால் வார்த்தான்.

'வா...., அந்த இத்தாலிய றெஸ்ரோரெண்டுக்கு போகலாம்' என பண்டாவைப் பார்த்து அழைத்தேன். சில்வா எழுந்து நிற்கவே சிரமப்பட்டான். பண்டா அவனைத் தாங்கிக் கொண்டான். பண்டாவின் அணைப்பிலே சில்வா எங்களைப் பின் தொடர்ந்தான். இருவரிடமிருந்தும் பலநாள் குளிக்காததற்கு அடையாளமாக ஒருவகை 'துர்நாற்றம்' வீசியது.

அவர்களுடைய கோலமும், அவர்களைச் சாப்பாட்டுக்கு அழைத்ததும் மேரிக்கு பிடிக்கவில்லை என்பதை அவளுடைய முகபாவம் துல்லியமாகக் காட்டியது. இருந்தாலும் எங்களுடைய உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று பொறுத்துக் கொண்டாள்.

றெஸ்ரோரெண்ட் மனேஜர் சில்வாவையும் பண்டாவையும் உள்ளே அனுமதிக்க முதலில் மறுத்தான். ஆனால் எரிக் அவனிடம் விஷயங்களை விளக்கியபிறகு, முணுமுணுத்துக் கொண்டே அனுமதித்தான்.

சில்வா, நுழைந்ததும் நுழையாததுமாக ரொயிலெற்றைத் தேடிச் சென்றான்.

நீண்ட நேரமாக என் மனசைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியை பண்டாவிடம் கேட்டேன். 'உன் சிங்கள மனைவி எங்கே...?' என்பதுதான் என் கேள்வி. இந்தக் கேள்வியை அவனுடைய நிலையில் அவன் எதிர்பார்த்திருக்கமாட்டான் போலும்.

சற்று நேர மௌனத்திற்குப் பின்னர், 'அவள் தற்கொலை செய்து கொண்டாள்' என்று கூறி என் முகத்தை ஏறிட்டுப் பார்க்க விரும்பாதவனைப் போல வேறு திசையிலே பார்த்தான். அவளுடைய மரணத்துக்கு தானே காரணம் என்ற குற்ற உணர்வு அவனுடைய குரலிலே புரையோடிக் கிடந்தது. அந்தச் சம்பவத்தை மறப்பதற்கு கஸ்டப்படுபவன் போல உடைந்தான். அவன் அழுது கொண்டிருக்கிறான் என்பதை என்னால் உணரமுடிந்தது.

ரொயிலெற்றால் திரும்பிக் கொண்டிருந்த சில்வா, பண்டா அழுவதைப் பார்த்திருக்க வேண்டும். 'ஏண்டா மச்சான் அழுகிறாய்?' என்று சிங்களத்தில் ஆவேசமாகக் கேட்டான்.

'ஒன்றுமில்லை மச்சான்' என்று மழுப்பினான் பண்டா'.

அதற்கிடையில் எங்கள் மேசைக்கு பரிசாரகன் வந்து சேர்ந்தான். சில்வா தனக்கு விருப்பமானதெல்லாம் தாராளமாக ஓடர் செய்யத் துவங்கினான். எங்களுக்கு என்ன விருப்பமாக இருக்கக்கூடும் என்பதைப்பற்றி அவன் அக்கறைப்படவில்லை. காசு கொடுக்கப் போவது நான் என்பது அவனுக்குத் தெரியும். அதனை அங்கீகரிக்கும் இங்கிதம் கூட அவனிடம் இருக்கவில்லை.

மேரிக்கு என்ன விருப்பம் என்று கேட்பதின் மூலம், குறைந்தபட்ச மேசை நாகரீகத்தையாவது பேண நான் முயன்றேன்.

சாப்பாடு வந்ததும், நாங்கள் மௌனமாகச் சாப்பிடத் துவங்கினோம். ஆனால் சில்வாவோ இறுதி யுத்தத்திலே புலிகள் தோற்றுப்போனது பற்றி அட்டகாசமாகப் பேசினான்.

'சாப்பிடும்போது ஏன் வீண் அரசியல்' என்று எரிக் நாகரீகமாகச் சொன்னான். 'வீணான தர்க்கத்திலே ஈடுபட வேண்டாம்' என்று என்னை எச்சரிக்கவும் செய்தான்.

நான் சில்வாவின் கேள்விகளைச் சட்டை செய்யாது, இரவுச் சாப்பாட்டினை சுமுகமாக முடிவுக்கு கொண்டுவருவதில் முனைப்புக் காட்டினேன்.

சாப்பாட்டிற்கான பில்வந்தது. நான் அதற்கான பணத்தைச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

சில்வாவின் பேச்சை நான் சட்டை செய்யாதது அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியிருக்க வேண்டும்.

'இப்ப தமிழன் அரசியல் பேசமாட்டான்தான்... ஏன் தெரியுமா...? நாங்கள் அவங்களுக்கு மண்டையிலை அடிபோட்டு, கோவணம் கட்டிஅல்லோ அனுப்பி வைச்சனாங்கள்...' என்று மீதமிருந்த மதுவை ஊற்றிக் குடித்துக் கொண்டே கேலி பேசினான்.

எனக்கு கோபம் எல்லை தாண்டியது. என்னை அறியாமலே எழுந்து சில்வாவின் சேட்டைப் பிடித்து உலுப்பினேன். அடுத்த கணமே, என் தவறை உணர்ந்தவனாக சமாதானமடைந்து, பில்லுக்கான பணத்தினைச் செலுத்தினேன்.

எல்லோரும் எழுந்தோம்.

அப்போ பண்டா சொன்ன வாசகம் என்னை உறைநிலை அடைய வைத்தது.

'இஞ்சை பார். சிங்களவன் ஆளப்பிறந்த இனம். தமிழன் எங்கிருந்தாலும் எங்களுக்கு அடிமையாக இருக்கப் பிறந்தவன். அவன் எங்களுக்கு கப்பம் செலுத்தி வாழவேண்டும்' என வெறியில் பிதற்றிக் கொண்டிருந்தான்.

நான் சாப்பாடு மேசையை விட்டு, றெஸ்ரோரென்றுக்கு வெளியே வந்தேன். எரிக்கும் மேரியும் என்னைப் பின் தொடர்ந்து வந்தனர். என்னை சாந்தப்படுத்தும் வகையில் எரிக் என் தோள்மீது ஆதரவாகக் கையை வைத்தான்.

'பன்றியுடன் சேர்ந்து மாடும் சாக்கடையில் புரளுகின்றது' என்றாள் மேரி.

எரிக் என் கைகளைப் பற்றிக் கொண்டு 'இப்பொழுதுதான் இலங்கைப் பிரச்சிரனையின் முழுப்பரிணாமமும் எனக்குப் புரிகிறது' என்றான்.

சாதாரண எரிக்கிற்கு சமாச்சாரம் புரிகிறது !

இது சர்வதேச சமூகத்துக்கு புரியுமா...?

சில்வா பண்டா போன்று புலம்பெயர்ந்த நாடுகளிலே 'தூது'வர்களாக வலம் வருவோரினால், சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயம் உருவாக்கப்படுகின்றதா? சிதைவிலிருந்து எழுந்து நிற்கும் பேர்ளின் நகர வீதியிலே, நான் இடிந்துபோய் நின்றேன்.

# துரிதமான மாற்றங்கள்

பிரகலாத ஆனந்த்

கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து உலகம் துரிதமான மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. எதிலுமே இயந்திரத் தயாரிப்பு என உலகம் மாறிப்போய் விட்டதால் உழைக்கும் தொழிலாளர்கள் பின் தள்ளப் பட்டுள்ளார்கள். தனி நபர் உற்பத்தி குடிசைக் கைத்தொழில் என்பதெல்லாம் வரலாறாகிவிட்டது. இதனால் மக்கள் மாறிப்போய் விட்டார்கள். சிறுவர்களைப் பற்றி சொல்லவே தேவையில்லை. அவர்களது உலகம் வீட்டுப் படிகளைத் தாண்டி வெளி உலகில் தொலைதூரம் போய்விட்டது. உலகை நெறிப்படுத்தும் முக்கிய பங்காளியான இலக்கிய வாதிகளும் செய்வதறியாது திகைத்துப் போயுள்ளனர்.

இலத்திரனியல் உபகரணங்களின் அதீத முன்னேற்றமும், பரம்பலும், நவீன தொழில் நுட்பத்துடனான ஊடக செயற்பாடுகளும், விளம்பரங்களும் வணிக சந்தைப்படுத்தும் உத்திகளும் மனிதனின் இருப்பை நவீனப்படுத்திக் கொள்ளும் காலம் இது. இந்த அலையிலே சிறுவர்கள் இலகுவாக அடிப்பட்டு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். சரியான வழிநடத்தலற்ற நிலையில் குழந்தைகளும், சிறுவர்களும் இலகுவாக எதிலும் எடுபட்டுப் போகிறார்கள். மூன்று தசாப்த இடைவெளியில் சிறார்களிடம் ஏற்பட்டுள்ள இயல்பு மாற்றம், ஏனைய பருவத்தினரை விட வேகமாக உள்ளது. பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு கடிவாளமிட முடியாத அவலம்! சமூக வாழ்க்கை முறை, பாரம்பரியங்கள், பண்பாடுகள், கலாசாரங்கள் எல்லாம் கலைக்கப்பட்டு மீளுருவாக்கப்பட்டதான பிரமை ஏற்படுகிறது.

பெற்றோர்களும் ஆசிரியர்களுமே பிள்ளைகளை அருகிருந்து வழிநடத்துபவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையே மாறிப்போயுள்ளது. இன்னொருபுறம் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் கழிக்கும் நேரமும் குறைவடைந்து வருகிறது. குறிப்பாக கணவன் மனைவி இருவரும் பணிபுரியும் குடும்பங்களில் இந்த நிலை இருக்கிறது. ஆசிரியர்களில் ஒரு பங்கினர் பாடசாலையை ஓய்வெடுக்கும் இடமாக கருதுகின்றனர். பணம் தேடி தனியார் வகுப்புகளில் படிப்பிப்பதையே முதன்மைப்படுத்துகிறார்கள். கல்வி என்பது சிறார்களை நல்ல பிரஜைகளாக உருவாக்குதல் என்ற இலக்கைவிட்டு விலகி, பரீட்சைக் கண்ணோட்டத்துடன், பட்டப் பதவிக்கானதாக மட்டும் மாறிவிட்டது. கலை இலக்கிய வாதிகளின் பங்களிப்பும் கேள்விக்குறியாகியுள்ளன. சினிமா, தொலைக்காட்சி, கணினி என்பனவற்றின் சமூகக் கண்ணோட்டம் இல்லாது, வெறும் வியாபாரம், பணம் பண்ணுதல் என்றாகிவிட்டது. இலத்திரனியல் ஊடகங்களின் விளம்பரங்கள் மாத்திரமன்றி, நிகழ்ச்சிகள் கூட உலகமயமாதலோடு ஒத்து ஓடுவதுடன், மொழி, பண்பாடு, கலாசாரம் என்பவற்றை காற்றில் பறக்க விடுகின்றன. குறிப்பாக எமது தமிழ் தொலைக்காட்சிகள் தமிழைக் கொலை செய்தும், ஆங்கிலத்துடன் கலப்படமாக்கியும் மெல்ல தமிழை சாகவைக்கின்றன. ஆரம்பக் கல்வி ஆங்கிலத்தில் என்று மாறி வருகிறது. பணம் பண்ணும் சர்வதேச பாடசாலைகள் தெருவுக்கு ஒன்றாக மலிந்து வருகின்றன.

புதிய தலைமுறையினர் ஒருபுறம் கெட்டிகாரர்களாகவும், இன்னொருபுறம் எதற்கும் கணிப்பொறிகளையும், கணினிகளையும் தேடும் காலமாகவிட்டது. ஆங்கிலக் கலப்பு இல்லாமல் தமிழைப் பேச முடியாதவர்களாகி வருகிறார்கள். கைவிரல்களால் பார்க்கக் கூடிய கணக்குகளைக் கூட கணிப்பொறி உதவியின்றி பார்க்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இடர்பட்டுப் போயிருக்கும் இன்றைய இலக்கிய உலகம் திகைத்து போயிருக்கிறது. அச்சில் வரும் பத்திரிகை சஞ்சிகைகளும், நூல்களும் இன்னும் எத்தனை காலம் ஜீவிக்குமோ என்று தெரியாமல் சேடம் இழுத்துக் கொண்டிருக்கின்றன. கணினி மென்தட்டுக்களையும், இறுவட்டுக்களையும்தாண்டி 'பென்றைவ்' (PENDRIVE) என்றசிறு பேனையளவு கருவி பல புத்தகங்களை உள்ளடக்கும் திறன் பெற்றுள்ளன. உலகெங்கும் இணையத் தளங்களும், வலைப்பின்னல்களும், பேஜ்மேக்கர்களுமாக பதிவிறக்கம் செய்கின்றன. இனிவரும் காலத்தில் இலக்கியவாதிகளும், வாசகர்களும் கூட கணினிகளை மட்டுமே பயன்படுத்தும் நிலை உருவாகி வருகிறது. கடதாசிகளும், புத்தகங்களும் தொல்பொருள் நூதனசாலையை நோக்கி பின்தள்ளப்படுகின்றன. புத்தக அலுமாரிகளுக்குப் பதிலாக கணினிகளே இனி நூலகங்களை நிறைக்கப் போகிறது. இன்னும் என்னென்ன மாற்றங்கள் வரப்போகிறதோ தெரியவில்லை.

## விவாதங்கள், வாசகர் கடிதங்கள், படைப்புக்கள்

விவாதங்கள் 500 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். 'வாசகர் பேசுகிறார்' பகுதிக்கான கடிதங்கள் 200 சொற்களுக்குள் அடங்குதல் வேண்டும். இவ்வரையறைகளுக்கு மேற்படின் அவை பிரசுரிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்ந்துவரும் இதழில் இடம்பெறும். புனைபெயரில் எழுதுபவர்கள், தமது சொந்தப் பெயர் முகவரியை வேறாக இணைத்தல் வேண்டும். படைப்புக்கள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படின் ஒரு மாதத்திற்குள் அறிவிக்கப்படும்.

- ஆசிரியர்


சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011



தியானந்தன் அரங்கு
08.01.2011
எழுத்தாளர் மாநாடு - 2011
இலங்கை
சிற்றிதழ்


தமிழ் எழுத்தாளர்
2011
இலங்கை
1.2011
தமிழ் எழுத்தாளர்
இலங்கை


எழுத்தாளர்
இலங்கை

# தமிழில் இலக்கியத் திறனாய்வியல்

## (அடிப்படைகள் – வரலாறு – புதிய எல்லைகள்)

– கலாநிதி நா. சுப்பிரமணியன்

தமிழின் இலக்கியத் திறனாய்வியல் மரபு தொடர்பான தகவல்களைத்தரும் முக்கியமானதும் காலமுதன்மையுடையதுமான சிந்தனைப்பதிவாகத் **தொல்காப்பியப்** பொருளதிகாரம் திகழ்கின்றதென்பதை முன்னைய இரு கட்டுரைகளில் நோக்கினோம். குறிப்பாக, தமிழ்க் கவிதையியலின் முக்கிய மூல இலக்கணமாக அது திகழ்கின்றமை அக்கட்டுரைகளில் சுருக்கமாக நோக்கப்பட்டது. குறிப்பாக இன்றைய **அமைப்பியல்** சார் இலக்கியச் சிந்தனையோடு தொடர்புபடுத்தி நோக்கக்கூடிய கூறுகளை அப் பொருளதிகாரம் கொண்டுள்ளது என்பதும், அதிலும் முக்கியமாக 'வாசகர் பார்வை' என்ற அம்சம் தொடர்பான சிந்தனைகள் அதில் பதிவாகியுள்ளன என்பதும் மேற்படி கட்டுரைகளில் சுட்டியுணர்த்தப்பட்டன (இவை பற்றி இன்னும் விரிவாகவே பேசலாம் ஆயினும் இக்கட்டுரைத்தொடரின் தேவைக்கு மேற்படி குறிப்புகளே போதும் எனக் கருதுகிறேன்)

அடுத்து தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் 'பார்வை' மற்றும் 'அணுகுமுறை' என்பனசார்ந்த விமர்சனத்துக்குரிய சில அம்சங்களை இங்கு கவனத்துக்கு இட்டுவருவது அவசியமாகிறது. அவற்றை முதலில் நோக்கிய பின் தொடர்ந்து அந்நூலுக்குப் பின்னரான இலக்கிய இயங்குநிலை மற்றும் திறனாய்வியல் இயங்குநிலை என்பன தொடர்பான வரலாற்றுச் செல்நெறிகளை கவனத்திற் கொள்வோம்.

### 3.1.1.5 தொல்காப்பியத்தின் பார்வை மற்றும் அணுகுமுறைகள் – முக்கிய விமர்சனக் குறிப்புக்கள்

தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிமீது இன்றைய சிந்தனைச் சூழலில் வைக்கப்படும் முக்கிய விமர்சனம், அதன் சமூகச் சார்பு தொடர்பானதாகும். தனது காலத்தில் ஆதிக்கநிலையினரின் குரலாகவே அது வெளிப்பட்டது என்பதே அவ்விமர்சனம் ஆகும். குறிப்பாக 'தான் எழுந்த' காலப்பகுதியின் உயர் சமூகச் சார்பையும் ஆணாதிக்க உணர்வையும் புலப்படுத்திநிற்கும் ஆக்கம் அது என்பதை அண்மைக்கால ஆய்வாளர்கள்பலர் இனம் கண்டு காட்டிவந்துள்ளனர். அதாவது அவ்விலக்கணம் தரும் செய்தி அன்றைய சமூகநிலையில் மேட்டுக்குடியினர் எனத்தக்கவர்க்களையும் குடும்பநிலையில் ஆண்களையும் முதன்மைப்படுத்தியனவாக அமைந்துள்ளன என்பதே இவ்வகை விமர்னத்தின் சாராம்சமாகும். இவ்வாறான விமர்ச னத்துக்கான அடிப்படை அம்சங்கள் அந்நூல் முன்வைத்துள்ள திணைப்பாகுபாடு மற்றும் மாந்தரின் குண நலன்கள் ஒழுக்க அம்சங்கள் என்பன பற்றிய தகவல்களில் உள்ளன.

குறிப்பாக திணைப்பாகுபாடு என்ற அம்சத்திலே 'தூய காதலொழுக்கம் எனக்கொள்ளப்படும் 'ஐந்திணை' (அன்பினைந்திணை) வகைகள் வசதிவாய்ப்புகளைக் கொண்ட உயர்சமூகத்தினருக்கே உரியன என்பதாகப் பொருள் கொள்ளத்தக்க வகையில் அந்நூற் கருத்து அமைந்துள்ளது. இத்தொடர்பிலே,

*அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்*
*கடிவரையில புறத் தென்மனார் புலவர்"*

அகத்திணையின் முக்கிய இரு நிலைகளாக களவு மற்றும் கற்பு ஆகியன பற்றிய விளக்கங்களில் அவ்வவ்நிலைகளுக்குரிய தலைமைப் பாத்திரங்களின் குணநலன்கள் மற்றும் ஒழுக்க அம்சங்கள் என்பன பற்றி எடுத்துப் பேசுமிடங்களில் அந்நூல் ஆண்முதன்மைக் கருத்தாக்கங்களை முன்வைப்பதை நோக்கமுடியும். ஆணைப் பெருமையும் உரனும் கொண்டவனாகவும் பெண்ணை அச்சம், மடம், நாணம் முதலிய பண்புகள் கொண்டவளாகவும் அது குறிப்பிடும். ஒழுக்கம் அம்சம் என்றவகையில் கற்பு என்பதனைப் பெண்மை சார்ந்த ஒன்றாகவே அந்நூல் சுட்டிநிற்பதைக் 'கற்பிய'லில் நோக்கியுணரமுடியும்.

இவ்வாறான அம்சங்களைக் கவனத்துட்கொண்டு தொல்காப்பியத்தின் மீது முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்களுக்கு வகை மாதிரியான ஒன்றாக அண்மையில் உயிர்மை இதழில் (ஜனவரி 2011) பிரபஞ்சன் எழுதியுள்ளார். "தாழ்ப்பாள்களாலும் பூட்டுக்களாலும் ஆன தமிழ் இலக்கணங்கள்" என்ற கட்டுரையைச் சுட்டலாம். தொல்காப்பிய நூற்பாக்களை மட்டுமன்றி அவற்றின் உரைகளையும் கவனத்திற் கொண்டே இந்த வகையான விமர்சனப்பார்வைகள் முன்வைக்கப்படுகின்றன.

மேற்சுட்டியவாறான அந்நூலின் சமூகச் சார்பு தொடர்பான விமர்சன அம்சத்துக்கு அப்பால் அந்நூல்மீது முன்வைக்கக் கூடிய மற்றொருவகை முக்கிய விமர்சனம், பாட்டு என்ற குறித்த ஒரு வகை இலக்கிய ஆக்கமுறைமையை மட்டும் மையப்படுத்தியதான அதன் பார்வையாகும். இதனால் அக்காலச் சமூகத்தின் அடிநிலை மாந்தர் சமூகம் உட்படப் பல்வேறு சூழல் சார்ந்தோர் மத்தியில் நிலவிவந்துள்ள பாட்டு அல்லாத படைப்பாக்க முறைமைகள் அவ்விலக்கணத்தில் உரிய கவனத்தைப் பெறத்தவறிவிட்டன என்பது நமது சிந்தனைக்குரியது.

குறிப்பாக வாய்மொழி மரபுசார்ந்தனவாகிய 'விடுகதை', 'பழமொழி' வகைகள் நகையுணர்வுடன் அமைந்திருக்கக்கூடிய ஆக்கங்கள் மற்றும் கூத்துக்களிற் பயின்றுவந்த இசைப்பாடல்கள் முதலிய பலவற்றின் மீது அவ்விலக்கணம் உரிய கவனத்தைச் செலுத்தவில்லை. முறையே வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், பண்ணத்தி முதலிய பெயர்களில் அமைந்த மேற்சுட்டிய வகைமைகள் அன்று

வழங்கியிருந்தமைக்கு இவ்விலக்கணத் தகவல்களே (பொருளதிகாரத்தின் 384, 467 – 485 ஆம் நூற்பாக்கள் தரும் தகவல்களே) நமக்கு முதன் நிலைச் சான்றுகளாகும். இப் பெயர்களில் அக்காலத்தில் செய்யுள் வகைகள் (அதாவது இலக்கிய ஆக்கமுறைகள்) வழக்கிலிருந்தன என்பதை மேற்படி நூற்பாக்கள் தந்துள்ளன. விரிவான தகவல்களை அந்நூற்பாக்களிற் பெறமுடியவில்லை. காரணம் பாட்டு என்ற குறித்த ஒரு வகை மட்டும் முதன்மைப்படுத்தியதான அதன் (தொல்காப்பிய பொருளதிகாரத்தின்) பார்வையே ஆகும். இதனால் பண்டைத்தமிழ் இலக்கியப்பரப்பில் ஒருபகுதிக் காட்சியை மட்டுமே அவ்விலக்கணம் எமக்கு வழங்கியுள்ளது என்பது நினைவில் இருக்க வேண்டிய வரலாற்றம்சமாகும்.

இவ்வாறு தொல்காப்பியப் பொருளதிகாரத்தை விமர்சிப்பதானது தமிழிலக்கியத் திறனாய்வியல் அதற்குரிய வரலாற்று முதன்மையையும் முக்கியத்துவத்தையும் மறுப்பதாகாது என்பது இங்கு அழுத்தமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். அந்நூல் மேட்டுக்குடி சார்ந்த ஒரு பார்வையாகத் திகழ்கின்ற காரணத்தாலேயே பல நூற்றாண்டுகளாக மீண்டும் மீண்டும் ஏடுகளில் படியெடுக்கப்பட்டுப் பேணப்பட்டதாக எமக்கு இன்று கிடைத்துள்ளது என்பதனை இங்குநாம் நினைவில் இருத்த வேண்டும்.

மொழி சார்ந்த ஒரு ஆக்கம் – குறிப்பான இலக்கிய, இலக்கணம் மற்றும் தத்துவம் என்பனசார் சிந்தனைகளும் படைப்பாக்கங்களும் – எழுத்தில் பதிவு பெறுவதற்கும் தொடர்ந்து படியெடுத்துப் பேணப்படுவதற்கும் சமூக அதிகாரச் சூழலொன்றின் பின்புலம் முக்கியம் என்பதை நாம் இங்கு மனங்கொள்ளவேண்டும். அவ்வகையில் தொல்காப்பியப் பொருளாதிகாரச் சிந்தனைகளும் சமூக அதிகாரச் சூழலொன்றின் பேணுகைக் கூடாகவே எமக்குக் கையளிக்கப்பட்டுள்ளன என்பது ஊகித்துணரக்கூடியது.

(அவ்விலக்கணம் எழுந்த காலப்பகுதியில் மேற்படி 'மேட்டுக்குடி'ச் சார்பற்றனவும் பாட்டு தவிர்ந்த ஏனைய வகைகளுக்கு முதன்மை தந்தனவுமான இலக்கியச் சிந்தனை நிலவியிருக்கலாம் என்பதும் அவை இலக்கண நிலைப்படுத்தப்பட்டுப் பதிவுபெறாமலும், பதிவு பெற்றவை பேணப்படாமலும் அழிந்து போயிருக்கலாம் என்பதும் நமது ஊகத்துக்குரிய வரலாற்றம்சங்களாகும்).

### 3.1.1.6 சங்கப்பாடல்களின் ஊடாகப் புலப்படும் படைப்பாக்க வளர்ச்சி முறைமை – சுருக்கமான வரலாற்றுக் குறிப்பு

மேற்படி தொல்காப்பியப் பொருளதிகாரமானது சங்க இலக்கியச் சூழலுடன் மிக நெருக்கமான தொடர்புடையது என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். அவ்விலக்கணத்திற்கு பின்னரான தமிழ்த் திறனாய்வியல் சொல்நெறியை நோக்குவதற்கு முன்னராக, சங்கப் பாடல்களில் நாமே நோக்கியுணரவேண்டியதுமான வறலாற்று அம்சம் ஒன்று உளது. அது, அப்பாடல்களூடாகப் புலப்படும். 'படைப்பாக்க வளர்ச்சி முறைமை' ஆகும். இது பற்றிய ஒரு குறிப்பு:

சங்க இலக்கியப் பரப்பின் மிகப் பெரும்பகுதி தனித் தனிப் பாடல்களைக் கொண்டமைந்ததாகும். ஐங்குறுநூறு என்ற எட்டுத்தொகை நூல் மட்டும் குறித்த ஒரு உணர்வம்சமானது பத்துப்பாடல்களின் தொடர்வதான முறையில் அமைந்துள்ளது. பதிற்றுப்பத்து என்ற தொகுப்பிலே பத்துப்பத்தாக பாடல்கள் தொகுக்கப்பட்ட நிலையினை நோக்கமுடிகிறது. ஆயினும் அதில் ஒவ்வொரு பாடலும் பொருள்நிலையில் தனித்தே நிற்பனவாகும். எனவே, சங்க இலக்கியமானது தனிப்பாடல் என்ற அமைப்பு நிலை கொண்டதெனப் பொதுவாகக் கூறலாம்.

இப்பாடல்கள் வாழ்க்கையை தனித்தனிச் சம்பவங்களாக நோக்குபவை என்பது பொது நிலை. அவ்வகையில் அவை அகவாழ்வு (காதல்) மற்றும் புறவாழ்வு (போர் மற்றும் சமூக பொருளியல் அம்சங்கள்) என்பனசார்ந்த குறித்த ஒரு உணர்வு நிலையை அல்லது செய்தியை மையப்படுத்தியமைந்தவையாகும். சில அடிகளிலமைந்த குறுந்தொகை மற்றும் புறநானூறு ஆகிய எட்டுத்தொகை நூல்களின் பாடல்களில் இப்பண்பை நோக்க முடியும். சில பாடல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உணர்வு நிலைகளைத் தொடர்நிலைப்படுத்தி எடுத்துரைப்பதாகும். நூற்றுக்கணக்கான அடிகளில் அமைந்த பத்துப்பாட்டு தொகுப்பின் பாடல்களில் இத்தகைய உணர்வுத் தொடர் நிலைகளை நோக்கியுணர முடியும்.

இவ்வாறான **எட்டுத்தொகை** மற்றும் **பத்துப்பாட்டு** பாடல்களில் காணப்படும் வேறுபாடானது சங்ககாலப்பகுதியில் படைப்பாக்கநிலையில் நிகழ்ந்து வந்த வளர்ச்சி முறைமையை உணர்த்துவதாகும். எட்டுத் தொகையிலுள்ள பாடல்கள் குறிப்பாக குறுந்தொகை மற்றும் புறநானுறு முதலியவற்றிலமைந்த பாடல்கள் பொதுவாக குறித்த ஒரு உணர்வு அல்லது செய்தியைச் சில அடிகளில் கட்டிறுக்கமாக எடுத்துரைக்கும் கவித்துவ வெளிப் பாடுகளாகும். அப்பாடல்களில் அந்த உணர்வு அல்லது அச்செய்தியின் 'தொனிப் பொருள் அம்ச'த்தின் தேவைக் கேற்ப அடியளவு சுருக்கமாக அயைக்காணலாம்.சான்றாக ஒரு பாடல்.

*நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரளவின்றே சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேனிறைக்கும் நாடனொடு நட்பே.*

(குறுந்தொகை:3)

தேவகுலத்தார் என்ற புலவரின் இப்பாடல்கள் பெண்ணொருத்தியின் காதலுணர்வின் வெளிப்பாடாகும். தான் தனது காதலனுடன் கொண்டுள்ள அன்பானது அளவிடற்கரிய பேருணர்வாகும் என்பதே அவள் உணர்த்த விழைந்த செய்தியாகும். இதனை அவள் தான் பெரியவை எனக்கருதும் இயற்கைக்கூறுகளான நிலம்(பூமி), நீர்(சமுத்திரம்), ஆகாயம் ஆகிய மூன்றையும் ஒப்பிட்டுப் பேசுகிறாள். பொருட் செறிவான சொற்களில் கட்டிறுக்கமாக இப்பாடல் அமைந்துள்ளமை வெளிப்படை.

இவ்வாறான **குறுந்தொகைப்** பாடல்கள் முறைமையிலிருந்து **நற்றினை** மற்றும் **அகநானூறு** ஆகிய **எட்டுத்தொகை** இலக்கியங்களின் பாடல்களில் அடியளவு நிலையில் விரிந்து செல்வதான போக்கைக் கண்டுணர முடியும். இந்த விரிவானது மேற்படி குறித்த உணர்வு அல்லது செய்தியை அவற்றுக்கான நிலம், சூழல், காலம் முதலான பின்புல அம்சங்களுடனும் குறித்த சில உத்திமுறையிலமைந்த படைப்பார்வம் சார்ந்ததாகும். இவ்வார்வம் சார்ந்ததான 'நோக்கு' என்ற உத்திமுறையிலமைந்த முல்லை வைந்நுனை என்ற தொடக்கத்திலான அகநானூற்றுப்பாடலை முன்னைய கட்டுரையில் நோக்கியுள்ளோம். முல்லைத்திணை சார்ந்த அப்பாடல் தலைவனின் வரவுக்காகக் காத்திருக்கும் தலைவியின் உணர்வுச் சூழலை மையப்படுத்தியதாகும்.

இவ்வாறான உணர்வுச் சூழலைப் பல்வேறு துணைநிலை அம்சங்களுடன் அகலப்படுத்தி 100க்கு மேற்பட்ட அடிகளில் ஒரு சொல்லோவியமாகத் தீட்டிய செயற்பாடாகவே **பத்துப்பாட்டில்** ஒன்றாக இடம்பெற்ற முல்லைப்பாட்டு என்ற ஆக்கம் அமைந்துள்ளது. இது போலவே குறுந்தொகையில் மேலே சுட்டப்பட்ட 'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று' முதலியனவாக அமைந்த பாடல்களில் சில அடிகளில் பாடப்பட்ட குறிஞ்சிநிலக் காதல் என்ற உணர்வம்சமானது பல்வேறு துணைநிலைக் கூறுகளுடன் நூற்றுக்கணக்கான அடிகளில் விரிநிலை எய்துவதை பத்துப்பாட்டிலொன்றான குறிஞ்சிப்பாட்டு என்ற ஆக்கத்திலே நோக்கியுணர முடியும்.

பருவ வயதினரான ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் முதன்முறை சந்தித்த சூழல் அவர்களிடையில் முகிழந்த காதல்சார் உணர்ச்சிப் பறிமாற்றங்கள் பின்னர் அவர்கள் அடிக்கடி சந்தித்த முறைமைகள், ஒருகட்டத்தில் அவர்கள் சந்திப்பதில் ஏற்பட்ட சூழல் சார் தடைகள், என்பவற்றை விரிவாக எடுத்துரைக்கும் இவ்வாக்கம், ஈற்றில் அவ்விருவரும் இணையவேண்டியது பண்பாட்டுநிலையில் தவிர்க்கமுடியாதது என்பதை உணர்த்துவதுடன் நிறைவுபெறுகின்றது.

இவ்வாறு மேற்சுட்டிய முல்லைப்பாட்டு மற்றும் குறிஞ்சிப்பாட்டு ஆகியன புலப்படுத்தி நிற்கும் அகலப்படுத்தலானது படைப்பாளியின் கற்பனைவிரிவு, அநுபவ அம்சங்கள் பலவற்றையும் தொகுத்தமைக்கும் ஆர்வம் மற்றும் பண்பாட்டுக்கூறுகளைப் பதிவுசெய்யும் நோக்குநிலை முதலியன சார்ந்ததாகும். ஒரு துணுக்குச் செய்தி மற்றும் குறுங்கதை என்பவற்றுக்குரிய உணர்வம்சங்கள், சிறுகதையாக மற்றும் குறுநாவலாக (மற்றும் 'சின்னத்திரை டி.வி நாடக'மாக) அகலப்படுத்துவதாக படைப்பாக்க விரிநிலையை இங்கு கற்பனை செய்து கொள்ளலாம்.

மேற்படி அகத்திணை ஆக்கங்களில் நிகழ்ந்ததைப் போலவே புறத்திணைப் பாடல்களின் அமைப்பிலும் படைப்பாக்க வளர்ச்சி நெறியொன்றை தெளிவாக இனங்காண முடிகின்றது. எட்டுத்தொகையிலுள்ள புறத்திணை சார்ந்த முக்கிய தொகுப்பான புறநானூற்றில் இடம்பெற்றுள்ள சில அடிகளான பாடல்களையும் பத்துப்பாட்டுத் தொகைநூலிலுள்ள ஆற்றுப்படை ஆக்கங்களையும் தொடர்புபடுத்தி நோக்குவோர்க்கு இந்த வளர்ச்சி அம்சம் தெளிவாகவே புரியும்.

புறநானூற்றுப் பாடல்களில் ஒருவகையானவை மன்னர்கள், குறுநிலத் தலைவர்களின் ஆட்சித்திறன், வீரம் மற்றும் கொடைமாண்பு முதலியவற்றைப் போற்றுதல் மற்றும் அவர்களுக்கு அறிவுரை கூறுதல் முதலிய நோக்குகளின் வெளிப்பாடுகளாக அமைந்தவை. இன்னொரு வகையானவை சமூகத்துக்குப் பயன்படும் அறம்சார் அம்சங்கள் மற்றும் வாழ்வியல் அநுபவங்கள் என்பன சார்ந்த இயல்பான மன எழுச்சிகளின் குரல்களாகும்.

இவற்றுள் மன்னர்கள் மற்றும் குறுநிலத் தலைவர்கள் (பொதுவாக வள்ளல்கள்) ஆகியோரின் புகழ்பாடும் முறைமையில் அமைந்த பாடல்களிற் சில புலவராற்றுப்படை, பாணாற்றுப் படை, விறலியாற்றுப்படை என்பனவாகத் துறை சுட்டி, அடையாளப்படுத்தப்படுபனவாகும். ஆறு என்பது வழி எனப் பொருள்தருவது என்பதும் 'ஆற்றுப்படை' என்ற சொல் தொடர் வழிப்படுத்துதல் என்ற பொருளில் வழங்கி வருவது என்பதும் பொதுவாக பலராலும் அறியப்பட்டவையே. ஒருவர் தான் அறிந்து, அநுபவித்த இன்பங்களைப் பிறரும் அறிந்தனுபவிக்க வேண்டும் – யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் – என்பதான மனிதநேய உணர்வே தமிழில் ஆற்றுப்படை என்ற பாடல் உருவாக்கத்துக்கான அடிநாதமாகும்.

வள்ளல் ஒருவரிடம் பரிசில்பெற்ற கலைஞரொருவர் (பாணன், பொருநன், கூத்தன் அல்லது விறலி) அவ்வகைப் பரிசில்களைத் தம்முடைய கலைமரபு சார்ந்த பிற வறிய கலைஞர்களும் பெற்றநுபவிக்க வேண்டும் என விரும்புகிறார். இதற்காக அவர்களுக்கு வழிகாட்ட முற்படுகிறார். இதனையே **புறநானூற்**றில் சில அடிகளில் அமைந்த ஆற்றுப்படைப் பாடல்கள் எமக்கு உணர்த்துகின்றன.

இவ்வாறான பாடல் துறையானது ஒரு தனி இலக்கிய வகையாக விரிவும் வளர்ச்சியும் எய்துவதையே **பத்துப்பாட்டின் பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)** ஆகியன காட்டுகின்றன. இப்பாடல்கள் முறையே முடத்தாமக் கண்ணியார், உருத்திரங்கண்ணனார், நத்தத்தனார் மற்றும் பெருங்கௌசிகனார் ஆகியோரால் பாடப்பட்டன. (இவற்றின் வரிசையில் மற்றொரு ஆக்கமான **திருமுருகாற்றுப்படை**யானது சமய வழிபாட்டுப் பொருண்மையில் அதாவது இறைவனிடம் அடியாரை வழிப்படுத்தும் முறைமையில் அமைந்ததாகும். அவ்வகையில் இது மேற்படி நான்கிலிருந்தும் வேறாக வைத்துக் கணிக்கப்படுவதாகும்).

மேற்படி முற்குறித்த நான்கு ஆற்றுப்படைகளின் அமைப்பின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு மூவகைப்படுத்தலாம். வள்ளலைப் பாடிப் பொருள் பெற்று வரும் கலைஞரும் (பொருநர், பாணர், கூத்தர் மற்றும் விறலியர் ஆகியோருள் ஒருவர்) வறுமையில் வாடிய கலைஞரும் வழியில் சந்தித்தல், பொருள் பெற்று வந்தவர் தனக்கு வள்ளலிடம் கிடைத்த உபசரிப்பையும் பொருள்வளத்தையும் வறிய நிலையினருக்கு எடுத்துரைத்தல், அவ்வறிய கலைஞரை வள்ளலிடம் வழிப்படுத்தல் என்பனவே, அவை. இவ்வாறமைந்த ஆற்றுப்படை இலக்கியங்களின் வகையின் அமைப்பு நிலையை,

*"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇ*
*சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"*

எனத் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாபகுதி மூலம் தெளிந்து கொள்ள முடியும். ஆற்றிடைக்காட்சி என்பது வழியிலே நிகழும் சந்திப்பாகும். உறழத் தோன்றுதல் என்பது மாறுபட்டுத் தோன்றுதல் ஆகும். ஒருவர் பரிசில்கள் பெற்றுவரும் நிலையில் செல்வச் செழிப்புடன் காட்சி தருகிறார். மற்றவர் வறியவராக இரக்கப்படத்தக்க நிலையில் உள்ளவர். இவர்களில் முற்சுட்டியவர் பிற்சுட்டிய வறியவருக்கு வழி கூறுகிறார். இதுவே இந்நூற்பாப் பகுதியின் தெளி பொருளாகும்.

மேற்சுட்டிய இந்நான்கு ஆற்றுப்படைப் பாடல்களும் அவற்றைப் பாடிய புலவர்களின் (படைப்பாளிகளின்) உலகநோக்கு மற்றும் அநுபவநிலை என்பவற்றின் விரிவை இனங்காட்டுவனவாகும். இவற்றினூடாக அப்புலவர்கள் தமது

முதலாவது, சமகாலப் பாணர் மற்றும் பொருநர் முதலிய கலைக்குடும்பத்தினரின் வறுமைச்சூழல் பற்றிய மனிதநேயப் பார்வை (இரக்கநிலை) யாகும். இன்னொன்று அக்கால வள்ளல்கள் பலரின் "வாரிவழங்கும் உபசரிப்புத் திறன்" மீதான பெருமதிப்பு. இது, வள்ளல் புகழ்பாடும் அம்சமாகும்.

இவைதவிர, அப்புலவர்களது பிரதேசப் புவியியலறிவு மற்றும் பல்வேறு நிலங்களில் வாழும் மாந்தரின் பண்பாட்டுநிலைகள் பற்றிய அறிவு ஆகியவற்றை இலக்கியமாகப் பதிவு செய்யும் ஆர்வமும் இவ்வாற்றுப்படைப் பாடல்களில் வெளிப்பட்டு நிற்கின்றன. குறிப்பாகப் **பெரும்பாணாற்றுப்படை**யிலே பாணன் நடை பயில வேண்டிய வழி வருணனையில் அக்காலத் தமிழகத்தின் பல்வேறு பிரதேசங்களுடைய நிலவியல் (நானிலவளம்), சமூக – பண்பாட்டம்சங்கள் முதலியன பற்றிய தகவல்கள் விரிவாக 300 அடிகளுக்குமேல் பதிவாகியுள்ளன.

இவ்வகையிலே, உலகநோக்கு மற்றும் அநுபவநிலை என்பவற்றின் விரிவுக்கு ஏற்பப் புறத்திணைப்பாடல்களின் படைப்பாளுமை அகலப்படும் முறைமையை மேற்படி ஆற்றுப்படை ஆக்கங்கள் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன.

'சங்கப் பாடல்களின் ஊடாகப் புலப்படும் படைப்பாக்க வளர்ச்சி முறைமை' என்ற வகையிலே அகத்திணை மற்றும் புறத்திணைப் பாடல்களில் நிகழ்ந்த முக்கிய வளர்ச்சிப் போக்குகளை இதுவரை சுருக்கமாக நோக்கினோம். இத்தொடர்பிலே சங்க காலப்பகுதியில் படைப்பாக்க நெறியில் நிகழ்ந்த மற்றொரு செயன்முறையையும் இங்கு சுருக்கமாகச் சுட்டுவது வரலாற்று நோக்கில் அவசியமாகிறது. '**சில குறிக்கோள்களுக்கான உத்தியாக இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் முறைமை**'யே அது. அதற்கான சங்க காலச் சான்றாகக் கொள்ளக்கூடியது எட்டுத் தொகை நூல்களிலொன்றான **பதிற்றுப்பத்து** ஆகும். சேரமன்னர் மரபின் இரு கிளையினர் தத்தம் பரம்பரைப் பெருமையை இலக்கிய நிலையிற் பதிவு செய்து கொள்ளும் நோக்கில், சில புலவர்களைக் கொண்டு திட்டமிட்டு ஆக்கிக் கொண்ட புறத்திணைப் பாடல்களின் தொகுதி, அது.

எட்டுத் தொகை நூல்களிலொன்றான முற்சுட்டிய **புறநானூ**ற்றிலும் மன்னர்கள் மற்றும் குறுநிலத் தலைவர்களின் புகழ்பாடும் பாடல்கள் உள என்பதும், **பத்துப்பாடல்** தொகுப்பில் இடம்பெற்ற **ஆற்றுப்படை** ஆக்கங்களிலும் மன்னர் புகழ்பாடும் பண்பு உளது என்பதும் வெளிப்படை. ஆயினும் அவற்றுட் பலவும் புலவர்களின் நேரடியான அநுபவங்கள் சார்ந்த இயல்பான உணர்வெழுச்சிகளாக வெளிப்பட்டவையாகும். **பத்துப்பாட்**டின் மேற்சுட்டிய ஆற்றுப்படைகளில் மனிதநேயம் சார்ந்த உலகநோக்கு மற்றும் அநுபவ அடிப்படைகளிலான படைப்பாளுமை வளர்ச்சி என்பன உளவென்பதையும் மேலே நோக்கினோம். ஆனால் **பதிற்றுப்பத்துப்** பாடல்களில் ஒரு திட்டப்பாங்கான – செயற்கையான – புகழ்பாடும் பண்பை மட்டுமே இனங்காண்கிறோம். அவ்வகையில் **புறநானூ**ற்றுப் பாடல்களைப் பார்த்துப் பாடப்பட்டவை எனத்தக்க வகையில் அமைந்த பாடல்களின் தொகுப்பாகவே **பதிற்றுப்பத்து காட்சி தருகிறது.**

இவ்வாறு **பதிற்றுப்பத்து** தொடக்கி வைத்த இத்திட்டப்பாங்கான மன்னர் புகழ்பாடும் செயன்முறையின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகப் பின்வந்த காலங்களில் **முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை, நந்திக்கலம்பம், கலிங்கத்துப் பரணி, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்,** மூவருலா முதலியனவாகப் பெருந்தொகையான உத்திமுறை இலக்கியங்கள் உருவாகின என்பது வரலாறு தரும் செய்தியாகும். இவை பொதுவாக 7–8ஆம் நூற்றாண்டுகளை அடுத்தும் பின்வந்த நூற்றாண்டுகளிலும் எழுந்தவையாகும். இவற்றின் காலத்தில் '**மெய்க்கீர்த்தி**' என்ற பெயரில் மன்னர் புகழ் பாடுவதான அரசியற் சூழல்சார்ந்த பிறிதொரு இலக்கிய வகையும் உருவாகியுள்ளது. இவ்வாறாக ஆளும் வர்க்கத்தை புகழ்வதற்காக இலக்கியத்தைக் கருவி நிலையிற் பயன்படுத்தும் செயன்முறை இன்றுவரை வெவ்வேறு வடிவநிலைகளில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறான இலக்கியங்களின் உருவாக்கப்பின்புலம் மற்றும் தகுதிப்பாடு என்பன பின்னர் தனியாக நோக்கப்படவேண்டியன. இத் தொடர்பில் இங்கு நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய அம்சம், 'குறித்த தலைவனின் (அதிகாரத்தில் இருப்பவரின்) புகழைப் புனைந்துரைப்பதே படைப்பாளியின் குறிக்கோள்' என்பதாகும். அக்குறிக் கோளுக்கு வடிவம் கொடுப்பதற்கான ஒரு கருவியாகவே குறித்த இலக்கியவகை அவரால் தேர்ந்து கொள்ளப்படுகிறது. தமது புலமைத் திறனுக்கு ஏற்றவகையில், 'காலச் சூழலுக்கு ஏற்ற பொருத்தமான இலக்கியவகை'யை அப்படைப்பாளி தேர்ந்து கொள்கிறார். இவ்வாறான ஆக்கமுறைமைகளில் அவருடைய உலகநோக்கு மற்றும் அநுபவ நிலைகள் என்பன முக்கியத்துவம் பெறுவதில்லை. மாறாக, குறித்த இலக்கிய வகைக்கேற்ற கற்பனைத்திறன் மற்றும் மொழிப்புலமை என்பனவே முதலிடம் பெறுகின்றன. எனவேதான் இவை உத்திமுறை மற்றும் கருவிநிலை இலக்கியங்களாகக் கொள்ளப்படவேண்டியவையாகின்றன.

சங்க இலக்கியம் புலப்படுத்தி நிற்கும் படைப்பாக்க வளர்ச்சிநிலைகள் பற்றிய சில முக்கிய வரலாற்றுச் செய்திகள் மேலே இதுவரை நோக்கப்பட்டன. இனி அடுத்துவரும் காலகட்டங்களின் இலக்கிய இயங்குநிலை நமது கவனத்துக்கு வருகின்றது.

### 3.1.2 சங்கப் பாடல்கள் தொல்காப்பியம் என்பவற்றின் பின்னர் 19ஆம் நூற்றாண்டிறுதி வரையான காலப்பகுதிச் செல்நெறியில் புலப்படும் முக்கிய திறனாய்வியல் அம்சங்கள்

#### 3.1.2.1. படைப்பாக்க நிலையில் நிகழ்ந்த வளர்ச்சி, மாற்றம் என்பனவும் பொருவிலக்கண மரபின் இயங்கு நிலைகளும்

சங்க இலக்கியமானது வாழ்வியலைத் தனித்தனி நிகழ்வுகளாக நோக்கியும் சிற்சில வாழ்வியல் அம்சங்களைத் தொகுத்து நோக்கியும் அமைந்த புலமைப் பதிவுகள் என்பதை மேலே நோக்கினோம். இவ்வாறான நோக்குநிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடுத்துவரும் கால கட்டங்களின் ஆக்கங்களில் எம்மால் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

அவற்றுள் ஒன்று, '**வாழ்வியலை முழுநிலையிலே நோக்கும் முறைமை**'யாகும். இம்முறைமையிலே தனிமனித நிலை, குடும்பநிலை மற்றும் சமூக நிலை ஆகிய முத்தளங்களிலும் வாழ்வியல் இயங்கும் நிலை கவனத்துள் கொள்ளப்படுகின்றது. இந்நிலைகளில் வாழ்வின் பல்வேறு பிரச்சினை அம்சங்களும் விமர்சனத்துக்கு உள்ளாகின்றன. அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கிய சிந்தனைகள்

தூண்டப்படுகின்றன. அவ்வகையில் வாழ்வியலைத் தத்துவ நிலைப்படுத்தி இலக்கியமாக்கும் படைப்பாளுமை இக்காலப்பகுதியில் (சங்க இலக்கியத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியில்) உருவாகின்றது.

இக்காலப்பகுதியில் நிகழத் தொடங்கிய இன்னொரு மாற்றம் **இறையனுபவத்தை முன்னிறுத்திய படைப்பாக்க முறைமை**யாகும். புறநிலையான உலகியல் வாழ்வு சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளுக்குமான ஒற்றைத்தீர்வாக 'இறை என்ற உயர் பொருள்' பற்றிய நம்பிக்கையை முன்னிறுத்தும் இலக்கிய வெளிப்பாட்டு முறைமை, இது.

இவற்றுள் முதலாவது மாற்றத்துக்கான முக்கிய சான்றுகளாக அமைவன சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பேரிலக்கியங்களாகும். இரண்டாவது மாற்றத்துக்கான சான்றுகளாக அமைவன **தேவாரம், திருவாசகம் மற்றும் திவ்யபிரந்தங்கள்** என்பனவாக வழங்கப்பெறும் பக்திப் பாடல்கள் ஆகும்.

ஏறத்தாழ கி. பி. 4–5 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்திருக்கலாம் என ஊகிக்கப்படும் **சிலப்பதிகாரம்** மற்றும் **மணிமேகலை** ஆகியன அக்காலகட்ட வாழ்வியல் தொடர்பான விமர்சனங்களாக வெளிப்பட்டவையாகும். குறிப்பாக, அன்றைய சமூகத்தின் ஆணாதிக்கநிலை சார்ந்த பண்பாட்டுப் பிரச்சினைகள் மற்றும் முடியாட்சிச் சூழலின் அதிகார வர்க்கக் குறைபாடுகள் முதலியவற்றை விமர்சிப்பதான கதையம்சங்களுடன் உருவானவை இவை. தமிழ்ப் படைப்பாக்க வரலாற்றிலே 'கதையம்ச'த்தை மையப்படுத்திய ஆக்கமுறைமைக்கு இவ்விரு பேரிலக்கியங்களுமே தோற்றுவாய் செய்தன என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய செய்தியாகும்.

**சிலப்பதிகாரம்** தொடர்பாக மேலும் சிறப்பாகச் சுட்டத்தக்க அம்சம், தமிழகத்தின் மூவேந்தர் நிலங்கள் எனப்படும் சோழ, பாண்டி, சேர நாடுகளை இணைத்து நிற்கும் ஆக்கம் இது என்பதாகும். இதன் கதை நிகழ் களங்களாக மேற்படி மூன்ற நாடுகளும் அமைந்துள்ளன. இதற்கேற்ற வகையில் அவ்வந் நாடுகளின் தலை நகரங்களின் பெயரிலேயே, 'புகார்க் காண்டம்', 'மதுரைக் காண்டம்' மற்றும் 'வஞ்சிக் காண்டம்' எனக் காண்டப் பிரிப்பும் இவ்வாக்கத்தில் அமைந்துளது. இவ்வகையில், தமிழின் படைப்பிலக்கிய மரபிலே தமிழகத்தின் மூவேந்தர் நிலங்களின் வாழ்நிலை அம்சங்களை ஒருங்கே பார்வை வட்டத்துள் இட்டு வந்துள்ளதாக முதன்முதலில் நமக்குக் கிடைக்கும் ஆக்கம் இப்பேரிலக்கியமே என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய செய்தியாகிறது.

இவ்வாக்கத்துக்கு முன்னர் எழுந்தவையாகக் கொள்ளப்படும் **பத்துப்பாட்டு** ஆக்கங்களில் **மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை** என்பவற்றில் முறையே மதுரை, காவிரிப்பூம் பட்டினம் என்பனவற்றின் புவிச்சூழல் மற்றும் பண்பாட்டுக் கோலங்கள் விரிநிலையில் பதிவாகியிருந்தன. **பெரும்பாணாற்றுப்படை**யிலே தமிழகத்தின் பல்வேறு பிரதேசத்தில் வளங்கும் சமூக – பண்பாட்டம்சங்களும் பதிவாகியுள்ளமையை மேலே நோக்கியுள்ளோம். இவ்வாறான பண்பாட்டுப் பதிவு முயற்சிகளின் தொடர்ச்சி மற்றும் வளர்ச்சி எனத்தக்க வகையில் தமிழக மூவேந்தர் ஆள்புலங்களையும் தழுவியதாக **சிலப்பதிகாரம்** அமைந்தது.

(தொடரும்)

---

# எண்ணத்தில் ஒரு துளி

**கவிதா, கொட்டகலை**

*உன்னை என் மனதுள்*
*எண்ணிக்கொள்ளும்*
*போதெல்லாம்*
*ஓர் ஆனந்தம்*
*உன் நினைவுகளை*
*மனதில்*
*சுமக்கும் போதெல்லாம்*
*பேரானந்தம்*
*இங்குநான்*
*தனிமையிலே*
*சுதந்திரப் பறவையென்*
*நரகத்தில் வாழ்வதுவிடவும்*
*நிலம் கடந்து - உன்*
*மனமெனும்*
*சுவர்க்க சிறைக்குள்*
*ஆயுள் கைதியாகி விடுகிறேன்.*
*உன்னை நேசித்த பின்புதான்*
*உலகை நேசிக்க தொடங்கினேன்.*
*உன்னோடு பேசிய பின்புதான்*
*மனதோடு உறவாட*
*மிதமாய் கற்றுக் கொண்டேன்*
*உன்னோடு பழகிய பின்புதான்*
*காதலை உணர்ந்து கொண்டேன் - உன்*
*மனதில் விழுந்த பின்புதான்*
*காதலின் ஆழமறிந்தேன் - இன்று*
*உன்னை பிரிந்திருக்கிற போதுதான்*
*காத்திருப்பின் சுகத்தையும்*
*காதலின் வலியையும் அனுபவிக்கிறேன்... !*

# அவன் என் நண்பனாயிருந்தான்

சுதர்ம மகாராஜன்



அந்த முகத்தை மீண்டுமொருமுறை பார்க்க வேண்டுமென்ற அவா உள்ளுக்குள் நீரூற்றுப் போல் கொப்பளித்துக் கொண்டிருந்தது. அது பரிச்சயமான முகம். மின்னல் போல் வந்து போயிற்று. அவன் கண்களை சந்தித்த கண நேரத்தில் உள்ளுக்குள் ஊற்றெடுத்த துடிப்பு இரண்டு நாட்களாய் அனுபவித்த வேதனையை மறக்கச்செய்கிறது.

சிறு சதுர துவாரத்தின் வழியே மெல்லிய ஒளியில் நான்கு பேர் பேசிக் கொண்டிருந்ததை பார்க்கக் கூடியதாக இருந்தது. அவர்களின் ஒருவனாக அவன் இருந்தான். மற்றயோரை விட சற்று அதிகாரம் படைத்தவனாகக் காணப்பட்டான். அவன் குரலின் தொனி அதை வெளிப்படுத்தியது. அந்த வட்ட முகம், மேல் வாரிய தலை நன்கு பரிச்சயமானது. முரட்டுத்தனமான, திடமான உடலும் சற்று கருப்பான முகமுமாக அவன் இப்பொழுது வெகுவாக மாறியிருக்கின்றான். பழகிப்பார்த்த மென் கண்கள் சிவப்பேறி ஒரு வித குரோதம் குடியேறியவனாய் பார்க்க மனம் ஏதோ பதறுகிறது. பல வருடங்களுக்கு முன் பார்த்த மெலிந்து திரிந்த பயலா இவன்? ஆச்சரியமாகவும் இருக்கிறது.

அவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்து வெகுநேரமாகியும் கதவுத் துவாரத்தின் வெளியே அவன் நிழலின் இறுதி அசைவைக் கூட விடமுடியாதபடி பார்த்துக் கொண்டிருக்கிறேன். மனம் புரண்டு புரள்கிறது. அவன் என்னை அடையாளம் கண்டிருப்பானா? பழைய நட்பை உணர்ந்திருப்பானா? கேள்விகள் அடுக்கடுக்காய் முன்நின்றாலும், அவையாவும் அபத்தமானவையாய் தென்பட்டன இனி எல்லாம் முடிந்தாயிற்று எதிரியின் கரங்களில் எம் தலையெழுத்து என்கிற தருவாயில் நிற்கும் போது தேவையற்ற பதபதைப்பை விலக்க முயற்சிக்கின்றேன்.

வதைபட்ட வலுவிழந்த உடலின் வலி, கணநேரம் நின்று கொண்டிருக்க முடியாத படி கதவோடு சரிந்து அமர்ந்து கொள்கிறேன். அறையின் முன் சுவரில் சாய்ந்த படி துவண்டு கிடந்தான் ஒருவன். இன்னுமொரு மூலையில் சுருண்டு கிடந்தான் இன்னொருவன். மொத்தமாக நாங்கள் மூன்று பேர் மூலையில் சுருண்டு கிடந்தவனை எனக்கு தெரியும் அவன் நிர்மல். மற்றையவனைக் கண்ட ஞாபகமில்லை அவன் மயக்கம் தெளிந்தவுடன் விசாரிக்க வேண்டும். விசாரணை என்ன எல்லா முடிந்தாயிற்று, இனி தீர்ப்பு மட்டும் தான்.

வெளி விறாந்தையிலிருந்து மெல்லிய ஒளி கதவிடுக்கின் வழியே கசிந்து அறையினுள் பரவியபடி இருளின் அடர்த்தியை குறைத்து விட்டது. அதன் இடுக்குகள் வழியே மீண்டும் அந்த முகம் தோன்றி மறைகிறது. மறக்கலாமென்று நினைத்தாலும் மனதின் ஏதோ ஒரு மூலையிலிருந்து அவன் நினைவுகள் வெளிக்கிளம்பி உசுப்பி வருகிறது.

அது அவன் தானா? இல்லையெனில் அவனை போன்று வேறொருவனா? எத்தனை கேள்விகள் பாசாங்காய் வந்து போனாலும், அது அவனே தான் என்று மனம் உறுதியாய் நம்பியது.

கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களின் பின் அவனை மீண்டும் சந்திப்பேனென்று எதிர் பார்க்கவேயில்லை அதுவும் இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் சிரிப்பு வந்தாலும் கிழிந்து வீங்கிய உதடுஅதை தாங்காது கண்களின் தோன்றி மறைகிறது.

போராட்டத்தின் வழி, இறுதிப்போரின் முனைவரை, வாழ்க்கையின் பல பழைய சம்பவங்களை அசை போட முடியாத படி ஒரு ஓட்டம். இன்று அது என் வரையிலும் நின்று போய் முடிவுறப் போகிறது. அந்த இறுதித் தருவாயில் பழையதை கிண்டி கிளறி அசைபோட அவன் முகம்.

அந்த காலத்தில் அவன் மெல்லிய உயர்ந்த தேகம் கொண்டவனாய் இருந்தான். இப்போது போலவே அப்போதும் மேல் வாரிய தலை. அந்நாட்களில் சற்று முடி அதிகம். அப்போது எமக்கு பதினேழு, பதினெட்டு வயதிருக்கும். ஒரே பாடசாலை, நான் தமிழ் பிரிவு, அவன் சிங்கள பிரிவு. A/L செய்து கொண்டிருந்தோம்.

அது கண்டியிலிருந்த பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்று. இரு பிரிவுகளில் படித்தாலும் கல்லூரியின் மாணவத் தலைவர்களாக நாம் இருவரும் ஒரே காலத்தில் பதவியேற்று, பல நிகழ்ச்சிகளில் ஒன்றாக கடமையாற்றி ஒருவருக்கொருவர் அறிமுகமாகி நண்பர்களாகியிருந்தோம்.

அது நான் கண்டியில் ஹாஸ்டலில் தங்கி படித்த காலம். அம்மா, அப்பா எல்லோரும் வவுனியாவில் இருக்க, நான் மட்டும் ஹாஸ்டலிலிருந்து படித்துக் கொண்டிருந்தேன். அந்நாட்களில் எனக்கிருந்த முக்கிய நண்பர்களுள் அவனும் ஒருவனாக இருந்தான். நான் அவன் வீட்டுக்கும், அவன் என் ஹாஸ்டல் அறைக்கும் வந்து பொழுதுகளை கழித்து திரியுமளவிற்கு நெருக்கமாகவிருந்தோம்.

அவனது அப்பா ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தார். பண்பான மனிதர், ஆனால் கண்டிப்பானவர். எப்போதும் அவன் செயல்களை கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார். அவனது நண்பர்களை தேடி அறிமுகமாகிக் கொள்பவர். தன் மகன் சுற்றித் திரியும் நண்பர்களோடு தானும் அறிமுகமாகி அவர்களின் நாடி பிடித்தறிபவர். இப்படித்தான் என்னோடும் பேசி உறவாடியிருக்கிறார். என் ஊர் நிலைமைகள் அறிந்து புதினப்படுவார். சிங்கள மொழியை சரளமாக பேச, வாசிக்க எழுத அவர்தான் எனக்கு பேருதவியாக இருந்தவர்.

அந்த உதவி பிற்காலத்தில் எனக்கு இயக்க வேலைகளில் என் வகிபாகத்திற்கு பெருதுணையாக இருந்தது. வெளிவேலைகளில் என் சரளமான சிங்கள அறிவு, பல காரியங்களில் எனக்கு வெற்றியைத் தந்திருக்கிறது.

அறையினுள்ளே இவ்வளவு நேரமும் குடி கொண்டிருந்த நிசப்தம் முன்னால் இருந்தவனின் முனகலால் என் பின்னோக்கிய நினைவுகளுக்கு கொக்கி போட்டது. அவன்

முனங்கியபடியே மடங்கியிருந்த கால்களை நீட்ட எத்தனித்தேன். ஒரு காலை மட்டுமே நீட்டக் கூடியதாக இருந்தது. மற்றையது அசைந்து கொடுக்கவில்லை. அடித்த அடியில் உடைந்திருக்கவேண்டும். அதன் வலிதான் அந்த முனகல்.

ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் நிலையில் நாமில்லை. எம்முடிவின் வடிவம் அறியாத நிலையில் எதையும் எதிர்கொள்ளும் சக்தியோடு காத்திருக்க மட்டுமே முடிகிறது.

முனகல் சத்தத்திற்கிடையே தூரத்தில் சில பூட்ஸ் சத்தங்கள் கேட்கின்றன. அவன் மீண்டும் வருகின்றானா ? என்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டானா? பூட்ஸ் சத்தம் அருகில் வரவர உள் மனதில் ஆர்வம் ஒரு பதைபதப்பை கொடுக்கிறது. அதில் பயம் மறைந்து, இனம் கண்டு கொள்ள முடியாத ஒரு உணர்வு ஊறி வழிகிறது. காதுகளை கூர்மையாக்கியபடி காத்திருக்கிறேன். பூட்ஸ் சத்தம் வந்தபடியே எம்மறை அருகே நின்றது என் ஆர்வம் மூச்சை இழுத்து பிடித்தது. பின் வந்த வழியே சென்று விட்டது. எனக்கு ஏமாற்றமாய் இருந்தது. அவன் என்னை சந்திக்க சங்கடப்படுகிறானா?

ஒரு வகையில் அவன் அந்த காலத்தில் கூட ஒரு கூச்ச சுபாவியாகத்தான் இருந்தான். அவனது நட்பு வட்டம் சிறியது. அதற்கு அவனது கூச்ச சுபாவம் கூட காரணமாயிருக்கலாம். அதனால்தான் அவன் அப்பாவால் அவன் நண்பர்களை இலகுவாக அணுக முடிந்திருக்கிறது.

அவனுக்கிருந்த ஒரே தமிழ் நண்பன் நான் மட்டும்தான். அதை அவன் அம்மா; நான் முதன்முதலாக அவர்கள் வீட்டிற்கு சென்று தமிழனென்று அறிந்தவுடன் ஆச்சரியப்பட்டு போனார். அவனுக்கு தமிழ் நண்பர்களும் இருப்பதில் அவருக்கு மகிழ்ச்சி. எல்லோருடனும் போல் அவர் என்னுடனும் மிக அன்பாக பழகினார். அவனது அம்மா படித்த, கண்டி உயர் குலத்தைச் சேர்ந்த பெண். அது அவர் பேச்சிலும், நடத்தையிலும் நன்கு புலப்படும். அவன் அம்மாவின் வார்ப்பு. அவனுடைய தங்கை அப்பாவை போலிருந்தாள்.

அவன் தங்கைக்கு ஆரம்பத்தில் என் சிங்கள உச்சரிப்பு சிரிப்பை கொடுக்கும். அப்படி சிரிக்கும் போதெல்லாம் நானும்கூட சேர்ந்து சிரித்து மழுப்பி விடுவேன். பின் அவளுக்கு தமிழ் மொழியில் ஓரிரு வார்த்தையாவது பேசும்படி சவால் விடுவேன். என் சிங்கள மொழிப் புலமையை கூறி பெருமைப்படுவேன். என்னோடு அவன் அம்மாவும் சேர்ந்து என்னை மெச்சுவார்.

அவன் அம்மாவின் சிரித்த வட்ட முகம் இருளின் வழியே தோன்றி மறைகிறது. அவள் கொடுத்தனுப்பும் வாட்டிய வாழையிலையில் கட்டிய சோறும், பொலஸ்க்காய் கறியும், வறுத்த சம்பலும் அவனுடன் பகிர்ந்து உண்ட நாட்கள், அவன் நினைவில் வைத்திருப்பானா? எனக்கே இன்றுதான் ஞாபகத்தில் வந்து போகிறது. அவனுக்கெங்கே நினைவிருக்கப் போகிறது. சில நேரம் என்னை அடையாளம் கண்டிருந்தால் ஞாபகத்தில் வரக்கூடும். அடையாளம் கண்டிருப்பானா ?

கேள்விகள் வட்ட வட்டமாய் வந்து விடைகளின்றி மனதை அலைக்கழிக்கிறது. இருட்டின் வழியே முன்னிருக்கும் இருவரையும் கூர்ந்து கவனித்தேன். நிர்மலின் அசைவு தெரிந்து. மற்றையவனின் முனங்கல் நின்று போய் அசைவற்று கிடந்தான். சில நேரம் அவன் இறந்திருக்கக் கூடும். அது அவனுக்கு பெரும் விடுதலை.

உக்கிர மோதலின் முடிவில் அரை உயிரோடு பிடிபட்டு இப்படி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பதைவிட களத்திலேயே மாண்டிருக்கலாம். மரணத்தின் பயத்தைவிட பழைய நட்பின் முகம், பல மடங்கு பயத்தை தருகிறது.


இறுதியாய் A/L முடித்து மூன்று மாதங்களுக்கு பின் கண்டியிலிருந்து வரும்போது அவனை சந்தித்தது. பின் சில கடிதத் தொடர்புகள். பின் வன்னியில் ரவியின் தொடர்பு. இயக்கத்தில் இணைந்தது. அன்று அறுபட்ட தொடர்பு பல வருடங்களின் பின், இன்று இப்படியா சந்திக்கவேண்டும்.

அப்போதெல்லாம் பிரிவுகளின் பின் மீண்டும் சந்திக்கும்போது அவனிடம் ஒரு விநோத பழக்கமிருந்தது. அது எவரையும் மகிழ்ச்சியிலாழ்த்தும். தூர இருந்தே ஓடிவருவான். பின் கைகளை பிடித்து, இழுத்து கட்டித் தழுவி முதுகை தடவி விடுவான். அவனது அந்த அக்கறையான தடவுதலினாலான ஸ்பரிசம் மனதின் வடுக்களை மென்சிறகால் வருடி மறக்கடிக்கச் செய்வதாய் இருக்கும். ஒரு கட்டத்தில் அவனது தழுவுதலுக்கு ஏங்கிய நாட்களுமுண்டு.

இன்றும், ஏனோ மனதில் ஒரு மூலையில் அந்த ஏக்கம் எட்டிப் பார்ப்பதாய் தோன்றுகிறது. இன்றும் அவனுக்குஅந்த விநோதப் பழக்கம் இருக்குமா? என்னைக் கண்டவுடன் பழைய நட்பில், கைகளை பிடித்து, கட்டித்தழுவி முதுகை தடவி, என் மன வேதனையை மறக்கடிக்கச் செய்து ஆறுதல் அளிப்பானா?

என் நினைப்பு எனக்கே விநோதமாய் பட்டது. ஒடிந்து விழுந்த மரக்கிளையில் எஞ்சிய இலைகளைப் போல் உசலாடிக் கொண்டிருக்கும் உயிர் நிலையற்று கிடக்கிறது.

இயக்கத்தில் இணைந்த ஆரம்ப நாட்களில் அவன் நினைவு அடிக்கடி வந்து போகும். ஓரிருமுறை இயக்க வேலை காரணமாக கண்டிக்கும் சென்றதுண்டு. அப்போதெல்லாம் அவனை சந்திக்க மனம் ஆவல் கொண்டாலும், ஏனோ பின் வாங்கி திரும்பி விட்டேன். பின் தொடர்ச்சியான போராட்ட வாழ்க்கை என் நினைவுகளிலிருந்து முழுமையாக அவனை புறம்தள்ளி அழித்துவிட்டிருந்தது. நீண்ட பயணத்தின் முடிவில் அவனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது ஒரு அற்புதம்தான்.



அற்புதங்களை வெகுவாக நம்புபவன் அவன். நம் கோயில்களில் அற்புதங்கள் நிகழ்வதாக தலதா மாளிகையினுள் அமர்ந்தபடி கூறுவான். பிள்ளையார் பால் குடித்ததை பல மாயங்களான ஆச்சரியத்துடன் கூறி மகிழ்ந்தான். நான் அதை மறுத்து காரணம் கூறியபோதெல்லாம் என்னோடு சண்டையிடுவான். ஒருநாள் தலதா மாளிகையினுள் வைத்து கூறினேன், இப்போதெல்லாம் பௌத்தர்கள், அபௌத்தர்களாக மாறி தமிழ் தெய்வங்களை விரட்டி திரிவதாக.

அவன் சிரித்தபடியே அதை பாதி ஆமோதிப்பான். அவனுடன் தலதா மாளிகையின் மூலை முடுக்கெல்லாம் சுற்றி திரிந்திருக்கிறேன். பின்னாளில் அதே மாளிகைக்கு குண்டு வைத்து தகர்ப்பதில் ஏற்பட்ட அதிர்வை நினைக்கையில் புத்தரின் மெல்லிய புன்னகை மனதை உறுத்துகிறது.

நம் வீட்டின் சாமியறையில் அம்மா சிறிய புத்தர் சிலையொன்றையும் வைத்திருந்தார். "புத்தரும் நம்ம சாமிதான் தம்பி" என்று அம்மா கூறுவாள். புத்தரின் முகத்தோடு அம்மாவின் முகமும் முன்னின்று மனதை அழுத்தியது.

என் அம்மாவுக்கு அவனைப் பிடிக்கும். அம்மா என்னை பார்க்க கண்டி வரும் அநேக நாட்களில் அவன் என் கூட இருந்திருக்கிறான். அம்மா சொல்வாள் "சிங்களப் பொடியனென்றாலும், நல்ல மரியாதையானவன் என்று. அம்மாவை ஊருக்கு பஸ்சில் ஏற்றப்போகும் போதெல்லாம் அவன் பஸ் ஸ்டேண்ட் என்று கூட பாராமல் அம்மாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குவான். இந்த ஒரு காரணத்திற்காகவே அவனை அம்மாவுக்கு மிகவும் பிடித்து போயிற்று.

அவனுக்கு முறுக்கென்றால் இஷ்டம். அம்மா ஊரிலிருந்து செய்து கொண்டு வரும் முறுக்கு பார்சலில் பாதியை அவனே முடித்து விடுவான். பருத்தித்துறை வடையை ருசி கண்டு, அள்ளிக் கொண்டு போவான். எப்போது நான் வீட்டுக்கு போய் வந்தாலும், முறுக்கும் பருத்தித்துறை வடையும் அவனுக்காக கொண்டு வருவதுண்டு.


பலமுறை அவனை எம் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போதெல்லாம் ஏதோ ஒரு காரணத்தினால் தவறி விடும். அவனும் என்னோடு வவுனியா சென்று ஊர் சுற்றி பார்க்கும் ஆவலில் இருந்தான். இருந்தும் அது கைகூடாமல் போயிற்று.

ஒரு சில வருடங்களே எம் நட்பு தொடர்ந்ததென்றாலும், அதுமிக இறுக்கமானதாகவும், ஆழமானதாகவும் இருந்தது. காலத்தின் முகம் அதை வேறு வேறு வடிவத்தில் மாற்றியமைத்து, இன்று அதன் வடிவம். வர்ணமிழந்து மக்கிப் போன சித்திரமாய் தோன்றி நிற்கிறது.

பழைய நினைவுகள் தூசுகளோடு துளிர்த்தெழும்போது, ஏனோ வெகு நாட்களுக்குப்பின் கண்களில் கண்ணீர் துளி முளைத்து உதிர்கிறது. ரணம் கொண்ட உடலின் அசதி, அப்படியே கண்கள் சொருகி சாய்கையில் மீண்டும் தூரத்தில் பூட்ஸ் சத்தங்கள். மனம் ஆர்வமாகிறது. அவன் வருகிறானா?

பூட்ஸ்களின் ஓசை நெருங்க நெருங்க மனதின் ஆர்வம் சூழன்றடிக்கும் சுழியாய் மூச்சை முட்டுகிறது. அறையின் கதவருகே பூட்ஸ்கள் நின்றன. கதவு திறபடுகிறது.

டோர்ச்சின் ஒளி அறையில் பரவ, கண்கள் கூசி பணிந்தன. இருவர் உள் நுழைந்து, ஒருவன் என் சட்டை கொலரினால் பிடித்து தூக்கி இழுத்தான். வலுவிழந்த உடல் அவன் இழுப்புக்கேற்றபடி அசைந்து கொடுத்தது. இழுத்தது அவன்தானா ? உற்று நோக்கினேன் முகத்தில் ஒரு குத்து விழுந்தது.



வலிக்கவில்லை. அவனாயிருந்தால் வலித்திருக்குமோ என்னவோ? கைகளை பின்னால் இழுத்து வார் ஒன்றினால் கட்டினான். நிமிர்ந்து நிற்க முயற்சித்தேன். முன்னால் நின்றவன் பூட்ஸ் காலால் என் உயிர் நிலையில் உதைத்தான். சுருண்டு விழுந்தேன். கால்களை இன்னொரு வாரால் கடினார்கள். கண்கள் இன்னும் அவனைத் தேடியது. பக்கத்தில் நிர்மல் சுருண்டு கிடந்தான். மற்றையவனை காணவில்லை. அவன் முன்னமயே இறந்திருக்க வேண்டும்.

கால்களை ஒருவன் உயரப்பிடித்து பரபரவென இழுக்கத் தொடங்கினான். நிலத்தில் உடல் உராய்வின் ரணம் உறைக்கவில்லை. அவனை மீண்டுமொருமுறை பார்ப்பதிலேயே என் கவனமெல்லாம்.

ஓரிரு நிமிட இழுப்பின் பின் மண் குவித்த ஒரு வெளியில் எறிந்து கிடந்தேன். பக்கத்தில் நிர்மல், இன்னும் சிலபேர். அவன் இருக்கிறானா? என் கண்கள் தொண்ணூறு பாகையில் சுற்றி அலைந்தது. அது வெறிப்பிடித்த பைத்தியக்காரனைப் போல் துடித்தது. திடீரென துடிப்பு நின்று, தூரத்தே குத்தி நின்றது.

அங்கே ஒரு உருவம், கால்களை அகற்றி இறுமாப்போடு கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது. அது அவனேதான். மேல் வாரிய தலை, அன்று பழகிய மெலிந்த பயலா இவன். மனம் உற்சாகமடைந்தது, பின் திராணியற்று பதுங்கத் தொடங்கியது. கண்கள் மட்டும் அவன் மீது நிலைத்து நின்றது.

அவன் மெதுவாய் சில அடிகள் முன்வைத்து நம்மருகே கிட்டினான். இப்போது அவன் உருவம் தெளிவாக தெரிந்தது. என்னையே உற்று நோக்குவதாய் இருந்தது அவன் பார்வை. என்னை அடையாளம் கண்டு கொண்டிருப்பானா? மனம் பதறியது. பின் பதுங்கியது. நீண்ட நாட்களுக்கு பின் அவனை பார்த்த மகிழ்ச்சி, அவனது தழுவுதல் ஞாபகத்திற்கு வந்தது.

அவன் எல்லோரையும் ஒரு பார்வை விட்டான். பின் அந்த பார்வை என்னை நோக்கி பாய்ந்தது. முன்பிருந்த கனிவான கண்களுக்கு பதிலாக சிவந்து வெறித்த கண்கள் என்னை ஊடுருவியது. நானும் நேருக்கு நேர் நோக்கினேன் ஒரு சில நொடிகள் கண்கள் சந்தித்து மிரண்டன.

திடீரென அவன் கண்கள் கலவரமாகி, பணிந்து கலங்கியதை உணர்ந்தேன். ஆம், அவன் என்னை அறிந்து கொண்டான்.

நண்பனே .... வாய் உள்ளுக்குள் குழறியது. கலங்கிய அவன் கண்கள் மீண்டுமொருமுறை என்னைப் பார்த்து, திரும்பிக் கொண்டான். பின் கைகளை உயர்த்தி சைகை காட்டினான். நடந்தான்.

"நண்பனே.... ரூமல்" கண்கள் கலங்கி துடித்தது.

அவனது சைகை, எனக்குப் புரிந்தது.

ஒரு சில கணத்தில் சில தோட்டாக்கள் சத்தத்துடன் என் உடலை துளைத்து உயிருக்கு வழி கொடுத்தது.

இறுதியாய், உயிர் பிரியும் நொடியில், போகும் அவனை பார்த்தேன். கம்பீரமான நடை தளர்ந்திருந்தது. ஏனெனில் ஒரு காலத்தில் அவன் என் நண்பனாயிருந்தான்.

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

கே. பொன்னுத்துரை




தமிழக சிற்றிதழ் சிற்பி அமரர் சரஸ்வதி வ. விஜயபாஸ்கரனின் அனுதாப கூட்டம் மல்லிகை பந்தல் ஏற்பாட்டில் கொழும்பு 11 மணி மஹால் மண்டபத்தில் முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் தலைமையில் 05.03.2011 நடை பெற்ற போது ஞானம் ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் உரையாற்றுவதையும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்திய 'குமரன்' செ. கணேசலிங்கம் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஆகியோரையும் படங்களில் காணலாம்.

### சட்டத்தரணி இரா. சடகோபனின் 'கசந்த கோப்பி' வெளியீடு

கிறிஸ்டின் வில்சன் என்ற ஆங்கில நாவலாசிரியை எழுதிய Bitter Berry என்ற இலங்கையின் கோப்பி காலத்து ஆங்கில நாவலை எழுத்தாளரும், சட்டத்தரணியுமான இரா. சடகோபன் '' கசந்த கோப்பி' என்ற பெயரில் தமிழாக்கம் செய்த நூலின் வெளியீட்டு விழா மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் கொழும்புத்தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் (26.02.2011) மன்றத்தலைவர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் இலக்கிய புலவர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடை பெற்றது பிரதம அதிதியாக பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

சிறப்பு அதிதிகளாக பேராசிரியர் எம். எஸ். மூக்கையா, பேராசிரியர் எஸ் சின்னத்தம்பி வீரகேசரி நிறுவன நிர்வாக பணிப்பாளர் குமார் நடேசன், எம். வாமதேவன் சூரியா வெளியீட்டக அதிபர் அத்துல ஜயகொடி ஆகியோர். கலந்து சிறப்பு செய்தார்கள்.

வரவேற்புரையை கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கிரேஸ் சடகோபன் நிகழ்த்தினார்.

நூல் அறிமுகத்தை எழுத்தாளர் கலாபூஷணம் மு. சிவலிங்கமும் நூலாய்வினை கிழக்கு பல்கலைக் கழக மொழித்துறை பேராசிரியர் செ. யோகராஜாவும் மிகவும் விரிவாக செய்தார்கள்.

நன்றியுரையை ப. ஆப்டீனும் ஏற்புரையை நூலாசிரியர் இரா. சடகோபனும் நிகழ்த்தினார்கள்.

✦✦✦

### மட்டுவில் ஞானக்குமரனின் 'சிறகு முளைத்த தீயாக' கவிதை தொகுதி.

மட்டுவில் ஞானக்குமரனின் மூன்றாவது தொகுதியாக சிறகு முளைத்த தீயாக என்ற கவிதைத் தொகுதி காயத்திரி பப்ளிக்கேசன் வெளியீடாக வெளிவந்துள்ளது. கடந்த 27.02.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 06 மணிக்கு சட்டத்தரணி ஜீ இராஜகுலேந்திரா தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடை பெற்றது

திருமதி மைதிலி அமுதனின் இனிமையான தமிழ் மொழி வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வின் கவிதைசுவைக்க வந்த பார்வையாளர்களை தனது வீணைக் கச்சேரியின் மூலம் சிறிது நேரம் இசை வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள் இசைக்கலைமணி வாகீசன் குழுவினர். வாழ்த்துரைகளை பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் ஆகியோர் வழங்கினர். நூல் அறிமுகத்தை சக்தி FM தயாரிப்பாளர் ஆறுமுகம் இராஜ்மோகன் நிகழ்த்த, இந்நூலினை கவிஞர் அஸ்ரஃப் சிஹாப்தீன் தனக்கே உரித்தான பாணியில் நயவுரைத்தார்.

இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் ஆகியோர் முதல் பிரதியை பெற்று சிறப்பு செய்தனர்.

கவிதைத் தொகுப்பில் வெளியான கவிதைகளின் கங்குகளை சூரியன் முகுந்தன், செல்வி எழில்மொழி இராஜகுலேந்திரா, ஆகியோர் எடுத்துரைத்தனர்.

✦✦✦

### சரஸ்வதி வ. விஜயபாஸ்கரனுக்கு அனுதாபக் கூட்டம்.

மறைந்த சரஸ்வதி நிறுவனர் வ. விஜயபாஸ்கரன் மறைவையொட்டி மல்லிகை பந்தல் தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் தலைமையில் கொழும்பு கதிரேசன் வீதி ''மணிமஹால்'' மண்டபத்தில் அனுதாபக் கூட்டம் நடத்தியது

சிறப்பு உரையாளராக செ. கணேசலிங்கம் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். இக்கூட்டத்தில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், தெளிவத்தை ஜோசப், அந்தனிஜீவா, திக்குவலை கமால், ப. ஆப்டீன் ஆகியோர் கருத்துரைத்தனர். கவிஞர் மேமன்கவி நன்றியுரை ஆற்றினார்.

## மலையகத்தின் இளையகவி கணேஷமூர்த்தியின் 'தழலாடி வீதி'

மலையகத்தின் இளையகவி கந்தையா கணேஷமூர்த்தியின் 'தழலாடி வீதி' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10.15 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சிரேஸ்ட சட்டத்தரணி ஜீ. இராஜகுலேந்திரா தலைமையில் தமிழ் தொண்டாளர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கலந்து கொள்ள, சிறப்பு அதிதியாக கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீட கலாநிதி மா. கருணாநிதியும், கௌரவ அதிதியாக கொழும்பு கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரதி இ. ஜெயராஜ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரையை மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் பணியாளர் எம். மோகன்ராஜ் நிகழ்த்த விழாவின் தொடக்கவுரையை கொழுந்து ஆசிரியர் அந்தனிஜீவா நிகழ்த்தினார். வாழ்த்துரையை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் நிகழ்த்த நூலின் அறிமுகவுரையை ஆசிரியர் க.க. உதயகுமாரும் கவிவாழ்த்தினை எஸ்.ஐ. எம். ரப்யூஸ் அவர்களும் பாடினர். நூலின் நயவுரைகளை பேராசிரியர் சபா. ஜெயராசா, கண்டி ரா. நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தி நூலின் தரத்தை சபையோருக்கு எடுத்துக் கூறினர். கவிதை நூலான "தழலாடி வீதி" யை வீரகேசரி தினசரியின் பிரதம ஆசிரியர் எம். பிரபாகரன் கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஆகியோர் வெளியிட்டுவைக்க இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் கந்தையா கணேஷமூர்த்தி ஏற்புரை நிகழ்த்தினார். நன்றியுரையை மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் இணைச் செயலாளர் போல்ராஜ் நிகழ்த்தினார்.

✦✦✦

## கார்த்திகாயினி சுபேஸ்யின் சிறுகதைத் தொகுதி 'தாய் மடி தேடி' வெளியீடு

கார்த்திகாயினி சுபேஸ் எழுதிய "தாய் மடி தேடி" என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையை அ. சுபேஸ் நிகழ்த்த வெளியீட்டுரையை மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் நிகழ்த்தினார்.

தினக்குரல் நிறுவனர் எஸ்.பி. சாமி நூலின் முதற்பிரதியை வெளியிட அதனை பிரசித்த நொத்தாரிசும், சட்ட உதவியாளருமான கே. எம். தர்மராஜா பெற்றுக் கொண்டார்.

வாழ்த்துரைகளை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம், ஞானம் ஆசிரியர் வைத்திய காலாநிதி தி. ஞானசேகரன், ஆசிரியை திருமதி புஸ்பராணி நவரட்ணம் ஆகியோர் வழங்கினர், ஆய்வுரைகளை ஊடகக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி தேவகௌரி சுரேந்திரன், எழுத்தாளர் மு. தயாபரன் நிகழ்த்த ஏற்புரையை நூலாசிரியை திருமதி கார்த்திகாயினி சுபேஸ் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வுகளை மீரா பதிப்பக புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

✦✦✦

## குறுங்கதையும் நானும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெள்ளிக்கிழமை தோறும் நடத்தும் 'இலக்கிய களம்' நிகழ்வில் (11.03.2011) எழுத்தாளர் குரும்பசிட்டி மாயெழு வேல் அமுதன் "குறுங்கதையும் நானும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் அ. பற்குணன் தலைமை தாங்கினார்.

✦✦✦

## சங்கத்தமிழ் வெளியீடு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் காலாண்டு சஞ்சிகை 'சங்கத்தமிழ்' வெளியீட்டு வைபவம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமையில் 18.03.2011 நடைபெற்றது. வரவேற்புரையை சங்க நிதிச் செயலாளர் செ. திருச்செல்வம் நிகழ்த்த பேராசிரியர் சோ. சந்திரசேகரன் பேராசிரியர் சபா. ஜெயராசா ஆகியோர் சங்கத்தினையும் சங்கத்தமிழ் சஞ்சிகையும் வாழ்த்தினார்கள். நூலின் முதன் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், தினக்குரல் நிறுவனர் எஸ். பி. சாமி பெற்றுக் கொண்டனர். சிறப்பு பிரதிகளை சங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் தலைவர் மா. சுப்பிரமணியம் மற்றும் வேலணை நா. வீரசிங்கம் சங்கத்துணைத் தலைவர் ச. இலகுப்பிள்ளை, தொழிலதிபர் இரா. மயூரநாதன் ஆகியோர் பெற்றுச் சிறப்பித்தனர். செல்வி திவ்யா சிவனேசனின் அபிநய சேத்திரா நடனப்பள்ளி மாணவிகள் தமது பல்வேறு நடனங்களால் சபையோரை மகிழ்வித்தனர். சங்கப் பொதுச் செயலாளர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் நன்றியுரை வழங்கினார்.

✦✦✦

## அற்றைத் திங்கள்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் மாதம் தோறும் பௌர்ணமி தினங்களில் வழங்கிவரும் தனித்துவமிக்க இலக்கிய நிகழ்வான ' மார்ச் மாதம் நிகழ்வில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா கலந்துக் கொண்டு தனது வாழ்வியல் அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டார்.

இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமை வகித்தார்.

✦✦✦

## 'பதுங்குகுழி' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

அறிவோர் ஒன்று கூடலில் அண்மையில் ஜேர்மனியில் புலம் பெயர்ந்து வாழும் எழுத்தாளர் திரு. பொ. கருணாகரமூர்த்தி அவர்களின் 'பதுங்குகுழி' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா திரு. இ.து. குலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது. திரு. சு.

குணேஸ்வரன் அறிமுக உரையாற்றினார். மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் நூலினை வெளியிட்டு வைத்தார் தொடர்ந்து கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். வேல்நம்பி அவர்களும், கமலசுதர்சன் அல்வாய் செல்லக்குட்டி கணேஸ் ஆகியோரும் வழங்கினர். இறுதியாக ஏற்புரையை திரு. பொ. கருணாகரமூர்த்தி அவர்கள் வழங்கினார்.

க. சுதர்சன்

✦✦✦

## உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள் நூல் வெளியீடு

செல்வி அருமைத்துரை கயல்விழி அவர்களின் உப்புக் காற்றில் மலர்ந்த மலர்கள் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்டர்சிட்டி பொது நோக்கு மண்டபத்தில் 29.01.2011 சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் திரு. வே. விசுவலிங்கம் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலக்கிய ஆர்வலர் திரு. இ. து. குலசிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்.

வரவேற்புரையினை திரு. வே. செந்திவேல் அவர்களும், தொடக்க உரையினை திரு. மா. இரத்தினசோதி அவர்களும் ஆசியுரையினை சைவப்புலவர் இ. திருமாறன் குருக்கள் அவர்களும் திரு. க. சூரியகுமாரன் படைப்பாளர் திரு. சி. உதயகுமாரும் வழங்கினர். வெளியீட்டுரையும் வெளியீட்டினையும் திரு. இ.து. குலசிங்கம் நிகழ்த்தினார். நூலினுடைய முதற்பிரதியை திரு. மா. இரத்தின சோதி பெற்றார். ஆய்வுரையினை வல்வை சிதம்பராக் கல்லூரி ஆசிரியர் திரு. சோ. சிவனேஸ்வரன் நிகழ்த்தினார். தொடர்ந்து கருத்துக்களை கமலசுதர்சன் ஆசிரியர் திரு. சு. குணேஸ்வரன், திரு. எஸ். சுந்தர் ஆகியோர் வாழங்கினர் இறுதியாக ஏற்புரையையும் நன்றியுரையினையும் நூலாசிரியர் செல்வி அ. கயல்விழி நிகழ்த்தினார்.

✦✦✦

## நெடுந்தீவு முகிலனின் கவித்த நூல்களின் அறிமுகவிழா

நெடுந்தீவு முகிலனின் கவிதை நூல்களின் அறிமுகவிழா 30.01.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் திருமறைக் காலமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு திரு. எஸ். கவிதரன் தலைமை தாங்கினார். யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை வாழ்நாள் பேரா. அ. சண்முகதாஸ் யப்பானின் கச்சுயின் பல்கலைக்கழக முன்னை நாள் ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகவும், கவிஞர்களான நெடுந்தீவு மகேஸ், தாமரை மகன், பொன் சுகந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

தொடக்க உரையினை கவிஞர் மாவை நா. கஜேந்திராவும் வாழ்த்துரையை கவிஞர் நெடுந்தீவு மகேசும் ஆய்வுகளையும் முறையே முகிலனின் நூல்களுக்கு. 1. 'சாடிகள் கேட்கும் விருட்சங்களுக்கு' அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தலைவர் திரு. பொன். சுகந்தனும் , 2. 'கிறுக்கி' தேசிய கலை இலக்கிய பேரவையின் வடபிரதேச செயலாளர் திரு. த. ஸ்ரீபிரகாசும், 3. 'ஃ' (அகேனம்) திரு. த. அஜந்தகுமாரும் வழங்கினர்.

ஏற்புரையை நூலாசிரியர் வழங்கினார், சிறப்புரையை சூரியன் FM இன் சிரேஸ்ட அறிவிப்பாளர் திரு. T.S. முகுந்தன் ஆற்றினார். நன்றியுரையை செல்வி ச. சிந்து வழங்கினார். நிகழ்ச்சித் தொகுப்பினை யாழ் FM மேரி சாலினி சால்ஸ் விஜயரட்ணம் மேற்கொண்டார்.

✦✦✦

## கலாமணி பரணீதரனின் இருநூல்கள் வெளியீட்டுவிழா

ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் கலாமணி பரணீதரனின் "மீண்டும் துளிர்ப்போம்" சிறுகதைத் தொகுதி, இலக்கியமும் எதிர்காலமும் கட்டுரைத் தொகுதி ஆகிய இருநூல்களின் வெளியீட்டு விழா 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை அல்வாய் கலை அகத்தில் நடை பெற்றது. இவ்விழாவிற்கு மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமை தாங்கினார். கட்டுரை அறிவு பற்றிப் பேசுவது, சிறுகதை உணர்ச்சி பற்றிப் பேசுவது ஒரு துறையில் நிற்பவர் மற்றத்துறையிற் காலடி வைப்பது சிரமமாகும். ஆனால் பரணீதரன் இருதுறைகளிலும் வெற்றிபெற்றுள்ளார். இவரது இருநூல்களும் சமூகத்தின் மீதான அக்கறையை வெளிப்படுத்துகின்றன என்றார்.

இங்கு அறிமுகவுரை நிகழ்த்திய யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரான K.R.K கமலநாதன் சமூகத்தின் சிக்கல்களைக் காணும் போது மனம் பொங்குபவர் பரணீதரன். சமூகத்தின் அவலங்களை வெளிப்படுத்த வேண்டும், சீராக்க வேண்டும். என்ற ஆதங்கமே அவரது சிறுகதைகள் அவை சமூக அவலங்களை யதார்த்த பூர்வமாகச் சித்தரிக்கின்றன. பரணீதரன் நல்ல சிறுகதை கட்டுரை எழுத்தாளராக, சஞ்சிகை ஆசிரியராக உளவியலின் நாட்டமுள்ளவராக பலதுறைகளிற் பிரகாசிக்கின்றார் எனக் குறிப்பிட்டார்.

வெளியீட்டுரை வழங்கிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா மிக இளம் வயதில் மிகப் பெரிய விடயங்களை எழுதியுள்ள பரணீதரனின் சிறுதை, கட்டுரை என்பவற்றை வாசிக்கும் போது ஏதோ ஓரிடத்தில் நாங்களும் இருக்கிறோம் என்ற உணர்வு ஏற்படுவதாகத் தெரிவித்தார்.

மதிப்பீட்டுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக் கழக சமூக வியற்றுறை விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணன், அண்மைக் காலச் சிறுகதைகளை வாசிக்கும் போது நாவல் எழுதுவதற்குரிய படைப்பாக்க மனத்தோடு இருப்பவர்கள் எழுதுகிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. இது மிகவும் அபத்தமானது. ஆனால் பரணீதரன் யதார்த்தத்தோடு சேர்ந்த மானுடப் பண்புக்கு முக்கிய துவம் கொடுத்துள்ளார் எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் யாழ் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் பா. தனபாலன் வலம்புரி பிரதம ஆசிரியர் N. விஜய சுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். கலாமணி பரணீதரன் ஏற்புரை வழங்கினார்.

தகவல்: ம.பா. மகாலிங்கசிவம்

# மானாமக்கின் ஓசையில்லா ஓசைகளே



**பகற்கனவு பலிக்காது என்று சொல்வது தான் பகற்கனவு!**

இந்த முதல் ஓசை என் சொந்த விடயம் கலந்தொலிப்பது. சுயபுராணம் கேட்க சகிக்க விரும்பாதவர்கள் தாராளமாக அடுத்த ஓசைக்குப் போய் விடலாம்.

ஏனையோர் என்னுடன் துபை வாருங்கள்.

அறபுத் தீபகற்பத்தின் பாலைவனத்தில் சோலைவனமாக உருவானது ஐக்கிய அறபு அமீரதும் – துபை ஒரு பிரதான நகரம். ஆங்கில உச்சரிப்பில் தான் துபாய். (Dubai).

இங்கே தத்தம் தொழில் வாய்ப்பில் வியர்வை சிந்திவிட்டு ஒய்வு நேரத்தில் அன்னைத் தமிழைப் பிராணவாயுவாகக் கொள்வதும் தமிழக இதயங்கள் நிறைய நிறைய. இலங்கையர் ஒளரவு.



செய்யித்
எம். சலாஹுத்தீன்

இந்தத் துபை போல் இன்னொரு நகரம் அபூதாபி. இங்கே கணிசமானோர் கேரளம். எங்கும் எதிலும் மலையாளம் சம்சாரிக்கும். அவர்களுக்காகவே நாளேடுகள் இரண்டு, மூன்று.

மற்றது சார்ஜா. இங்கும் அவர்கள் வியாபித்துள்ளனர். கொழும்பு – மலையகத்தோர் சிலர் முகமும் தெரியும்.

இந்த மூன்று இடங்களையும் காண சுமார் இருபது ஆண்டுகள் பகற் கனவு கண்டு கொண்டிருந்தேன். மிக இலகுவாக எனக்குப் பழக்கமான பெரிய பெரிய தொழிலதிபர்களின் தயவை நாடியிருக்கலாம். என் இயல்பை என் குடும்பமே அறியும்.

எவ்வாறோ, பகல் கனவு பலித்திட ஒரு **கலையன்பன் ரஃபீக்** துணையானார். இங்கிருந்த பொழுது 'வகவம்' வழங்கிய புதுக்கவிதைக்காரன். வானொலிக் கலைஞன். மேடை அறிவிப்பாளன்.

நான் செய்ததெல்லாம், பலருக்கும் செய்தது போல கொஞ்சம் ஏணிப் படிகளில் தூக்கி விட்டதுதான்.

அங்கே துபையில், துறைமுக அதிகாரசபை அதிகாரியாகத் திகழ்ந்து பின் 'சங்கமம்' என்ற ஒரு தொலைக்காட்சி நிலையத்திற்கே நிறுவனராகி கலைப்பணிகள் செய்யும் நிலையில் இவர் நினைவில் முதலில் வந்தவர்கள் நானும், 'தாலாட்டு'ப் புகழ் இஸ்லாமியகீதப் பாடகி நூர்ஜகான் மர்சூக்குமே!

சென்னையில், புரவலர் ஏ.வி.எம் ஜஃபர்தீன் அவர்களை நிறுவனராகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் 'பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம்' அமீரகக்கிளை சார்பில் நடந்த மாபெரும் இலக்கியவிழாவுக்கு அழைத்து கவிச்சித்தர் மு. மேத்தா அவர்களையும் சிறப்புரையாற்ற வேண்டி, அவரைக் கொண்டு தமிழகத்திற்கு நான் செய்த ஒரு துளி எழுத்துப் பணிகளையும் சொல்லச் செய்தார். விருதும், பொற்கிழியும் வழங்க வைத்தார் எனக்கேற்பட்ட மொத்தச் செலவு ரூ. 99 (3 திர்ஹம்கள்) – கோப்பி குடித்ததில்!

இவ்விழாவில் நிகழ்வுற்ற ஒரு பெரு விசேடமும், சிறப்பும்,

தமிழகத்தில், கீழக்கரை என்கிற இராமநாதபுரத்தை அண்மிய ஒரு சிற்றூரில் பிறந்து,கொழும்பு – குருணாகல் தண்ணீரும் குடித்து வளர்ந்து, துபையில் "ஈரீஏ" (ETA) என்ற பெரும் ஆலவிருட்ச நிறுவனத்தின் அதிபராகி முப்பதாயிரம் – நாற்பதாயிரம் என பல இந்து மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கி அனைவரது நெஞ்சங்களிலும் வியாபித்துள்ள **செய்யித் எம். சலாஹுத்தீன்**, இலக்கியச் சொற்பொழிவாற்றியது!

பதினைந்தே நிமிடம் வந்து விட்டுப் போகிறேன் எனச் சொன்னவர், 'வாக்குத் தவறிப் போய்' விழா முடியுமட்டும் (சுமார் இரண்டரை மணி நேரம்) சபையினருடன் சரிசமமாக வீற்றிருந்தார். அதில் ஒரு முக்கால்மணி நேரம் ஒலிவாங்கி முன் நின்று தமிழ் இலக்கியம் பேசினார். அத்தோடு, அதனுடன் இரண்டறக் கலந்திருக்கும் இஸ்லாமிய இலக்கியம் பற்றி எடுத்துரைத்தார்! ஆஹா! ஆஹா!

அதுவரையில் அவரது அருமைத் தம்பியார் "சீனா தானா" என்கிற செய்யித் அப்துல்காதர் அவர்கள்தான் இப்படியான பேச்சுக்களில் வல்லவர் என்றிருந்த எண்ணம் பலருக்கும் தவிடு பொடியானது நான் உட்பட. (அன்னாரும் சிறப்பதிதியாகச் சமூகமளித்திருந்தார்.

எந்தவித முன்னேற்பாடுகளும் இல்லாமல் இப்படியொரு தொழில் வித்தகர் இலக்கியம் பேசியது அனைவரையும் புல்லரிக்க வைத்தது.

நான், இன்று இந்த ஓசையை 'ஞான'த்தில் எழுப்பும் பொழுது, எனக்குக் கிடைத்த பாராட்டு கௌரவம் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இந்த இலக்கிய நிகழ்வைத் தான் நினைத்து நெகிழ்ந்த வண்ணம் உள்ளேன்.

**ஒரு தித்திக்கும் தகவல்:**

ஆசியாவின் பிரம்மாண்டமான நூலகமாக சென்னை – கோட்டூர் புறத்தில் கலைஞரால் திறக்கப்பட்டுள்ள கட்டடம், மதிப்பு மிகு ஈரீஏ செய்யத் சலாஹ்தீன் நிறுவனத்தின் அனுசரணையே! சென்னைக்குச் செல்கையில் தவற விடக்கூடாது.




**மயிலே மயிலே இலக்கியம் போடு!**

மயில் அனைவருக்கும் பிடித்தமான பறவை. அதன்

இறகுக்குத் தவமிருப்போர் பலர்.

என்றாலும் நெஞ்சம் நிறைந்த மலேசிய நாட்டு மயிலொன்று இறகுகளை உதிர்க்காமல் இலக்கியங்களைப் போடுகிறது !

துபைப் பயணத்திற்குப் பிறகு மலேசியா சென்றபொழுது அந்த மயிலை எனக்குக் காட்டினார். அனைத்துலகப் புகழ் வாய்ந்த 'ஞானம்' எழுத்தாளர், சை. பீர்முகம்மது !

அபிமானிகள் இங்கே ஒரு நிழற்படமாகக் கண்டுகளியுங்கள்.

என் பார்வையில் 2ஆம் ஆண்டின் தோகையின் இறகுகள் ஒன்றும் இரண்டும் காணக் கிடைத்தன. (இலங்கை நாணய மதிப்பில் ரூபாய் நூறு).

மலேசிய உயர் விருதுகளில் ஒன்றான 'டத்தோ' வை அடைந்த ஆ. சோதிநாதன் என்ற மூத்த இதழாளரை ஆசிரியராகவும், ஏ. சகாதேவனை இணை ஆசிரியராகவும், து. டேவிட், ச. மகேஸ்வரி ஆகியோரை துணை ஆசிரியர்களாகவும் கொண்டு மாத இதழாகக் கோலாலம்பூரிலிருந்து வெளியாகும் 'மயில்' தரத்திலும் வடிவமைப்பிலும் தமிழக இதழ்கள் பலவற்றையும் ஆழிப்பேரலை அலைபோல அள்ளிக் கொண்டுபோய் எங்கோ போட்டு விட்டு அழகாகத் தோகை விரித்தாடுகிறது.

ஒவ்வொரு பக்கமும் வண்ணக்கலவைதான். செ. நிசாகுலன், இரா. மோகன்குமார், ச. அமலன், மா. அருள்மொழிராதை ஆகியோரின் கூட்டிணைப்பில் உருவாகியுள்ள வடிவமைப்பு தமிழிதழியலில் வரலாற்றுக்கே புதுசு.

எம்மகத்து 'கலைக்கேசரி' யுடன் ஒப்பிட்டு மகிழ்வதிலும் தவறில்லை. ஏன், அதன் கட்டுரையொன்றையும் கூட ("தாலி: ஒரு பண்பாட்டுப் பார்வை") மறுபிரசுரம் செய்து மகிழ்ந்துள்ளனர்.

'அஞ்சாமை, நடுவு நிலைமை, உண்மை உரைத்தல், ஊருக்குழைத்தல், எங்கள் பணி' – என முதற் பக்கத்தில் 'இதயக்குரல்' ஒலிக்கும் ஆ. சோதிநாதன் 62 பக்கங்களில் 'ஞானம்' அளவில் ஒவ்வொரு பக்கத்திலும் நல்ல தரமான படைப்புகளை வழங்கியிருப்பது மட்டுமன்று.

எம் கவிஞர் வீ. பூபாலன், கொழும்பு பொ. சிவபாலன், தமிழ்மணி அகளங்கன் ஆகியோருக்கும் இடம் வழங்கி (2011– ஜனவரி 15 இதழ்) எம்மவர் இதயங்களுக்குள்ளும் நுழைந்துள்ளார். இப்போதைக்கு இவ்வளவே !

'மயி'லை வாழ்த்துவோம் வளமும் நலமுமாகத் தொடர்ந்து தோகை விரித்தாட.

### ஓர் ஆதங்கக் குறிப்பு

தமிழ்மணி அகளங்கன் 'தமிழ்மொழியின் அடைமொழிகள்' என 'மயி'லில் செய்திருக்கும் ஆய்வு எழுத்துக்கள், சமீபத்தில் அனைத்துலக தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக் கட்டுரைக் கோவையில் இடம் பிடித்திருக்க வேண்டிய ஒன்று. மறு பிரசுரமாகக் கூடப்பதிப்பிக்கப் பட்டிருக்கலாம். அகளங்கனுக்கு அப்படியொரு அசிரத்தை ஏற்பட்டுப்போனது ஏனோ ?




### 'இண்டர் லோக்' - இது சொல்லும் கதை என்ன?

நான், கடந்த மாத முற்பகுதியில் எனதரும் மருத்துவ மகளாருடன் மலேசியாவில் இருந்தபொழுது, தமிழ்ச் சகோதரர்களைச் சந்தித்த நேரத்திலும், பல இதழ்களை வரிக்குவரி மேய்ந்து கொண்டிருந்த நேரத்திலும் "இண்டர் லோக்" (Interlok) என்ற ஒன்று இடர்படுத்திக் கொண்டேயிருந்தது.

சில இலக்கிய ஜாம்பவான் களிடம் விவரம் அறிய முற்பட்ட பொழுது "உஷ், வேண்டாம். இது, எங்கள் உள்ளக அரசியல்! அறிய ஆவல் படாதீர்கள். உங்கள் பத்திகளில் ஒசையிடவும் செய்யாதீர்கள்" என்றனர்.,

எனினும் தகவல்கள் தெரிவிக்கும் ஒரு தார்மீகக் கடமை எனக் கிருப்பதால் நாளேடுகள், சஞ்சிகைகளில் பார்த்ததைத் தொகுத்து இங்கே ஒசையிடுகின்றேன். – என் கருத்து எதுவுமின்றி.

இதுவொரு நாவலின் பெயர். டத்தோ அப்துல்லா உசேன் ஆய்வு ரீதியாக எழுதியுள்ள படைப்பிலக்கியம் இவ்வாண்டு ஐந்தாம் படிவ இலக்கியப் பாடத்திற்குரிய நூலாகத் தெரிவானதிலிருந்து சனியும் சனியும் பிடித்தது!

இதில், மலாயாவிற்கு வந்த தென்னிந்தியர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய ஒரு குறுநாவல் 'மணியம் குடும்பத்தார்' என்னும் தலைப்பில் உள்ளது.

தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட விதத்தையும், அவர்களுக்கு நேர்ந்த துன்பங்களையும் – குறிப்பாகப் பஞ்சமர்களை (தலித்) ஆங்கிலேயர் எவ்வாறு கொண்டு வந்தனர் என்பதையும் அவர்கள் காடுகள் அழித்து ரப்பர் தோட்டங்களை உருவாக்கியது பற்றியும் – விளக்கமாக விவரிக்கிறது.

ஆனால், நாவலின் பக்கம் 211இல் "பறையர்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது இன்று பூதாகாரமாகி, அரசியலாகி, ஒற்றுமையே தாரக மந்திரமாகக் கொண்டுள்ள நாட்டுக்கு ஒரு சோதனையை ஏற்படுத்தியுள்ளது.

"தும்பை விடுத்து வாலைப் பிடிக்க முயல்கிறோம்" என்கிறார் 'மயில்' ஆசிரியர் து. சோதிநாதன்.

"சாதியம் மட்டுமே நாவலில் குறிக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக, பல்வேறு கோணங்களில் தமிழர்களின் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும் இகழ்வு படுத்தப்பட்டிருக்கின்றன" என்கின்றார் முனைவர் ஆறு. நாகப்பன், 'மலேசியகனி' என்ற இதழில்.

"நாவல் பிற இனங்களைப் புண்படுத்தும் வகையில் எழுதப்படவில்லை. ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளையே அது விவரிக்கிறது" என்கிறார் பரதன் குப்புசாமி, 'தி ஸ்டார்' என்ற நாளேட்டில்.

"மலேசியாவில் சாதீய பிரச்சனைகள் வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை. இங்கே சாதீய பிரிவினர்கள் என்று எதுவுமே இல்லை" என நமக்குள் நாமே கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றோம். நாமெல்லாம் நல்ல நடிகர்கள். இலக்கியவாதியான ஒரு மலாய் நண்பர் ஒரு கேள்வி கேட்டார் இப்படி: "உங்களிடையே சாதீயம் இல்லையா, அல்லது அது இருக்கும், ஆனால் அது பற்றி யாரும் பேசக்கூடாது என்கிறீர்களா? சாதீய அமைப்புக்கள், சங்கங்கள் வைத்திருக்கின்றீர்களே, அது ஏன்"

இந்தக் குறிப்புகள் டாக்டர் மா. சண்முக சிவா என்பார் 'மயி'யில் தெரிவித்திருப்பது.



நல்லது. நாவலாசிரியர் அப்துல்லா உசேன் சொல்வதென்ன? அவர் குறிப்பு 'தி சன்' ஏட்டில் வந்துள்ளது.

"நாவலை முழுதுமாகப் படியுங்கள். படிக்காமல் முடிவுக்கு வராதீர்கள். இனவாதம், மதவாதம் எனும் கேள்விகளுக்கே என் நாவலில் இடமில்லை. மணியம் என்பவர் மாலாயாவிற்கு வருவதற்கு முன் தாழ்த்தப்பட்டவராக இருந்தார். ஆனால் வந்து வாழத் தொடங்கிய பிறகு அவர் அப்படிக் கருதப்படவில்லை. மலாயாப் பல்கலைக்கழக விரிவுரையாள நண்பர் ஒருவர்தான் மணியம் போன்ற தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி என்னிடம் கூறினார். நான் ஒன்றும் யோசிக்காமல் எழுதவில்லை".

அபிமானிகளே, ஏற்கனவே குறித்தது போல எனக்குள்ள தார்மீகக் கடமையினால் உந்தப்பட்டு 'இன்டர்லோக்' விவகாரத்தைத் தகவலாக ஓசையிட்டுள்ளேன்.

எம்மவர் ஆய்வு செய்யவேண்டிய ஒன்று. இந்த மலேசிய விடயத்தில் நாமும் உணரவேண்டிய ஏதேனும் உண்டா என்பதே! (முக்கியமாகப் புலம் பெயர்ந்துள்ள பெருமக்கள் !).

**ஒரு கவிஞர் தமிழ் சினிமாவுக்கு இங்கிருந்து !**

எங்கே ஒளித்து வைத்திருந்தார் இந்த நடிப்பையெல்லாம் **வ. ஐ. ச. ஜெயபாலன் !**

நல்ல நல்ல கவிதைகளையெல்லாம் நாளும் பொழுதும் வழங்கிக் கொண்டிருந்ததால், மனிதர் நடிப்பைக் காட்டவில்லை போலும் !

நான் பழகிய வகையில் அவர் நடிக்கத் தெரியாத ஒரு நல்ல 'தாடிவாலா'.

இப்பொழுது அந்தத் தாடியும், குடுமியுமே ஒரு புதியவில்லனை தமிழ் சினிமாவுக்குத் தந்திருக்கிறது.

'ஆடுகளம்' திரைகளில் பார்க்க முடியுமா எனத் தோன்றவில்லை. களம் கண்டு மறைந்து விட்டது. இறுவட்டு – குறுவட்டு என்று பார்க்க முயலுங்கள். அப்பொழுதுதான் கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன் நடிப்புத்திறமை தெரியும்.

அய்யா, கவிஞரே, நிறையப் படங்களில் ஒப்பந்தமாமே ! சென்னைக்கு வந்தால் தரிசனம் தருவீர்களா ?

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2011



(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு – ரூபா 5000/–

இரண்டாம் பரிசு – ரூபா 3000/–

மூன்றாம் பரிசு – ரூபா 2000/–

*ஏனைய ஒன்பது சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.*

### போட்டிக்கான விதிகள்

. சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும்.

போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.

தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தப் போட்டி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**ஞானம் கிளை அலுவலகம் – 3-B, 46வது ஒழுங்கை, கொழும்பு – 06.**

**போட்டி முடிவு திகதி 30.06.2011**

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது

– ஆசிரியர்

# அழகின் சிரிப்பு

கே.எஸ். சுதாகர்-அவுஸ்திரேலியா

## சொல்ல வேண்டிய கதைகள் -1

ஷோபனா நிலைக்கண்ணாடி முன் நிற்கின்றாள். தன் ஆடைகளைச் சரி செய்தவாறே அழகு பார்க்கின்றாள். பிறை நிலவிற்குள் செந்நிறப் பொட்டு. முகமெங்கும் மெல்லிதாக அரும்பி நின்று மினுப்புக் காட்டும் வியர்வைத் துளிகள். லிப்ஸ் ஸ்டிக்கில் கூரிய செவ்வாய். நீலநிற சுடிதாரில் அழகாய்த்தான் தெரிந்தாள். சரி! பார்த்தது போதும் என்று தனக்குள் எண்ணியவாறே பின்னால் திரும்புகின்றாள்.

"எப்படிடா செல்லம்! நான் வடிவா இருக்கிறேனா?"

பதில் இல்லை.

ஆடைகளைக் கழைந்து விட்டு அடுத்த உடுப்பை மாட்டுகின்றாள். எல்லாம் புத்தம் புதிதான பளிச்சென்ற விலையுயர்ந்த ஆடைகள்.

"இப்ப எப்படி இருக்கிறேனாம். இது போன தீபாவளிக்கு என்ரை தம்பி சுவிசிலை இருந்து அனுப்பினது"

அதற்கும் பதில் இல்லை.

ஒரு மழலைச் சிரிப்பு வருகிறது. திரும்பிப் பார்க்கின்றாள். தொட்டிலிற்குள் இருந்த குழந்தை பால் போத்திலுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. வெளியே ஜன்னலை எட்டிப் பார்க்கின்றாள். வீட்டின் பின்புறம் அவளது மூன்று வயதுப் பெண் – இவளைப் போலவே – ஒரு பாபி டோலுடன் தனிமையில் விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

"பானு! ஓடி வா.. ஓடி வா... அம்மாவுக்கு இந்த உடுப்பு வடிவா? பாத்துச் சொல்லு!"

அந்தப்பெண் வாயில் விரலை வைத்து சிந்தித்தபடியே அம்மாவைப் பார்க்கின்றாள். "பாபி டோல் போல கிடக்கு" என்கின்றாள். பின்னர் அம்மாவின் முகம் கறுத்தது கண்டு, "எனக்குச் சொல்லத் தெரியல்ல" என்கின்றாள். குழந்தையின் வெளிப்படையான உண்மை ஷோபனாவைச் சுடுகிறது. இவ்வளவு நேரம் கஸ்டப்பட்டுப் போட்டதற்கு நல்லாயிருக்குதென்று சொல்லக் கூடாதா? குழந்தைக்கு என்ன தெரியும்?

இவர் வரட்டும். இவர்தான் என்னை அடிக்கடி 'வடிவா இருக்கின்றேன்' என்று சொல்கின்றவர். வந்து சொல்லட்டும் உடுப்பு எப்படி இருக்குதென்று!

'எத்தனை உடுப்புகள் வைத்திருக்கின்றேன். அம்மா அப்பா தந்தது; அக்கா வாங்கித் தந்தது; மாமா தந்தது; இவற்றைவிட இவர் வாங்கித் தந்தது. இவற்றையெல்லாம் அணிந்து கொண்டு போவதற்கு ஒரு இடமோ விழாவோ அல்லது ஒரு இனசனமோ இங்கு இல்லையே! அயலவர்கள் கூட ஒருபோதும் எங்களை தமது வீட்டுக் கொண்டாட்டங்களுக்கு கூப்பிடுவதில்லை. அவரவர்களுக்கு நிறையவே உறவினர்கள், நண்பர்கள். தொலை தூரத்தில் கண்காணாத தேசத்தில் தொழிலுக்கான வயிற்றுப் பிழைப்பில் காலம் கரைகிறது. வயது போகிறது. முதுமை வருகிறது அவளுக்குக் கவலை வருகிறது. ஏக்கம் வருகிறது. இண்டைக்கு 'இவர்' என்னை வெளியே கூட்டிக் கொண்டு போவதாகச் சொன்னவர். பிள்ளைகளுக்கும் சந்தோசமாக இருக்கும் ஆனால் இன்னமும் காணவில்லையே!

அவர்கள் 'ஸ்கிப்ரன் (Skipton) என்ற சிறு நகரத்தில்



இருக்கின்றார்கள். 'ஸ்கிப்ரன்' ஐக்கிய இராட்சியக் குடியரசில் (UK) வடக்கு யோர்சியாவில் (North Yorkshire) உள்ள 'கிராவன்' (Craven) மாவட்டத்தில் உள்ளது. ஷோபனாவின் கணவனுக்கு அங்குதான் வேலை.

திரும்பவும் உடுப்புகளை மாட்டுகின்றாள். களைகின்றாள். முகத்துக்கு அலங்காரம் செய்கின்றாள். அழிக்கின்றாள். கண்ணாடிக்கு முன் நின்று மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைந்து அசைந்து பார்க்கின்றாள். மேலுதடையும் கீழுதடையும் உள் இழுத்து – பின் மின்னல் வெட்டுவது போல் உதடுகளைச் சுழித்து. கண்ணாடிக்குள் தெரிந்த அவள் முகம் 'ஸ்மைல் பிளீஸ்' என்கிறது. அந்த பிம்பத்திற்காக 'ஒரு ஸ்மைல்' தானே தனக்குள் ரசிக்கின்றாள். விலையுயர்ந்த ஆடைகளுடன், புன்முறுவல் ஆத்மார்த்தமாக பெருமிதம் கொள்கிறது. இத்தோடு பத்தாவது தடவைக்கு மேல் ஆடை அலங்காரம் செய்தாயிற்று. இவருக்கு வேலை. படு 'பிஷி' எத்தனை மணிக்கு வருவாரோ?

வெளியே இருள் கவிகிறது. குழந்தைகளுக்கு சாப்பாடு குடுத்து உறங்க வைத்து விட்டாள். கடைசியாகப் போட்டுப் பார்த்து 'இதுதான் பேரழகு என முடிவு செய்த உடுப்புடன் 'செற்றி'க்குள் கணவனின் வரவைப் பார்த்தபடி காத்திருக்கின்றாள்.

உறங்கிவிட்டாள். இரவு எட்டு மணி வெளியே கடும் மழை. அற நனைந்த கோழி போல கணவன் வேலை முடித்து வீடு வருகின்றான்.

“இனி எங்கை போறது. தெரு முழுக்க வெள்ளம்” களைப்புடன் அவன்.

“கடைக்குக் கூட்டிக் கொண்டு போறதெண்டு சொன்னியள்!”

“நாளைக்குப் பார்ப்போமடா!” அவளைக் கட்டி அணைத்து சமாதானம் சொல்கின்றான். முத்தம் பொழிகின்றான். அவள் கண்கள் பனிக்கின்றன. அழகின் சிரிப்பு கண்ணீராக...

---




மணமகள் கூறை அணிய அழைத்துச் செல்லப்பட்டு விட்டாள். முடிந்தளவு கெதியாகச் சேலைமாற்றலும், அழகு படுத்தலும் ஒப்பனைக் கலைஞர்களால் நடைப்பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

மண்டபம் நிறையச் சனம். வசதியான ஒரு இடைவேளை என்பதால், ஒருவரோடு ஒருவர் பேச ஆரம்பித்து விட்டனர். பலதும் பத்தும் பேசப்படுகின்றது. வாயாடிகளின் வம்பளப்பு இப்போது எமக்குத் தேவையில்லை. முக்கியமான இருவரின் பேச்சுக்கு செவிமடுப்போம்.

ஒருவர்: “மாப்பிள்ளையின் தகப்பன் ஒரு மாதிரி. ” மனுஷன் சுயலாபத்திற்கு எதையும் துணிந்து செய்யும். இங்கை என்ன செய்யப் போகுதோ தெரியாது. பெண்பிள்ளையின் தகப்பன்தான் பாவம்! ஒரு அப்பாவி. மாட்டுப்பட்டுக் கஷ்டப்படாமல் இருக்க கடவுள்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்.

மற்றவர்: “நானும் அப்படித்தான் யோசிக்கிறன். ஆனால் ஒண்டு சொந்த மகனின் கலியாணமல்லே. மனுஷன் கன்னியமாக நடக்காமல் விடுமா?”

பேசிய அரட்டை பேசியது பேசி முடியமுன், நடக்கக்கூடாதது நடந்து விட்டது!

மணமகனின் தகப்பன் மணமகளின் தகப்பனைத் தேடிப்பிடித்து, “சம்பந்தி” ஒண்டை அவசரப்பட்டு யோசிக்காமல் கதைச்சுப் போட்டன். பிள்ளையின் பாஸ் புக்கில் பதினைந்து போட்டது போக, இன்னம் ஒரு பத்து லட்சம் நன்கொடையாகத் தரவேணும்” என்றார்.

“நான் இப்படி வரலாமென எதிர்பார்த்து ஆயத்தமாகத்தான் இருக்கிறன். எல்லாம் சரியாகத் தர வேண்டிய மாதிரித் தாறன்” என்றார் மணமகளின் தந்தை.

அந்நேரம் மணமேடையில் தலைமைப் புரோகிதர், “மணவாட்டியை அழைச்சு வாங்கோ. முகூர்த்த நேரம் வந்திட்டுது” என ஞாபகப்படுத்தினார்.

மணமகளை அழைத்து வர தோழிகள் குழு விரைந்தது.

மணமகள் அவளின் அறையுள் இல்லை; சபை வேகமாக வெறிச்சோடுகிறது; மணமகளின் தந்தை நாசூக்கான செய்தி ஒன்றினை விட்டு, அவரும் மாயமாக மறைந்து விட்டார்.

மணமகளின் தந்தை விட்டுச் சென்ற செய்தி: “பேராசை பெரும் தரித்திரம்”

# படித்ததும் கேட்டதும்

கே.விஜயன்



**ஜால்ராக்களும் திண்ணைப் பேச்சுக்களும்**

இலங்கையில் முதலாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டினை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு முன்னோடிக் கூட்டம் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நூற்றுக்கணக்கான அழைப்பாளர்கள் நிறைந்து காணப்பட நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல்வேறு விடய தானங்களை சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள். "ஆகா ஓகோ" வென பாராட்டுபவர்களுடன் எங்கே நாம் ஏதாவது எதிர்ப்பினை அல்லது சமர்ப்பிக்கப்பட்ட விடயத்திற்கு எதிராக குரல் எழுப்பிவிட்டால் தம்மை ஓரங்கட்டிவிடுவார்களோ என்ற பேய்பிடித்து வெருட்டிக் கொண்டிருந்த 90 சதவீதமானவர்கள் கப்சிப் பென்று சிந்தனை புன்னகை சிந்திக் கொண்டு எடுத்ததற்கெல்லாம் ஜங் சிக்! ஜங்சிக்! கென்று ஜால்றா போட்டுக் கொண்டிருந்தார்கள். எதிர்ப்பு தெரிவித்தால் வம்புதான் எதுக்கு தொல்லை என்ற சமாதான சாதனையாளர்கள் அவர்கள்.

செம்மைப்படுத்தல் அல்லது செவ்விதாக்கம் பற்றிய சமர்ப்பிக்கப்பட்ட போதும், இதே ஜிங்சிக் தான் தொடர் கதையாக விருந்தது.

பத்திரிகை உலகின் நீண்டகால அநுபவமும் பெரும்பான்மை இன எழுத்தாளர்கள் பலரிடம் முளைவிட்டு துளிர்க்கின்ற கருத்தோட்டமும், அரச மட்டத்தின் இனரீதியாக நகர்த்தப்படுகின்ற சில சிண்டு முடிச்சு சமாச்சாரங்கள் குறித்த அநுபவரீதியான உளமார்ந்த யதார்த்தங்கள், பாவி மனுஷா சும்மா இருக்காதே எதையாவது சொல்லித் தொலைத்து கவனத்தை திசை திருப்பு என்று பிடறியை பிடித்து நாய் கடிகடித்தது.

அச்சடா எழும்பிவிட்டேன்

மேடைக்கு ஏறினேன். விளக்கம் சொல்வதற்கு எங்கே முடிந்தது ஜால்ராக்கள் எல்லாம் குளவிகளாகக் கொட்டி விரட்டினார்கள் என்றாலும் எதிர்ப்பைக் காட்டி விட்டு இறங்கினேன்.

ஆசனத்தின் வந்து அமர்ந்ததுதான் தாமதம்

"எதுக்கையா உமக்கு இந்த தேவை இல்லாத வேலை இனி அவ்வளவுதான் சர்வதேச எழுத்தாளர். மாநாட்டின் ஒழுங்கமைப்பாளர்கள் ஒரு கும்பிடைப்போட்டு இந்தப் பக்கம் விடாமல் விரட்டிவிடுவார்கள். எதையும் பயன்படுத்தி பொழைக்கிற வழியே பார்க்காமல் என்ன மனுஷன் அய்யா சீ!..சீ!... பிணத்தைப் பார்ப்பது போல மூக்கை சுழித்துக் கொண்டார். பக்கத்து ஆசன ஓர் இலக்கிய ஜால்ரா.

எத்தனை விதமான வேடிக்கை மனிதர்கள் இந்த இலக்கிய உலகிலே! எங்கே போய் முட்டிக்கிறது?

ஆனால் ஒழுங்கமைப்பாளர்கள் நானாகவே அனைத்திலும் ஒதுங்கி நின்ற போதும். எனது இளமைக்கால நீண்ட கனவொன்றை அவர்களாகவே நிறைவேற்றி வைத்தார்கள்.

கு. சின்னபாரதி எனது மானசீக படைப்பாளிகளில் ஒருவர். அவர் தலைமையில் உரையாற்ற கிடைத்ததும், உரையின் பின்னர் அவர் என்னை அணைத்துக் கொண்டதும் அருமை! அருமை! என்று புகழுரை தந்ததும் எழுத்துலகில். நான் அடைந்த பெரும் கௌரவமாக நினைக்கிறேன். இறுதிநாளன்று இறுதியாக உரை நிகழ்த்துவதற்கு செயற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

செவ்விதாக்கம் ஒரு முக்கியமான விடயதானம் என்பதை எமது மூத்த படைப்பாளர்களில் ஒருவரான மதிப்பிற்குரிய தெளிவத்தை ஜோசப் சர்வதேச எழுத்தாளர் மாநாட்டு ஞானம் சிறப்பிதழில் எழுதியிருக்கிறார். முன்னோடி கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள், வாத பிரதிவாதங்கள் தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனது எதிர்ப்புக் குரல் பதிவு செய்யப்பட்டிருந்தது. பாராட்டுக்கள்.

ஆனால்,

இந்த "சோ கோல்" திறனாய்வாளர்களும், பத்திரிகை எழுத்தாளர்களும் இதென்ன சர்வதேச மாநாடா? என்று புலம்பித்திரிபவர்களும் இது குறித்து மூச்சுவிடவில்லை.

செவ்விதாக்கம் மிகவும் விரிவான இலக்கிய உரையாடலுக்குரியது. அதனை ஏனோ தானோ என்று விட்டுவிட முடியாது. மாநாடு அதனை முன்வைத்துவிட்டது. அதனை விரிவாக்கும் பெரும் பொறுப்பு எழுத்தாளர்கள், கவிஞர்கள், திறனாய்வாளர்கள், பத்திரிகையாளர்கள் என பலருக்கும் உரியது வெற்றிலைச் சப்பல்காரர்களின் கிண்டலுக்குரியது அல்ல.

"இந்த திண்ணைப் பேச்சு வீரரிடம்
ஒரு கண்ணாய் இருக்கணும் அண்ணாச்சி"

**குமுறும் ஒரு குறுங்கதையாளன் ஓர் இரசனைக்குறிப்பு**

சிறுகதைகளுக்கு பரிசு கொடுக்கிறார்கள். நாவலுக்கு கொடுக்கிறார்கள், கவிதைக்கு கொடுக்கிறார்கள். அட 'ஹைகூ' விற்கும் கொடுக்கிறார்கள். குறுங்கதைகளுக்கு கொடுக் கிறார்கள் இல்லையே!

இப்படி ஆதங்கப்பட்டுக் கொண்டார் திருமண ஆற்றுப்படுத்துநரும், ஆங்கில விரிவுரையாளரும், குறுங்கதைகள் அதிகமாக எழுதுபவருமான வேல் அமுதன் அவர்கள். இலக்கிய களம் நிகழ்ச்சியில்தான் அமுதன் குமுறினார்.

பரிசு பெற்றால் தான் அங்கீகாரம், பட்டம் கிடைத்தால்தான் முன் ஆசனம் என்ற சமூக நிலையில் ஒரு கலைஞனுக்கோ, படைப்பாளிக்கோ ஏற்படுகின்ற ஆதங்கம் தான் இது.

ஒரு மூத்த படைப்பாளி தகவம் போன்ற இலக்கிய அமைப்புகள் நடத்தி, இளைஞர்களை உற்சாகப்படுத்தும் சேவை புரிந்தவர்.

புகழாரம் சூடினார் சிரேஷ்ட பெண்படைப்பாளி பத்மா சோமகாந்தன்.

வேல் அமுதன் நல்ல ஒரு நிர்வாகி. அவர் அறைக்குள் நுழைந்தாலே விளங்கும். தனது தொழில் தொடர்பான தகவல்களை வகைப்படுத்திவைத்திருக்கும் அழகே ஓர் தனி அழகுதான் போங்கோ. இன்று பலருமே குறுங்கதைகள் எழுதுவதை அம்போன்னு விட்டுவிட்ட நிலையில் வெளவாலாக உடும்புப்பிடியுடன் அமுதன் குறுங்கதைகள் எழுதிக் கொண்டிருக்கிறார். ஞானமும் செங்கதிரும் மல்லிகையும் தவறாமல் அவற்றைச் சுமந்து கனதியாக்கிக் கிடக்கின்றன. தமிழ்ச்சங்கத்தில் இலக்கியக்களம் நிகழ்ச்சியில் குறுங்கதை குறித்தும், தனது பல குறுங்கதைகளை அவர் வாசித்தும் காட்டிய போது சிரித்து மகிழ முடிந்தது. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பதைப் போன்று தரமான கதைகள்.

இன்று குறுங்கதைகளின் நிலை என்ன?

தமிழ்ப்படங்களின் காமெடி காட்சிகளுடன் ஒப்பிடப்படுகிறது.

அடக்கடவுளே!

அதுக்கும் மேலே சொல்வதானால் இந்திய சஞ்சிகைகளில் வெளிவரும் நகைச் சுவை துணுக்குகளாக கருதப்படுகின்றது.

ஈஷ்வரா இதென்ன கூத்து

கூத்துதான்! கூத்துதான். சுல்பி இலக்கியத்தின் பிரதான பாத்திரம் முல்லா நஸ்ருதீனும், நம்ம தென்னாலிராமனும் மாஜன் முத்தாவும் இன்று மறக்கப்பட்ட பாத்திரங்களாகி விட்டார்கள். இவர்கள் அற்புதமான சமாச்சாரங்களை கதை வடிவில் தந்தார்கள். அவற்றை வெறும் சிரிப்புத் துணுக்குகளாக இரசிக்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுவிட்டோம் என்பது தான் உண்மை.

ஒரு கருப்பொருளின் இரு திசைகளையும் ஒரு குறுங்கதை பளிச்சென காட்டிவிடுகிறது.

எப்படி?

வேல் அமுதனின் ஒரு குறுங்கதையை எடுத்துக் கொள்வோம்

புலம்பெயர்ந்த ஒரு தமிழர் இலங்கையில் மணமகள் தேடி விளம்பரம் போடுகிறார். பெண்ணின் தகப்பனார் தொடர்பு கொள்கிறார்.

நீங்கள் கேட்கிறதை எல்லாம் தாரன் என்ட மோளை ஜெர்மனிக்கு ஸ்பொன்ஸ்சர் பண்ணுவியலோ?

இஞ்சாருங்கோ எனக்கு ஜெர்மனியில் பொஞ்சாதியிருக்காள். நான் தேடுரது ஸ்ரீலங்காவிலே ஒரு கீப் அவ்வளவுதான்.

அடி செறுப்பாலே இப்படித்துள்ளிக் குதிப்பதைத்தவிட வாசகர்களாகிய நாம் என்ன செய்ய முடியும்.

"சரி இது கதைகருப் பொருளின் ஒரு பக்கம். நாம் அடுத்த பக்கத்தையும் பார்ப்போம்"

"உந்த புலம்பெயர்ந்த ஆசாமிகலெல்லாம் உப்புடித்தான் வாழ்கினமோ" என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படுமோ இல்லயோ? ஏற்படும் தானே.

இவை கதைக் கருப் பொருளின் இருபக்கங்கள் அல்லவா? இரண்டுமே கிண்டல் தன்மையுடன் திகழ்கின்றன. அதன் காரணமாகவே குறுங்கதைகள் கருத்தாழம் மிக்கவை என்ற கவனிப்பிலிருந்து நழுவிச் செல்கின்றன. ஜனரஞ்சக தேசிய பத்திரிகைகளும் அவற்றை எழுத்து கேலிச்சித்திரங்களாகவே கருதுகின்றன. ஒரு நையாண்டித் தனம் அவ்வளவுதான் என்ற நிலைக்கு குறுங்கதை தள்ளப்பட்டுவிட்டது.

முல்லாவின் ஒரு கதையைப் பார்ப்போம், முல்லா கவலையுடன் அழுது கொண்டிருக்கின்றான். நண்பன் வருகிறான். என்னப்பா இப்படி ஒப்பாரி வைத்து அழுகிறாய்?

"அய்யோ என் பூட்டனார் நான்கு நாட்களுக்கு முன்னர் காலமானார். அவர் தன் சொத்துக்கள் அனைத்தையும் எனக்கு எழுதி வைத்தார். இரண்டு நாட்களுக்கு முன்னர் என் பாட்டனார் இறந்துபோனார். அவர்கள் தன் சொத்தையெல்லாம் எனக்கு எழுதி வைத்து விட்டுதான் இறந்து போனார். நேற்று என் தந்தை இறந்து போனார். அவரும் தன் சொத்தை எல்லாம் எனக்கு எழுதி வைத்து போனார். அய்யோ! ஆண்டவனே! ஆண்டவனே! என்று தலையில் அடித்துக் கொண்டு கதறினான்.

"அழாதே நண்பனே! நீ அழுவதில் அர்த்தமே இல்லை. அவர்கள் மூவரும் நூறு வயதுக்கு மேல் நன்றாக வாழ்ந்து அனுபவித்து விட்டுத்தான் இந்த உலகை விட்டு போய்விட்டார்கள் அதுமட்டுமா? முழு சொத்தையும் உனக்கு எழுதி வைத்துத்தானே போயிருக்கிறார்கள். உனக்கென்ன சந்தோஷமாக வாழ்க்கையை அனுபவி என்றான்.

"அடப்பாவி! நீ எல்லாமே ஒரு நண்பனா? இனி சொத்துக்கள் எழுதி வைக்க ஒரு கிழடும் இல்லையே என்று நான் கதறுகிறேன். நீ என்னடாவென்றால் சந்தோஷப்படச் சொல்கிறாய் முட்டாள் முட்டாள்"

என்று சாடி விழுகிறான் முல்லா.

## (திற)னாய்வு ரசவாதம்

இயற்கையின் விதியை (THE LAWS OF NATURE) கண்டுப்பிடித்தவர் சேர் ஐசக் நியூட்டன் என்ற சமாச்சாரம் தெரிந்ததுதான். இவரைப் பற்றி தெரியாத ஒரு ரசவாதம் இப்பொழுது வெளிவந்திருக்கிறது.

"அடிசக்கை அது என்னங்க?"

"இறந்த இவர் உடலில் இடம் பெற்ற ஒரு பரிசோதனையில் மனுஷன் உடலெல்லாம் பாதரசம் இருந்தது. தெரியவந்திருக்கிறது."

"ஈஸ்வரா! புவியீர்ப்பு சக்தியை கண்டுபிடித்த பெரியவர் பிரபஞ்சத்திலுள்ள பாதரசத்தை எல்லாம் உரிஞ்சுத்தள்ளும் விவகாரத்தில் ஈடுபட்டிருந்தாரா என்ன?

" என்னதான் நாம் தமிழர் தொன்மையானவங்க, கின்மையானவங்கன்னு அலட்டிக் கொண்டாலும் மேலேத்தேசக்காரன் மேன்மையானவன்தான். ஆய்வுன்னா அலசித்தள்ளிவிடுவான். இங்கே இலக்கியம் முதல் அனைத்துமே குழுவாதம், குறுகியவாதம், கழுத்தறுப்புத்தான். இதை ஏன் சொல்கிறேன்னா, ஒரு கலைஞர் நீண்ட காலம் நாடக உலகோடு மாரடிப்பவர். என்னதான் பிச்சல் பிடுங்கலோடு வாழ்ந்தாலும் வாசிப்பு பழக்கத்தை நன்றாக பிடித்துக் கொண்டார். கற்றனைத்தூரும் அறிவு என்பது உண்மைதானே. அதனால் நிறைய எழுதுகிறார் மொழி நடையும் தி.மு.க. பாணி என்றாலும் செம்மையாக இருக்கிறது. ஓர் ஆய்வுக்கு இது

பிடிக்கவில்லை. ஜெஸ்மின் ஆசிரியருக்கு பறந்தது கழுத்தறுப்பு மொட்டைக்கடிதம்.

"காப்பியடிக்கிறார்! காப்பியடிக்கிறார் பிரசுரிக்கிறீங்களே" இப்படி ஒரு கிளிப்பிள்ளை கத்தல் சஞ்சிகை சும்மா இருக்குமா? போட்டுக் கொடுத்து விட்டது கலைஞர் ஒதெல்லா நடைபோட்டுக் கொண்டிருக்கிறார். நரநர சப்தத்துடன்.

" ஹி ஹி ஹி! அது கெடக்கட்டுங்க நம்ம சேர்.

"ஐசக் நியூட்டனுக்கு வாங்க"

ஓய்வு ஒழிச்சல் இல்லாது ஆய்வில் ஈடுப்பட்டிருந்த மகான் இவர். பூமிக்கடியிலுள்ள கரிகாலப் போக்கில் தங்கமாகின்றதே அப்படியானால் செம்பை தங்கமாக்க முடியாதா என்ற மூச்சுப்பிடிப்பில் நீண்ட காலம் மிகமிக இரகசியமாக ஈடுப்பட்டிருக்கின்றார்.

அட்டடா! நல்லதுதானே எதுக்கு இரகசியம்.

"நல்லதா? அடக்கடவுளே! விசயம் தெரியாமல் பேசுரீங்க ஏலே! எவனாவது தங்கம் உண்டாக்கும் ரசவாதத்தில் ஈடுப்பட்டால் மகனே? தொலைச்சிப் பிடுவேன் தொலைச்சி சவுக்கடி இல்லை சாவுமணிதான்" என்று மகாராணியார் சட்டம் போட்டிருந்த காலம்.

"அம்மாடி!"

செம்பை தங்கமாக்கும் முயற்சியில் மூன்றாவது விதியை உலகிற்கு தந்த ஐசக் ஈடுப்பட்டிருந்தார். பாதரசமுடன் நீண்ட காலம் சந்நியாசம் பூட்டிருந்தமையால் உடல் அதனை நன்றாக ஈர்த்துக் கொண்டுவிட்டது. பட்ட பாட்டிற்கு பயன் உண்டானதா? என்று பார்த்தால் அதுவும் அம்பேல் தான். அது குறித்த தகவல்களோ ஆய்வு குறிப்புகளோ தரவுகளோ எதுவும் இல்லை எல்லாம் சாம்பல் குவியலானது.

பெரும் விஞ்ஞானியான அவருக்கு துணையாக இருந்தது ஒரு நாய்தான். மின்சாரம் இல்லாத காலம் மெழுகுவர்த்தி வெளிச்சத்திலே ஒரு சூனியக்காரனைப் போன்று உட்கார்ந்து கொண்டு ஆய்வில் மூழ்கிக்கிடப்பார் உணவில்லை உறக்கமில்லை, திடிரென எழும்பி வெளியேறி நாய் முன்னே ஓட நடக்க ஆரம்பித்து விடுவார்.

ஒரு நாள்

உறங்கிக்கிடந்த செல்லத்துணையை மறந்து கதவை பூட்டி விட்டு வெகு தூரம் நடந்து விட்டார். மறுபடியும் நினைவு மீண்டு திரும்பியபோது ஆய்வுக்கூடம் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிக் கிடந்தது.

"அடக்கடவுளே!"

"என்ன பண்ரது? உள்ளே உறங்கிக் கிடந்த நாய் எழும்பி எசமானைக் காணாமல் துள்ளிப் பாய்ந்து மெழுவர்த்தியை தட்டி விழ்த்தி ஆய்வுக்கூடத்தையும் குறிப்புக்களையும், தரவுகளையும் கபளீகரம் செய்து விட்டது.

"ஈஸ்வரா!"

கவலையை விடுங்கோ நம்ம திறனாய்வுக்காரர்களுக்கு இந்த மாதிரி ஆய்வுக் கூட பிரச்சினை அது இது ஒன்னும் கெடயாது. யார் யாரோ எழுதி வைத்த புத்தகங்கள் வெப்சைட்டுகள் இவை போதுமே ஆக மிஞ்சிப் போனால் நூல்களின் முன்னுரையை மட்டும் மேலோட்டமாக மேய்ந்துவிட்டு சப்பை கட்டுக் கட்டுவார்கள்.

---

# ஒரே பூமியில் நீயும் நானும்

**உ. நிசார்**

*நீ ஆளவந்தவன்*
*நான் ஆளப்படுபவன்*

*ஆயிரமாயிரம்*
*அதிகாரக் கரங்களால் அழுத்தி*
*அடக்குமுறைக் கால்களால் மிதித்து*
*ஆணவக் குரல்களால் மிரட்டி*
*என்னில் ஆதிக்கம் செலுத்த*
*என்னை அடக்கி ஒடுக்க*
*உனக்கு*
*ஆயுதபாணிகள் இருக்கலாம்*
*அதுபோல*
*அடிவருடிகளும் இருக்கலாம்*
*அதனால்தான்*
*நீ... என்னை*
*ஆண்டாண்டு காலம்*
*ஆண்டு வருகிறாய்*

*உனது ஆட்சி*
*நாளுக்கு நாள்*
*வலுவடைய.... வலுவடைய....*
*நீ நினைக்கலாம்*
*காலப் போக்கில்*
*நான் வலுவிழந்து விடுவேன் என்று*

*அது பொய்யாகி விடும்*
*நீ ஆள வந்தவனாகவும்*
*நான் ஆளப்படுபவனாகவும்*
*தொடர்ந்து இருக்கும் வரை*

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பதிவுகள்

**– இரா. நாகலிங்கம் (அன்புமணி) –**

2011 ஜனவரி 6, 7, 8, 9 தேதிகளில் நடந்துமுடிந்த மேற்படி மாநாட்டின் உள்ளடக்கங்கள் பல, அவற்றுள் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் வெளியிட்ட பின்வரும் நூல்கள் சிறந்த ஆவணப் பதிவாக அமைகின்றன. அவை

(i) மாநாட்டு சிறப்பு மலர் –

(ii) கட்டுரைக் கோவை –

(iii) முகங்கள் – சிறுகதைத்தொகுதி – தொகுப்பு

வி. ஜீவகுமாரன் (டென்மார்க்)

முதலில் சிறுகதைத் தொகுப்பை எடுத்துக் கொள்வோம். இதன் சிறப்பம்சங்கள் பற்றிக் குறிப்பிடவேண்டும்.

(i) புலம் பெயர் எழுத்தாளர்களின் 50 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன.

(ii) இவை அனைத்தும், கனடா, பிரான்சு, ஜெர்மனி, டென்மார்க், அவுஸ்திரேலியா, லண்டன், மலேசியா, இந்தியா, சுவீடன் முதலிய புலம் பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் எழுதியவை.

(iii) ஒவ்வொரு சிறுகதையும் புலம் பெயர் நாடுகளின் வாழ்வியலை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது.

இத் தொகுப்பை உருவாக்கிய மூவரைப்பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டும். அவர்கள்

(i) தொகுப்பாசிரியர் – வீ. ஜீவகுமாரன் டென்மார்க்

(ii) வடிவமைப்பு – இவள் பாரதி – இந்தியா

(iii) ஓவியர் – சிவ கௌதமன் – இலங்கை

(இவர் "ஞானம் சஞ்சிகையின் ஓவியர்)

சுமார் 550 பக்கங்களைக் கொண்ட இச்சிறுகதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மிகச் சிறப்பாக அமைந்துள்ள சிறுகதைகளைக் கொண்டுள்ளது எழுதியவர்களில் பெரும்பாவானோர் புது முகங்கள். ஆனாலும் கதைகள் அனைத்தும் தரமானவை. கதைக் கருவிலும், அதை எடுத்துச் சொல்லும் பாங்கிலும் யதார்த்தமாகவும், மண்வாசனை வீசும் வகையிலும் அமைந்திருப்பது சிறப்பு.

இதன் தொகுப்பாசிரியர் ஜீவகுமாரனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். முகப்பு வாக்கியமாக, முன்பக்கத்தில் பாரதியின் கவிதை வரி ஒன்றை அவர் குறிப்பிடுகிறார். அது – "நினைவு நல்லது வேண்டும்" என்பது. அது தொகுப்பின் நோக்கத்தைப் பட்டவர்த்தனமாகக் கூறுகிறது.

(நினைவில் நல்லது வேண்டும்

நெருங்கின பொருள் கைப்படவேண்டும்

என்பது பாரதியின் கவிதை வரிகள்)

இச்சிறுகதைத் தொகுப்பைப்பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்.

"மனித உணர்ச்சிகளின் வி(பி)ம்பங்களைக் காட்டும் கண்ணாடி இந்த முகங்கள்" சொந்தத் தேசத்தின் எல்லைகளைத் தாண்டும்பொழுது இதே முகங்கள் தம் முகத்தை இழக்கின்றன அல்லது முகமூடி போட்டுக் கொள்கின்றன.

இவை யதார்த்தமான வார்த்தைகள்.

ஒருவர் வெளிநாட்டில் எவ்வளவுதான் உழைத்தாலும் தமது சொந்த நாட்டில் மாடிவீடுகளைக் கட்டினாலும் சொந்த மண்ணையும், தன் சொந்தங்களையும் விட்டுப் பிரிந்திருக்கும் வேதனை, ஆதங்கம் மனப்பாரமானது. அதையே அவர் இவ்வாறு கூறுகிறார்.

"....புலம் பெயர் வாழ்வில் சந்தித்த வேதனைகளும் சாதனைகளும்தான் இத் தொகுதியில் உள்ள சிறுகதைகள்" இதுவே யதார்த்தம்.

அவர் இன்னொரு செய்தியையும் வெளியிடுகிறார்.

".... இதன் பிரதி ஒவ்வொன்றையும் நீங்கள் வாங்கும் பொழுது இதன் மற்றைய பிரதி ஒன்று இலங்கையில் ஒரு பாடசாலைக்கோ அல்லது நூலகங்களுக்கோ இலவசமாக வழங்கப்படுகிறது.

இது ஒரு புதுமையான ஏற்பாடு

"முகவுரையும் பதிப்புரையும் என்ற தலைப்பில் நீண்டதொரு முன்னுரையையும் இவர் எழுதியுள்ளார். "புலம் பெயர்வு தொடர்பான பல சிந்தனைகளை இது முன்வைக்கிறது. தொகுப்பாசிரியர் வி. ஜீவகுமாரன், வடிவமைப்பாளர், இவள் பாரதி, ஓவியர் கௌதமன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

சில சிறுகதைகள்




இச்சிறுகதைகள் ஒவ்வொன்றும் புலம்பெயர் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தை வெளிப்படுத்துவதாக முன்னர் குறிப்பிட்டுள்ளோம். சிலவற்றைப் பார்க்கலாம்:-

(i) முதிர்பனைகள் – ( அகில் நியூஸிலாந்து) – இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று ஆண்மக்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்று, தமது இல்லற வாழ்க்கையையே இழந்தார்கள். எப்படி இழந்தார்கள் என்பதை இக்கதை யதார்த்தமாகச் சொல்கிறது.

(ii) பேரணங்கு (தேவகாந்தன் – கனடா) வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் நமது இளைஞர்கள் அங்குள்ள யாராவது ஒரு பெண்ணில் மோகம் கொண்டு ஈற்றில் எவ்வாறு ஏமாந்து போகிறார்கள் என்பதை நிதர்சன முறையில் சொல்கிறது.

(iii) லாசப்பல் (ஜோதி லிங்கம் பிரான்சு) நமது இளைஞர்கள் பாரிஸ் நகரத்தின் நாகரீக வாழ்க்கையில் கவரப்பட்டு எப்படித் தமது சுகத்தை இழக்கிறார்கள் என்பதை இக்கதை சொல்கிறது.

(iv) எனக்காகவா நான் – பாடும்மீன் சு. ஸ்ரீஸ்கந்தராஜா அவுஸ்திரேலியா

ஒரு முதிர்கன்னி வெளிநாடு சென்றாலும் தனக்காக வாழமுடியாது தன் குடும்பத்தினருக்காக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையை இக்கதை எடுத்துச் சொல்கிறது.

(v) தற்கொலை – (கலையரசன் ஹொலன்ட்)

வெளிநாட்டில் வேலைத்தளங்களில் ஏற்படும் நெருக்கடிகள் எவ்வாறு ஒருவரின் மனநிலை பாதிக்கப்படுகிறது என்பதை இக்கதை எடுத்துக் காட்டுகிறது.

கட்டுரைக் கோவை




32 கட்டுரைகளையும் சுமார் 310 பக்கங்களையும் கொண்டது இக்கட்டுரைக் கோவை. இதன் தொகுப்பாசிரியர்கள் லெ. முருகபூபதி, தி. ஞானசேகரன் ஜின்னா ஷரிபுத்தீன், அஷ்ரப் சிஹாப்தீன், ஜி. இராஜகுலேந்திரா ஆனாலும் முன்னுரையை ஜின்னாஹ் ஷரிபுத்தீனே எழுதியுள்ளார்.

இதிலிருந்து நாம் அறிவது – ஆய்வரங்கக் கட்டுரைகள் மாநாட்டுச் சிறப்புமலரில் இடம் பெறுகின்றன. மேலதிமாகக் கிடைத்த கட்டுரைகள், பரிசீலனை செய்யப்பட்டுத் தெரிவு பெற்ற கட்டுரைகள் இக்கட்டுரைக் கோவையில் இடம்பெறுகின்றன என்பதாகும்.

(ஆனாலும் ஆய்வரங்களில் இடம்பெறாத கட்டுரைகளும் மாநாட்டுச் சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது)

ஜின்னாஹ் ஷெரிபுத்தின் முன்னுரையில் குறிப்பிடும் விபரம் வருமாறு "இவ்வாண்டில் இலங்கையில் நடைபெறும் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் ஆய்வரங்குகளில் வாசிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து, ஒரு ஆய்வுக் கோவையை மட்டும் வெளியிடுவதாக ஆரம்பத்தில் முடிவாகியிருந்தது. பின் மாநாட்டின் ஞாபகார்த்தமாக அக்கட்டுரைகளுடன் மேலும் சிறப்புக் கட்டுரைகளையும் கவிதைகளையும் உள்வாங்கி ஒரு மாநாட்டு சிறப்புமலர் வெளியிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சர்வதேச ஊடகங்களில் ஆய்வுக்கட்டுரைகளுக்கான வேண்டுகோள் தொடர்ந்து வெளியாகின.

எவ்வாறாயினும், பலர் ஆய்வரங்குக்கு வேறு கட்டுரையும் கட்டுரைக்கோவைக்கு வேறு கட்டுரையும் அனுப்பியிருப்பதைக் காண முடிகிறது. உதாரணம் –

செல்வி க. தங்கேஸ்வரி ஆய்வரங்குக்குச் சமர்ப்பித்த கட்டுரை ஈழத்தில் பௌத்தத்திற்கு முற்பட்ட திராவிடச் சான்றுகள். கட்டுரைக் கோவையில் வெளியான கட்டுரை –

"கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும், தொன்மைக்கிராமங்களும்" என்பதாகும். பல கட்டுரைகள் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டவையே. இக்கட்டுரைக் கோவையில் இடம் பெற்ற கட்டுரைகளில் பெரும்பாலானவை நாட்டார் இலக்கியம் பற்றியவையாக அமைந்திருப்பது ஒரு தற் செயல் நிகழ்வு எனக் கொள்ளலாமா? இதில் சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் ஒரு நீண்ட கட்டுரையை எழுதி உள்ளார். தலைப்பு "ஈழத்திலக்கிய வளர்ச்சி வரலாற்றில் சப்பிரகமுவப் பல்கலைக்கழக மொழித்துறையில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிகள்" என்பதாகும். (39 பக்கங்கள்)

(பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் தமது ஆக்கங்களுக்கு நீளமான பெயர்வைக்கும் மரபு இங்கு நினைவுக்கு வருகிறது)

இத்தொகுப்பில் இடம்பெறும் கட்டுரைகள், பெரும்பாலும் ஈழத்தவரும், தமிழகத்தவருமே எழுதியுள்ளனர்.

சில வித்தியாசமான கட்டுரைகளால் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(i) கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும் (செல்வி. க. தங்கேஸ்வரி, பி. ஏ (தொல்) சிறப்பு.

(ii) ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து முஸ்லிம் புலவர்கள் உயர்த்திய தமிழ் (மானா மக்கீன்)

(iii) பண்டைச் சிங்கள இலக்கியங்கள், தமிழ் இலக்கிய மொழி பெயர்ப்பா? (பன்மொழிப்புலவர் த. கனகரெத்தினம்)

இதை தவிர நாட்டாரியல் தொடர்பாக 8 கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

ஒவ்வொரு கட்டுரையும் ஏதோ ஒரு வகையில் சிந்தனையைத் தூண்டுவதை அவதானிக்க முடிகிறது. இதில் வரலாற்று ரீதியான கட்டுரைகளும், இலக்கிய ஆய்வுபற்றிய கடுரைகளும் முக்கிய இடம்பெறுகின்றன.

மாநாட்டுக்கீதமும் இத்தொகுப்பில் இடம்பெறுகிறது. இயற்றியவர் ஜின்னாஹ் ஷரிபுத்தின் 'சங்கேமுழங்கு' என்னும் பாடலை நினைவூட்டும் வகையில் "முரசே முழங்கு" என ஆரம்பமாகிறது இப்பாடல்.

மாநாட்டுச் சிறப்புமலர்




55 கட்டுரைகளும் 332 பக்கங்களும் கொண்ட மாநாட்டுச் சிறப்பு மலரின் தொகுப்பாசிரியர்கள் லெ. முருகபூபதி, தி. ஞானசேகரன், ஜின்னாஹ் ஷெரிபுதீன், அஷ்ரப் சிஹாப்தீன் ஆகியோர் செயற்பட்டிருக்கின்றனர். இலங்கை, தமிழ்நாடு எழுத்தாளர்களுடன் கனடா, அவுஸ்திரேலியா முதலிய புலம் பெயர் எழுத்தாளர்களும் இம்மலருக்குக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

கட்டுரைக் கோவையில் 29 பக்கங்களைக் கொண்டசிறுகதை, கட்டுரையை கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் வழங்கியது போல, இம்மாநாட்டு மலரில் கலாநிதி செங்கை ஆழியான், 23 பக்கங்களைக் கொண்ட இறுதிக் கட்டுரையை வழங்கியுள்ளார். 'தமிழ்நாவல்கள் – சில நோக்கங்கள் என்பது கட்டுரையின் தலைப்பு தமிழ் நாவல்களின் தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாற்றுச் செய்திகளை இக்கட்டுரை தருகிறது.

செங்கையாழியான் நாடறிந்த எழுத்தாளர் மட்டுமல்ல ஈழத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி நன்கு அறிந்தவர் இவ்வகையில் பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டவர் அவருடைய கருத்துக்கள் முக்கியமானவை.

இந்நூலுக்கு அறிமுக உரைகளை எழுதியவர்களின் உரைகளிலிருந்து சில கருத்துக்களை நோக்குதல் தகும். 'மெய்ப்படும் கனவு' என்ற தலைப்பில் மாநாட்டு ஏற்பாட்டாளர் கூறுவது" அறிந்ததைப்பகிர்தல் அறியாததை அறிதல் (இந்த) அனுபவப் பகிர்வு நிகழ்வே எமது சர்வதேச தமிழ், எழுத்தாளர் மாநாடு. இக்கூற்று ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இக்கருத்து இச்சிறப்பு மலருக்கும் பொருந்தும்.

"தமிழின் சர்வதேசப் பார்வைக்கு தொடக்கப்புள்ளியாகும் மாநாடு" என்ற தலைப்பில் மாநாட்டின் முக்கிய பிரமுகரான கார்த்திகேசு சிவத்தம்பி கூறுவது–

இன்று தமிழர் இல்லாத நாடு இல்லை என்ற அளவிற்கு உலகின் பல பாகங்களிலும் தமிழர்கள் வசிக்கின்றனர்.

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா தவிர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள், தங்கள் அடையாளங்களை பேணிக்கொள்வதற்காக தமிழில் ஆக்க இலக்கியம் படைப்பது இன்று வழக்கமாகி விட்டது. இதனால் புகலிடத் தமிழில் இலக்கியம் என்றே தனி வகைப்பாடொன்று வழக்கில் உள்ளது..." என அவர் கூறுகிறார். இக்கூற்றின் நிதர்சனமாக அமைந்தது இம்மாநாடு.

இச்சிறப்பு மலரின் முதற் கட்டுரையாகக் கார்த்திகேசு சிவத்தம்பி எழுதியுள்ள "தமிழ் இலக்கிய வரலாறும், தமிழில் எழுதப் பெற்றுள்ளவற்றின் வரலாறும் என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. தலைப்பில் உள்ள 'பொடி'யை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மற்றும் சில முக்கியமான கட்டுரைகள் வருமாறு,

(i) தமிழ் மொழி வளர்ச்சியில் டாக்டர் கால்டுவெல்லின் பங்களிப்பு (முனைவரி மு. கு. தங்கம், தமிழ்நாடு)

(ii)கணினியில் தூரிகையாகும் கைவிரல்கள் (வி. ஜீவகுமாரன் – டென்மார்க்)

(iii) தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தத் தவறிய தமிழர் சமுதாயம் – தெணியான்)

(iv) தரமான இலக்கியங்களை எவ்வாறு அடையாளம் காண்பது (லெ. முருகபூபதி)

ஏனைய கட்டுரைகள் ஒவ்வொருவரது தனிப்பட்ட பார்வைக்கு ஏற்ப அமைந்துள்ளன ஆனாலும் அவை ஒவ்வொரு நோக்கில் பயனுள்ளவையே.

ஆய்வரங்கிற்கெனச் சமர்பிக்கப்பட்ட சில கட்டுரைகள் இவற்றுள் அடங்கியிருக்கலாம். நிகழ்ச்சி நிரலுடன் ஒப்பிட்டுப் பார்த்தே அவற்றை இனங்காணலாம். ஆனால் அது முக்கியமல்ல.

சிற்றிதழ்களின் இலக்கியப் பங்களிப்பு தொடர்பான கட்டுரைகளும் கவனத்திற் கொள்ளவேண்டியவையே (உ+ம் தி. ஞானசேகரனின் "ஞானம் ஊடாக ஒரு அனுபவப் பகிர்வு)

மாநாட்டு அமர்வுகளில் கவிதைக்கென ஒரு அமர்வு இல்லாவிட்டாலும், இச்சிறப்பு மலரில் பல கவிதைகள் இடம் பிடித்துள்ளன. சோ. பத்மநாதன், அகளங்கன் முதலியோர் இதில் பங்களிப்புச் செய்துள்ளனர்.

தொகுப்புரை

மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களுக்கு வழங்கப்பட்ட ஆவணப்பையில் இம்மூன்று நூல்களும் அடங்கியிருந்தன.

இவை தவிர, ஞானம், ஜீவநதி, செங்கதிர் முதலிய சஞ்சிகைகள் மாநாட்டுச் சிறப்பு மலர்களை வெளியிட்டுள்ளன. இவற்றிலும் பயனுள்ள கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டைக் குழப்புவதற்காக, சில விஷமக்காரர்கள் மேற்கொண்ட பொய்ப்பிரசாரங்கள் இம் மாநாட்டுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஒரு மாநாட்டுச் சிறப்பு மலருடன், சிறுகதைத் தொகுதி, கட்டுரைக்கோவை ஆகியனவும் வெளிவந்திருப்பது மாநாட்டின் வெற்றியாகவும், மாநாட்டின் ஆவணப்பதிவாகவும் நாம் கொள்ளலாம்.

மாநாட்டின் இடம்பெற்ற ஒவ்வொரு அமர்வைப் பற்றியும் தனித்தனி கட்டுரைகள் வெளிவரவேண்டும். இலக்கிய ஆர்வலர்கள் யாராவது இதைச் செய்யலாம்.

அவ்வாறே, மாநாட்டு அமர்வுகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளில், மேற்படி மூன்று தொகுப்பு நூல்களிலும் இடம் பெறாதவை தனி நூல்களாகப் பிரசுரிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் இவ்விடத்தில் கவனம் செலுத்துதல் தகும்.

---

## ஜப்பான்

வாகரைவாணன்

*சுனாமியால்*
*ஜப்பான்*
*சுடு காடானது!*

*பொருளாதாரத்தின்*
*முதுகெலும்பு*
*உடைந்து*
*பொடிப் பொடியானது!*

*தொழில் நுட்பத்தேசம்*
*தொலைந்து விட்டது*

*பூகம்பம் என்பதே*
*ஜப்பானுக்குப்*
*பொழுதுபோக்குத்தான்*
*ஆனால் இப்போது*
*அந்தத் தேசத்தையே அது*
*மண்ணுக்குள்*
*புதைத்து விட்டது!*

*நவநாகரீக உலகம்*
*சவமானது*
*இனி அதன் சரித்திரம்*
*சாம்பல்தான்!*

*விஞ்ஞானத்தின்*
*சக்தியால்*
*அடுத்த கிரகங்களையும்*
*விழுங்கத் துடிக்கும்*
*மனிதா,*
*புரிந்து கொள்*
*இயற்கை முன்*
*நீ ஒரு புல்!*
*உலகின் அழிவுக்கு*
*இது ஒரு ஆரம்பம்*
*முடிவு*
*மிக மோசமாக இருக்கும்*
*இந்த அழிவுக்கு*
*மனிதா*

*எந்த உயிரும் காரணம் அல்ல*
*எல்லாம் நீதான்*
*சிந்தித்துப்பார்*
*இனி உன்னால்*
*என்ன செய்ய முடியும்?*

*இன்றைய உலகம்*
*இயற்கையின் எதிரி*
*அதனால்தான்*
*இந்த யுத்தம்*
*இதில் மனிதன்*
*எப்படி வெல்லுவான்?*

*இயற்கைதான்*
*மகாசக்தி*
*இதன்முன்*
*எந்த விஞ்ஞானமும்*
*எடுபடாது!*




குறிஞ்சிநாடன்




நூல் : தாய் மடி தேடி
ஆசிரியர் :
கார்த்திகாயினி சுபேஸ்
வெளியீடு : மீரா பதிப்பகம்
விலை : ரூபாய் 300/=

மக்களை மறந்து வானத்தையும் முகில்களையும் தென்றலையும் காதலையும் பற்றி மாத்திரம் எழுதினால் அது இலக்கியமாகி விடாது. இயற்கையுடன் மக்களையும் அவர்களது வாழ்வியலையும் இணைக்காமல் படைப்புகள் புனைவதில் பிரயோசனம் இல்லை" என்று பிரபல இலக்கியவாதி நீர்வை பொன்னையன் முன்னுரையில் எழுதியுள்ளார். நூலாசிரியர் கார்த்திகாயினி அவரது எண்ணத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

நூலாசிரியரின் எழுத்துக்கள் சமூக சிந்தனையுடன் எழுதப்பட்டவை. தான் வாழும் சமூகம், சமூகத்தின் மக்கள் அவர்களின் துன்ப துயரங்கள் என்பன கதைகளில் இழையோடுகின்றன.

போர்க்காலச் சூழலில் பெண்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள் இழப்புகள் என்பன யாவும் கதைகளில் பிரதிபலிக்கின்றன. நூலாசிரியர் கதைக்காக எடுத்துக் கொண்ட கருப்பொருள் அவர் கூறுவதுபோல அவர் கேட்ட, அறிந்த, பார்த்த, பாதித்த சம்பவங்களையே கதைகளாக்கியுள்ளார். கதைகள் உணர்ச்சி பாவத்துடன் மனதைதொட்டு இழுக்கும் உருவத்துடன் இருப்பதை மறுக்க முடியாது. கதைகளில் மனித நேயம் இழையோடுவதைக் காணலாம்.

இந்நூலில், நான் சீதையல்ல. துள்ள முடியாத புள்ளிமான், தனிமரம், ஊனம் அறுவடையாகாத விதைப்புக்கள், கருமுகில் தாண்டும் நிலவு, உதயம், இப்படியும், தாய்மடி தேடி, எச்சில் என்று பத்துக் கதைகள் உள்ளன.

போர்க்காலச் சூழலில் சிக்கிய அபலைகளின் கதைகள் நெஞ்சை உருவாக்குவதாக உள்ளன. இக்கதைகளில் 'கருமுகில் தாண்டும் நிலவு' ஒரு புரட்சிகரமான படைப்பாகக் கொள்ளலாம். சீதா கண்களில் பொங்கும் தீக்கனலோடு 'சத்தியமாய் நீ என் பிள்ளைக்கு அப்பனுமல்ல. உன்னால நல்ல அப்பனாய் இருக்கவும் முடியாது' என்று சொல்லி கற்பூரத்தை அணைக்கும் போது நாம் மூச்சுவிட மறந்து விடுகிறோம்.

மேற்படி கதைகள் தினக்குரல், உதயன், சஞ்சீவி, இடி, ஞானம் ஜீவநதி முதலிய ஏடுகளில் வெளிவந்தவை.

முற்பகல் செய்யும் உதவியை பிற்பகல் மறக்கும் மனித இனத்தில் நூலாசிரியர் வேறுபட்டு நிற்கிறார். கதைகளை நூலாக்குவதில் உதவிய குடும்பத்தினர். விபவி நீர்வை பொன்னையன், தினக்குரல் பாரதி, வீ. தனபாலசிங்கம், ஞானம் ஆசிரியர் திரு. ஞானசேகரன் என்போர் நினைவுப் பெட்டகத்தில் வைத்து திறந்து காட்டியமை அவரது நன்றி குன்றா நலத்தைக் காட்டுகிறது. அவரது நூலினைப் பெற்று அவருக்கு ஆதரவு தரவேண்டியது வாசகர் கடமையாகும்.

★★★



நூல் : முத்துக் கணையாழி
ஆசிரியர் : உ. நிசார்
வெளியீடு : பானு பதிப்பகம்
விலை : ரூபாய் 100/=

நூலாசிரியர் உ. நிசார் அவர்கள் தொழில்முறையில் பள்ளி ஆசிரியர். தமிழ் உணர்வும் கற்பனைத் திறனும் கொண்ட இவர் சிறுவர்களின் உடல் உள அபிவிருத்தியில் மிகவும் அக்கறை கொண்டவர். அவர்களின் சிந்தனையைத் தூண்டுவதிலும் கற்பனையை வளர்ப்பதிலும் பல உத்திகளைக் கையாண்டு வருபவர். ஆசிரிய சமூகத்தினராலும் மாணவ சமூகத்தினராலும் பெரிதும் மதிக்கப்படுபவர் சமூக நலன் விரும்பும் இவர் எல்லோர்க்கும் முன் மாதிரியான நடத்தைக் கோலங்களைக் கொண்டவர்.

குறைந்த பட்சம் ஆண்டுக்கு இரண்டு நூல்வீதம் மாணவர் நலன்கருதி வெளியிடுகின்றார். கனவுப் பூக்கள், ஓயாத அலைகள், திராட்சை ரசம் முதலிய சிறுவர் கவிதை நூல்களையும், நட்சத்திரப் பூக்கள், வெண்ணிலா, மலரும் மொட்டுக்கள், சிறகு விரி, பாவிருந்து, இளைய நிலா, நல்ல தங்காள் முதலிய சிறுவர் பாடல்களையும் வெளியிட்டுச் சாதனை படைத்தவர்.

கவிதை, சிறுவர் பாடல் மூலமாக உயர்ந்த அறம் சார்ந்த கருத்துக்களையும் அன்பு அறம், உண்மை, நேர்மை, ஒழுக்கம் என்பனவற்றை பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைக்கவும் முயற்சி எடுத்துள்ளார்.

'முத்துக் கணையாழி' என்ற இந்த கதை நூல், மாணவர் விரும்பி வாசிக்கும் நூலாக அமையும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை என்பது எனது கருத்தாகும்.

திடுக்கிடும் சம்பவங்களையும் திருப்பு முனைகளையும் கொண்டது கதை. சிறுவர்களுக்குப் பிடித்த மந்திரவாதிகள், பூதங்கள், மனித உடலை விட்டு வெளியேறும் ஆவிகள் அதன் அபூர்வ செயல்கள் என்பன மாணவர் விரும்பும் நிகழ்வுகளாக அமையும்.

மந்திரவாதி குணசாமி பாதுகாப்பாக இருக்கும் கணையாழியை பெறுவதற்காகச் செய்யும் முயற்சியும், தம்பிராசா பூதம் உதவும் காட்சியும் மாணவர்க்கு பிரமாதமாகத் தெரியும். பாம்புகளை மட்டும் கண்டிருக்கக் கூடிய சிறுவர்களுக்கு மூன்று தலை நாகம் என்றால் வியப்பிலும் வியப்பாகத் தெரியும். ராஜ மருதமரத்தின் வாசலால் நுழைந்து சென்ற மந்திரவாதி குணசாமி மீண்டும் முத்துக் கணையாழியுடன் வருவதைக் காண அடுத்த புத்தகத்திற்காக சிறுவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியர் எளிமையான நடையில் சிக்கல் இல்லாத முறையில் சம்பவங்களின் முடிவை எதிர்பார்க்கும் வண்ணம் கதையை நகர்த்துச் செல்வது சிறப்பாகவுள்ளது.

★★★



நூல் : நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள்
ஆசிரியர் : நிலா தமிழின் தாசன்
வெளியீடு : பி. வி. ஆர்.ஆப்செட், சென்னை.
விலை : ரூபாய் 150/=

நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள் என்னும் குறுங்காவியத்தைப் படைத்தவர் நிலா தமிழினிதாசன். இவர் திருகோணமலை நிலாவெளியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது இயற்பெயர் மிக்கேல் அருள்மொழிராஜா. இவர் பல புனை பெயர்களில் தனது ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். மஞ்சுளா மணாளன், நிலவூர் மஞ்சுதாசன், தென்தமிழ்க்கோ என்பன வேறு

பெயர்கள். இவர் 1993இல் நாளை என்ற கவிதை நூலையும் 1994இல் 'புலர்வு' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவரது ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, சுதந்திரன், ஈழநாடு, தொண்டன், சிரித்திரன் முதலிய சஞ்சிகைகளிலும் இலங்கை வானொலி, வெறிட்டாஸ் வானொலியிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது கவிதைகள் இனிமை சொட்டும் தேன்தமிழ்க் கவிதைகளாகவும் நெஞ்சினை வருடி ஈர்க்கும் கவிதைகளாகவும் மலர்ந்து வாசகனை வாரி இழுத்துச் செல்லுகின்றன. எதுகை மோனை தவறாத இலக்கியப் படைப்பு இலட்சியப் படைப்புங்கூட.

நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள் குறுங்காவியம் எதனைப் பேசுகிறது. பொய்யும் புரட்டும் முதலாகக் கொண்டு வியாபாரம் செய்யும் முத்தையா முதலாளியின் ஒரே மகள் ஜோதினி ஏழை. சங்கரன் மகன் வேந்தனிடம் தனது மனதைப் பறிகொடுக்கிறாள். வேந்தனும் அவளை நேசிக்கிறான். இதனிடையே வேந்தனுக்கு கிளார்க் வேலை கிடைக்கிறது. கொழும்பில் வேலை ஏற்ற பின்னர் கறுப்பு யூலை நடக்கிறது. தமிழினப்படுகொலை. கொலை, கொள்ளை, தீவைப்பு, எரிப்பு என்பன எதிர்ப்பின்றி நடக்கிறது. வேந்தன் தப்பிப்பிழைத்து ஊர் வருகிறான். ஜோதினிக்கு திருமண ஏற்பாடுகள் நடந்து முடிந்தன. அவள் சம்மதம் இல்லாமலே. காதல் என்றால் வேப்பங்காய் என நினைக்கும் பெற்றோர் பார்த்த வரனை ஜோதினி கண்ணகியாக மாறி கேள்வி தொடுத்து எவரது சம்மதம் இல்லாமலே வேந்தன் வீட்டில் அடைக்கலமாகிறாள். வேந்தன் இனத்தையும் தேசத்தையும் காப்பாற்ற தோழர்களுடன் இணைந்து கொண்டான். ஜோதினி அவன் வரவுக்காகக் காத்திருக்கிறாள்.

கவிஞரின் தமிழ் தென்றலாக சுகமளிக்கிறது. தேனாக இனிக்கிறது. எதுகையும், மோனையும் இதயத்தைத் தாலாட்டுகிறது. கவிஞரின் உவமை நயம் எல்லா பாடல்களிலும் கரும்பாய் இனிக்கிறது.

*காற்றடிக்கப் பனை மரங்கள் கரகமாடும்*
*கனிந்த நறும் பனம்பழங்கள் நிலத்தைக் கூடும்*
*சீற்றமுடன் நுரைபொங்கும் கள்ளுப்பானை*
*சிரித்தருந்தும் கூட்டம் வெறி நடனமாடும்.*

★★★




நூல் : இளைஞர்கள் ஏற்க வேண்டிய சபதம்
ஆசிரியர் : நிலா தமிழின் தாசன்
வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம் - சென்னை.
விலை : ரூபாய் 200/=

நூலாசிரியர் நிலா தமிழின் தாசன் அவர்களுடைய நாலாவது நூல் இதுவாகும். இவரது கவித்திறம் இலக்கிய வித்தர்களால் அன்றும் இன்றும் போற்றப்படுகிறது. கவிதைகள் தேனினும் இனியது. செந்தமிழ் மணம் தென்றல் சுமந்து வர உள்ளம் உவகை கொள்ளும் உணர்ச்சியைத் தூண்டும் பாடல்கள். போரின் விளைவால், அகதி வாழ்வால், இடப்பெயர்ச்சியால் மனம் நொந்து தளர்ந்து போன மக்களுக்கு புத்துணர்வையூட்டும் டொனிக்காக இவரது பாடல்கள் அமைந்துள்ளன.

கைக்கு அடக்கமான நூல். கவர்ச்சிகரமான முன் அட்டை. நூற்றிப் பதினாறு பக்கங்களைக் கொண்ட இந்நூலில், இயற்கை, அன்னை, காதல், கொடுமை என விபரிக்கும் ஐம்பத்தொரு கவிதைகள் இடம் பெற்று மணம் வீசி வாழ்வை வசந்தமாக்க வந்துள்ளன. அடுக்கு மொழிகள் எதுகை, மோனை, உவமை, உவமானம் என்பன துள்ளி விளையாடுகின்றன.

தென்றல் பாடும் கவிதைகள் பல. வீரம் விளைவிக்கும் கவிதைகள் பல. தீயாய் எரிமலையாய் வெடித்துச் சிதறும் கவிதைகள் பல. சமூகத்தை தட்டி எழுப்பி போர்க்குணமாக்கும் கவிதைகள் பல.

இளைஞர்களை நோக்கி அரிய பல கருத்துக்களை அள்ளி வீசியுள்ளார். இளைஞர்கள் உள்ளமே நன்னிலம் இங்கு விதைக்கப்படும் விதைகள் வீணாவதில்லை.

அவரது உள்ளத்தில் நிலை பெற்ற ஓர்மம் பஞ்சணை வேண்டேன். காதல் வேண்டேன். ஆடல், பாடல், கூடல் எதுவும் வேண்டேன். புகழ் பொருள் எதுவும் வேண்டேன் என்று சபதம் எடுத்து இழந்த மண்வாசனை மீட்டெடுக்க கவிஞர் புறப்படுகிறார்.

*மாளுந்தமிழினம் வாழ – தனை*
*வாழ்வை உடைத்தது மீள*
*நாளும் ஒருவழி சமைப்பேன் – வீர*
*நெஞ்சொடு நானதில் நடப்பேன்*

என்ற கவிஞரின் வீரமொழிகள் மெய் சிலிர்க்க வைக்கிறது. தேசம் பற்றி சொல்லும்போது

*மனிதர்களை விதைத்து*
*எலும்புக் கூடுகளை அறுவடை செய்யும்*
*தேசம் இது* என்று குறிப்பிடுகிறார்.

★★★



நூல் : இருபதாம் நூற்றாண்டுக் கவிதை
ஆசிரியர் : பெரிய ஐங்கரன்
வெளியீடு : மீரா பதிப்பகம்
விலை : ரூபாய் 200/=

நூலாசிரியர் இலக்கிய புலமைமிக்க பின்புலத்தில் பிறந்து சாதனை புரிந்து வருபவர். நா. கதிரவேற்பிள்ளை, குமாரசாமிப் புலவர், தில்லைநாத நாவலர், மு. கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் முதலியோர் பிறந்த இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சங்க கால இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை ஆழ்ந்த ஞானமும் புலமையும் கொண்டவர். தமிழினப் பற்றும் சமயப் பற்றும் கொண்டவர். இந்நூல் இவரது நாலாவது நூலாகும்.

தினக்குரல் முதலிய பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு நூல் இதுவாகும்.

இந்நூலில் புதுக்கவிதையில் படிமவியம், பெண்மொழிக் கவிதை, கவிதையில் முரண்கோட்பாடு, சோலைக்கிளியின் கவிதை நவீன கவிதையில் அஃறிணைப் பெயர்கள், மாணிக்கவாசகரின் நாய், பாரசிகக் கவிஞானி, தலையணை, புறநானூறு ஒரு எளிய அறிமுகம் உமர்கயாமின் ஒரு கவிதை, இருபதாம் நூற்றாண்டுக் கவிதை என்று பதினொரு தலைப்புக் கட்டுரைகளை அடங்கியது இந்நூல்.

கவிதைகளில் படிமம் எவ்வாறு அமைகிறது என்பது பற்றி மேநாட்டு அறிஞர்களில் கருத்துக்களை வாசகருக்கு விருந்தாக வைத்துள்ளார். 'ஒரு ஓவியமோ அல்லது சிற்பமோ தன்னை சொற்களின் மூலமாக வெளிப்படுத்திக் கொள்ளும் முறையே கவிதைப் படிமம் என்று எஸ்ரா பவுண்ட் குறிப்பிடுவதாகக் கூறியுள்ளார். அத்துடன் உணர்ச்சியும் அறிவும் இணைந்து வெளிப்படுவதே படிமம் என்று தனது கூற்றையும் வெளிப்படுத்துகிறார்.

பெண் மொழிக் கவிதையில், மாலதி, மைத்திரி, குட்டி ரேவதி, சல்மா, சுகிர்தினி, உமா மகேஸ்வரி என்போரின் கவிதைத் தாக்கங்களை விபரித்துள்ளார். கவிதையில் முரண்போக்கை பிரேம் ரமேஸ் சுகுமாரன், விக்கிரமாதித்யன், பேசு ராசா போன்றோரின் கவிதைகளை உதாரணம் காட்டி விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அடுத்து உமர்கயாமின் கவிதைகளை சுத்தானந்த யோகியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அப்துல் காதர் லெப்பை ஆகிய மூவரும் கையாண்டுள்ள மொழி பெயர்ப்பை எடுத்துக்கூறி உமர்கயாமின் கருத்தோட்டம் யாரில் விஞ்சி நிற்கிறது என்பதை விளக்கி இலக்கிய உள்ளங்களை குளிரூட்டுகிறார்.

★★★

# வாசகர் பேசுகிறார்

இலங்கைத் தமிழ் நாடகத்தின் தந்தை பேராசிரியர் கணபதிப் பிள்ளையே! ஆம் மறுப்பதற்கில்லை. கடந்த ஒரு வருடமாக சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு சம்பந்தமாக விளம்பரங்கள், யாழ்ப்பாணத்தில், பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டதே.

கட்டுரையாளர், பேராசிரியரைப் பற்றிய ஒரு கட்டுரையை சமர்ப்பிக்கலாம் தானே – நடக்குமா? நடக்காதா? என்று ஏளனத்துடன் கவனித்து வந்த சிலர் கடைசி நேரத்தில் வந்து மாநாட்டு அரங்குகளை அலங்கரித்தவர்களும் உண்டு. சிலர் கொழும்பில் இருந்தும் மாநாட்டுப்பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை. மாநாடு முடிந்த பின் வேதனைப் படும் கட்டுரையாளர் ஏன் மாநாட்டு குழுவினருக்கு பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஐயாபற்றிய ஒரு விரிவான கட்டுரையை அனுப்பி வைத்திருக்கலாமே. அது சர்வதேச ரீதியில் சென்று அடைந்திருக்குமே!

**ராஜ் கௌதமன்**, வெள்ளவத்தை

★★★★★★

கடந்த ஞானம் இதழில் தலையங்கத்தில் தமிழக சிற்றிதழ் சிற்பி ''சரஸ்வதி'' வ. விஜயபாஸ்கரன் பற்றி மிகவும் அரிய தகவலை தந்துள்ளீர்கள். இலங்கை சிற்றிதழ்களில் நீங்கள் முந்திக் கொண்டு பதிவு செய்துள்ளீர்கள் பாராட்டுக்கள்.

அவர் கோவையில் 09.02.2011 அன்று தான் மரணமானார். ஞானத்தில் 11.02.2011 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மோதரை – வசிப்பிரியா**

★★★★★★

உங்களுடைய ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையை வலைத்தளத்தில் பார்த்தேன், மிக அற்புதமான புத்தக அமைப்பு. *ஓசை இல்லாஓசைகள்* பகுதி ரசிக்க கூடிய பகுதி இக் காலத்திற்கு தேவையான செய்தி. *சாதி தீ* அற்புதமான கவிதையை வல்வை மு.ஆ. சுமன் கொடுத்தது மிக அற்புதம். திரு. கே. பொன்னுத்துரை எழுதிய *சமகால இலக்கிய நிகழ்வுகள்* என்ற கட்டுரை சுருக்கமாக ஆழமான கருத்துக்களை அழகு தமிழில் எழுதி உள்ளார். கலாபூசணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய *இலங்கை தமிழ் நாடகத்தின் தந்தை பேராசிரியர் கணபதி பிள்ளையே* என்ற கட்டுரை இலங்கையில் நாடகவியல் எவ்வாறு வளர்ந்தது மக்களுடைய பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்ற விபரமும் அதனுடைய வளர்ச்சியும் நேர்த்தியாக சொல்லப்பட்டுள்ளது. *பெண் ஆதிக்கமா* யார் சொன்னது, என்ற கட்டுரை யுகாயணி என்ற எழுத்தாளர் எழுதி உள்ளார். எவ்வாறு பெண் அடிமை ஆண்வர்க்கங்களால் எந்த வகைகளில் எடுத்தாளப்படுகின்றது அருமையாக சாடியிருக்கின்றார். மக்களுக்காக பயன்படும் காலணியை செய்கின்றவனின் வாழ்க்கை இந்த பூமியில் எவ்வாறு நிலைநிறுத்தப்படுகின்றது என்பதை தத்ரூபவமாக கவிதையில் படம் பிடித்து காட்டி உள்ளார் அவருடைய தலைப்பானது *செருப்புக் கட்டி சிறப்புக் கட்டி* என்று உள்ளது. அவன் கவிதையை படிக்கும் பொழுது தெருவில் வீசும் செருப்பினை பிறர் பயன்பட செய்வேன் என்று கூறுவதும், செருப்பு தொழில் செய்து சம்பாதிப்பேன் ஆனால் திருட்டு தொழில் செய்யமாட்டோம் என்ற உறுதிப்பாட்டை மிக நேர்த்தியாக இவ்வளவு உண்மையாக யாரும் சொன்னதில்லை, என்னவே சிறப்பு கட்டி என்பதைவிட சிறப்பு காட்டி என்று இருந்தால் கவிதையின் தாக்கம் உயர்வாயிருக்கும் என்று எண்ணுகின்றேன். திரு. கே. விஜயன் அவர்கள் எழுதிய *படித்ததும் கேட்டதும்* பகுதியில் கொடிது கொடிது மனுநீதி கொடிது அதில் வள்ளுவனையும் சாடி இந்த தமிழ் சாதி இன்னும் ஏன் இந்த தயிர் சட்டியை தலையில் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையை நல்ல தமிழில் கூறியுள்ளார். உங்களுடைய நேர்காணல் பகுதியில் *தெளிவத்தை* ஜோசப் நேர் காணல் மிக அற்புதம் சினிமா திரைப்பட விமர்சனம் நல்ல ஆழ்ந்த கருத்தோடு விமர்சிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை இரண்டு நாள் நிகழ்ச்சிகளை நாலு பக்க படங்களில் மாநாட்டை நேரில் பார்த்தது போல் உள்ளது. ஒவ்வொரு பக்கமும் புரட்ட புரட்ட தேன் ததும்பும் தமிழும் நாவுக்கினிய நவரச நயமும் அடுத்த அடுத்த பக்கங்களில் என்ன இருக்குமோ என்ற ஆவல் மொத்தத்தில் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை இலங்கை தமிழ்வாழ் மக்களுக்கு திருப்பாற்கடல் அமிர்தம் போல் அமைந்து உள்ளது என்றால் மிகையாகாது. தமிழ் இருக்கும் வரை உங்கள் புகழ் இருக்கும் கடல் அலை இருக்கும் வரை உங்கள் தமிழ் பனி சிறந்தோங்கும். வாழ்க பல்லாண்டு வளர்க பல்லாயிரத்தாண்டு.

கம்பன் கழக தலைவர், ராமநாதபுரம் மாவட்டம், மா. அ. சுந்தரராஜன்

★★★★★★

ஞானம் 130ம் இதழில் ''பெண் ஆதிக்கம்'' என்ற கட்டுரையை வாசித்தேன். நன்றாக இருந்தது. ஒழுக்கக் கோட்பாடுகளைக் காட்டி மதவாதிகளை சாட்டியுள்ளார். இது புதுமையானதல்ல. பரம்பரையாக வருகின்ற ஆதங்கம் தவிர்க்க முடியாது. கட்டுரை ஆசிரியர் ஓர் உண்மையை உணரவேண்டும். மனிதரில் மட்டுமல்ல; சகல ஜீவிகளிலும் பெண்ணினம் மென்மையாகவும் நளினமாகவும் பேணப்படுகின்றன. பெண்களைப் பாதுகாப்பது ஆண் வர்க்கம் தான், இது ஆணினத்தின் கடமையாகும். இதற்காக பெண்களின் மாண்பதனைப் பேண சில கட்டுப் பாடுகளை விதித்திருப்பது பெண் அடிமைத்தனமல்ல; அது பெண்களுக்கு பாதுகாப்பு கேடயம். இது பலருக்கு தவறாகத் தெரிகிறது. பெண்களின் கவர்ச்சி ஆண்களைக் கவரக்கூடியது. எனவே பெண்கள் உடலை மறைப்பது அவர்களின் பாதுகாப்பு. விளம்பரத்துக்காக பெண்களைப் பயன்படுத்துவதை சற்று சிந்தித்துப் பாருங்கள் சித்திரத்தில் பெண்களை எவ்விதமாக சித்தரித்து உள்ளனர். இதைக் கலைக் கண் என்பர். தன் தாயும், சகோதரிகளையும் இப்படியான உருவங்களில் பார்க்க எத்தனை பேர் விரும்புவார்கள் தத்துவம் பேசுவோர் சிந்திக்கட்டும் கண்ணாடியில் கல்பட்டாலும் சரி அல்லது கல்லில் கண்ணாடிபட்டாலும் உடைவது கண்ணாடிதான். பூஜைக்கு உரியவை பூஜை அறையில்தான் இருக்க வேண்டும் அது தெருவுக்கு வரக்கூடாது சித்தனையாளர் சிந்தித்தால் சிறப்புப் பெறுவர்.

காலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் ஆதங்கம் வர வேற்கத்தக்கது. அக்கட்டுரையை பிரசுரித்து தன் நடுநிலையைக் காட்டிய ஞானம் ஆசிரியர் அதைவிட வரவேற்கத் தக்கவர். அஷ்ரப் சிஹாப்தீனின் "சப்பாத்துக்குள் ஒரு சலவைக் கல் நல்லதொரு விவரணம். எழுத்துலகில் மட்டுமல்ல நிறைய ஏகாம்பரங்களை தினசரிகளில் தினமும் காண்கிறேன். சர்வதேச எழுத்தாளர் மாநாட்டின் புகைப்படங்களில் இருப்போரின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

பாணந்துறை, எம். பி. எம். நிஸ்வான்

★★★★★★

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் 2011 கலந்து கொள்ள முடியாமற் போனதை இட்டு கைசேதப் படுகின்றேன். அந்த மனக் குறையை "ஞானம்" சஞ்சிகை நேரில் பார்த்தது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தியது. நிகழ்ச்சித் தொகுப்புப் படங்கள் நிகழ்வுகளின் சாராம்சம் போன்ற அம்சங்கள் மாநாட்டின் வெற்றிக்கும் ஓர் எடுத்துக் காட்டாவே அமைந்திருந்தன.

சாரணா கையூம்

★★★★★★




**வண்ணாத்திக்குளம்**
**நாவலின் களம் இலங்கை. இதன் சமூக அரசியல், காதல், குடும்பம் சார்ந்த பார்வையில் வெளியிடப்பட்ட யதார்த்த சித்தரிப்பு.**

**விலை ரூபா 350/=**

**ஜோர்ஜ் ஓர்வெல் எழுதிய விலங்குப் பண்ணை நாவல் உலகப்பிரசித்தி பெற்றது. இந்நாவலைத் தமிழில் தருபவர் 'நல்லைக்குமரன்' குமாரசாமி.**

**விலை ரூபா 250/=**



**கிடைக்கும் இடங்கள் :**

**குமரன் புத்தக இல்லம்**
B3-G3, Ramya Place, Colombo 10.
Tel: 242 1388, 011 309 7608.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல. 202 செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொ. பே. 2422321. தொ. நகல் 2337313.


## 2011 ஜனவரி முதல் 'ஞானம்' புதிய சந்தா விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | **ரூபா 65/=** |
| ஆண்டுச் சந்தா | : | **ரூபா 1000/=** |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | **ரூபா 5000/=** |
| ஆயுள் சந்தா | : | **ரூபா 20000/=** |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் *வெள்ளவத்தை* தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

***இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி:-***

உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில்
T. Gnanasekaran, Hatton National Bank - Wellawatte
நடைமுறைக் கணக்கு இலக்கம் – 009010344631 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

**வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்ப :**
Swift Code : HBLILKLX

***அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :***
T. Gnanasekaran
Gnanam Branch Office
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | **ரூபா 10000/=** |
| முன் உள் அட்டை | : | **ரூபா 8000/=** |
| பின் உள் அட்டை | : | **ரூபா 8000/=** |
| உள் முழுப்பக்கம் | : | **ரூபா 5000/=** |
| உள் அரைப்பக்கம் | : | **ரூபா 3000/=** |

| *வெளிநாடு* | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| **Australia (AU$)** | **40** | **80** | **110** |
| **Europe (€)** | **30** | **60** | **80** |
| **India (Indian Rs.₹** | **500** | **950** | **1400** |
| **Malaysia (RM)** | **60** | **120** | **170** |
| **Canada ($)** | **40** | **80** | **110** |
| **UK (£)** | **25** | **50** | **70** |
| **Other (US $)** | **35** | **70** | **100** |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருபவர்களுக்கு ஒரு வருடம் 'ஞானம்' இனாமாக அனுப்பப்படும்.

## திருமண சேவை

**15 வருடத் திருமணசேவை நிறைவினை முன்னிட்டு**
**வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு!**



❑ **விவரம்**
விவரங்களுக்குத் தனிமனித நிறுவனர், ''சுய தெரிவுமுறை முன்னோடி'' மூத்த, புகழ்பூத்த, சர்வதேச, சகலருக்குமான திருமண ஆலோசகர் / ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ தயங்காது தொடர்பு கொள்ளலாம்!

❑ **தொலைபேசி**
2360488 / 2360694 / 4873929

❑ **சந்திப்பு**
முன்னேற்பாட்டு ஒழுங்குமுறை

❑ **முகவரி**
8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு எதிராகவுள்ள 33ஆம் ஒழுங்கை ஊடாக) 55ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 06

**துரித - சுலப மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே ! மகோன்னத மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே! துரித - சுலப மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே !**


## 'ஞானம்' சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்

- பூபாலசிங்கம் புத்தகசாலை - 202, 340, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
- கா. தவபாலச்சந்திரன் - பேராதனை. தொலைபேசி: 077 9268808
- பூபாலசிங்கம் புத்தகசாலை - 309A, 2/3 காலி வீதி, வெள்ளவத்தை.
- பூபாலசிங்கம் புத்தகசாலை - 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- புக் லாப் - யாழ். பல்கலைக்கழக வளாக அருகாமை, யாழ்ப்பாணம்.
- துர்க்கா - சுன்னாகம்.
- ப. நோ. கூ. சங்கம் - கரவெட்டி, நெல்லியடி.
- லங்கா சென்றல் புத்தகசாலை - 84, கொழும்பு வீதி, கண்டி.
- மாரிமுத்து சிவகுமார் - ஸ்ரீகிருஷ்ணாஸ், இல 86, சைட் வீதி, ஹட்டன்.

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/28/News/2011

*With Best Compliments from*

**Luckyland**

உலக சாதனை எங்கள் பாரம்பரியம்
பிஸ்கட்டிலும் தான் !




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740
Email: luckyland@sltnet.lk

இச்சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களால் இல.48 B புளூமெண்டால் வீதி, கொழும்பு 13. யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.